1278

லாங்மன்ஸ்

இந்தியா தேச வரலாறு

இரண்டாம் புஸ்தகம்

14 MAR 1941
MADRAS

M. K. சுந்தர வரதாச்சாரியர்

லாங்மன்ஸ், க்ரீன் அண்ட் கம்பனி லிமிடெட்

இந்தியா தேச வரலாறு

இரண்டாம் புஸ்தகம்

[illegible]
14 MAR 1941
MADRAS

[கல்வி இலாகா அதிகாரிகள் புதிதாக வெளியிட்டுள்ள விஷய ஜாபிதாவை முழுவதும் தழுவியது]

954

M. K. சுந்தர வரதாச்சாரியர், B.A., L.T.,

WITH THE COMPLIMENTS OF
Messrs. LONGMANS, GREEN & Co., Ltd.

லாங்மன்ஸ், க்ரீன் அண்ட் கம்பனி லிமிடெட்
36-A, மௌன்ட் ரோட், மதருாஸ்
பம்பாய், கல்கத்தா, லண்டன்
1941

All Rights Reserved

Printed at Everymans Press, Madras, on paper made by the Titaghur Mills, Bengal.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 MAR 1941
MADRAS

முன்னுரை

தமிழ்நாட்டுச் சிறார்களுக்கென்று ஆசிரியர்கள் எழுதியுள்ள பல சரித்திர புஸ்தகங்கள் இப்பொழுது வெளிவந்துள்ளன. அதனால் சிலர் புதிதாக இன்னமும் சரித்திர புஸ்தகங்களை எழுதி வெளியிடவும் இடமுண்டோ என்று ஐயமுறலாம். எல்லாச் சரித்திர நூல்களிலும் காணப்படும் விஷயம் ஒன்றேயாம். அதை மாற்ற எவராலும் இயலாது. சண்டையைச் சமாதானம் என்றும், வெற்றியைத் தோல்வி என்றும், உயர்வைத் தாழ்வு என்றும், நன்மையைத் தீமை என்றும் மாற்றி எழுதுவது என்பது முடியாத காரியம். விஷயங்கள் எல்லாவற்றிலும் ஒத்திருப்பினும், அவற்றை எடுத்துச் சொல்லும் வகையிலும், அவற்றைப் பெருக்கவேண்டிய இடங்களில் பெருக்கியும், சுருக்கவேண்டிய இடங்களில் சுருக்கியும் அமைப்பதிலும், அவற்றை நடுவு நிலைமையுடன் நமது சிறார்கள் அறியவேண்டியபடி எடுத்துக்காட்டுவதிலும், உபயோகிக்கும் தெளிவான, எளிய நடையிலும் அவை பேதப்பட்டிருக்கும்.

கல்வி இலாகா அதிகாரிகள் புதிதாக வெளியிட்டிருக்கும் விஷய ஜாபிதாவிற்கிணங்கவும், இருபத்தைந்து வருஷகாலம் பள்ளியில் கல்விகற்கும் சிறார்களுக்குச் சரித்திரபோதனை செய்து வந்ததனின்றும் உண்டான அனுபவத்தை ஒட்டியும், இந்திய சரித்திரத்தை இந்தியர்கள் கற்கவேண்டிய முறைப்படியும் இச்சிறு புஸ்தகம் எழுதப்பட்டுள்ளது. இது, இதைப் படிப்பவர்கள் சரித்திரத்தை உள்ளபடி படிப்பதனால் பெறக்கூடிய பயனைப் பெறவேண்டும் என்னும் நோக்கத்துடனும் அமைந்துள்ளது.

இச்சிறுநூல் பல சரித்திர ஆசிரியர்களின் அபிப்பிராயங்களையும், சரித்திர ஆராய்ச்சியில் புதிது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு வந்துள்ள உண்மைகளையும் பொருந்தியிருக்கின்றது. இதைப் படிக்கும் சிறுவர், சிறுமிகள் சரித்திரப்படிப்பில் மேன்மேலும் ஊக்கங்கொள்ளுவார்கள் என்பது ஆசிரியன் துணிபு.

இங்ஙனம்,

ஆசிரியன்

பொருளடக்கம்

அத்தியாயம்		பக்கம்
1.	முகம்மதியர்கள்	1
2.	கஜினி மஹ்மூது	4
3.	முகம்மது கோரி	7
4.	அடிமை அரசர்கள்	9
5.	அல்லா உத்தீன் கில்ஜி	11
6.	ஜூனு முகம்மது துக்ளக்	14
7.	பஹ்மனி ராஜ்யம்	17
8.	சித்தூர் ராஜபுத்திரர்கள்	21
9.	விஜயநகர ஸாம்ராஜ்யம்	23
10.	முகலாய பாபர்	27
11.	ஹுமாயூன்	31
12.	அக்பர் மஹா சக்ரவர்த்தி	34
13.	ஜஹாங்கீர்	41
14.	ஷாஜஹான்	43
15.	ஔரங்கஜீப்	48
16.	முகலாய ராஜ்யத்தின் அழிவு	52
17.	மஹாராஷ்டிரர் சரித்திரம்—சிவாஜி	57
18.	பீஷ்வாக்களும், மஹாராஷ்டிர அதிகாரம் பெருகிக் குன்றியதும்	61
19.	ஸீக்கர்கள்	64
20.	ஐரோப்பிய வர்த்தகர்கள்	67
21.	பிரெஞ்சிய ஆங்கிலேயப் போட்டியும், ஆங்கிலேயரின் வெற்றியும்	74
22.	ஆங்கிலேயருக்கு வங்காளம் கிடைத்தவாறு ...	84
23.	ஆங்கிலேயரின் அதிகாரப் பெருக்கம்	90
24.	லார்ட் க்ளைவின் சீர்திருத்தங்கள்	95
25.	வாரன் ஹேஸ்டிங்ஸ் (கவர்னர்)	98
26.	வாரன் ஹேஸ்டிங்ஸ் (கவர்னர்-ஜெனரல்) ...	103
27.	லார்ட் காரன்வாலிஸ்	112
28.	ஸர் ஜான் ஷோர்	116
29.	லார்ட் வெல்லெஸ்லி	119
30.	மஹாராஷ்டிர யுத்தங்கள்	123
31.	லார்ட் மின்டோவும், ரஞ்சித் ஸிங்கும்	127
32.	லார்ட் ஹேஸ்டிங்ஸ்	130

1. முகம்மதியர்கள்

இந்தியாவுக்கு மேற்கில் அரேபியா என்று ஒரு நாடு இருக்கின்றது அல்லவா? அந்நாட்டின் தலை நகரம் மேக்கா என்னும் புண்ணிய ஸ்தலம். அந்நாட்டுக் குடிகளுக்கு அரபியர் என்று பெயர். அவர்கள் முரட்டுக் குணங்களிற் பழகியும், பல தெய்வங்களை வணங்கியும் வந்தார்கள். அவர்கள் ஆடுமாடுகளை மேய்த்து ஜீவனஞ் செய்துவந்தார்கள்.



கி. பி. 570-ல், மெக்காவில் அப்துல்லா என்னும் பெரியார்க்கு அமீனா என்பவர் வயிற்றில் ஒரு மகான் அவதரித்தார். அவரே உலகம் கொண்டாடும் முகம்மது என்பவர். முகம்மது பிறப்பதற்கு முன்னமேயே அவர் தந்தையார் காலஞ்சென்றார். அவர் பிறந்த சில வருஷங்களுக்குள் அவருடைய தாயும் இறந்துபோனார். அதனால், முகம்மது தமது தந்தையின் சகோதரருடைய வீட்டில் வளர்ந்து வந்தார்.

முகம்மதுவுக்குச் சுமார் இருபத்தைந்து வயதானபொழுது, அவர் தெய்வத்தன்மை பொருந்திய கடிஜா என்னும் ஓர் உத்தமியின் வேலையில் அமர்ந்தார். கடிஜா என்பவர் குணத்திலும், செல்வத்திலும் உயர்ந்திருந்த ஒரு கைம்பெண். கடிஜா அம்மையார் அவருடைய நற்குண நற்செய்கைகளைக் கண்டு வியந்தார். அவருக்கு முகம்மதுவின்மீது மனம் நாடவும், அவர் அவரை மணஞ் செய்து கொண்டார்.

முகம்மது, கடவுள் ஒருவரே என்றும், அவரையே அனைவரும் தொழவேண்டும் என்றும், அவர் சமுகத்தில் எல்லோரும் சமானர் என்றும், ஜனங்களுக்குப் போதித்தார். மனிதர்களுக்கு அன்பும், தயையும் முக்கியமானவை என்றும், எவரும் மதுபானஞ் செய்யக்கூடாது என்றும்கூட அவர் உபதேசம் செய்தார். ஒவ்வொருவரும் தினமும் ஐந்து முறை கடவுளை வணங்கவேண்டும் எனவும் அவர் போதித்து வந்தார். அந்தப் போதனைகள் அடங்கிய மதமே இஸ்லாம் எனப்படுவது. இஸ்லாமைக் கண்டு பிடித்த முகம்மது அப்பொழுது ஒரு நபியானார்.

முகம்மது செய்துவந்த உபதேசம் அரபியருடைய பழக்க வழக்கங்களுக்கு முற்றும் விரோதமாக இருந்தது. அதனால், அவர்கள் அவரைப் பகைத்தார்கள். அவர்கள் அவரைக் கொல்லவும் முயன்றார்கள். ஆதலால், கி. பி. 622-ல் முகம்மது மெக்காவிலிருந்து மெடீனாவுக்குத் தப்பியோடிப்போய்விட்டார். முகம்மதியருடைய சகாப்தம் அன்று முதலாகக் கணக்கிடப்பட்டு வருகின்றது. அதற்கு ஹிஜிரா என்று பெயர். ஹிஜிரா என்றால் ஓட்டம் என்று பொருள்.

மெடீனாக் குடிகள் முகம்மதுவை நல்வரவேற்று மிகவும் கொண்டாடினார்கள். அவர்கள் அவருடைய உபதேசங்களைக் கேட்டு அவற்றின்படி நடந்துவரவும் தலைப்பட்டார்கள். அல்லாமலும், அவர்கள் முகம்மதுவைத் தங்கள் மெடீனாவுக்குத் தலைவராகவும் நியமித்துக்கொண்டார்கள்.

கி. பி. 630-ல், முகம்மது ஒரு பெருஞ் சேனையைத் திரட்டிக் கொண்டு மெக்காவின்மீது படையெடுத்து வந்து, அதைத் தமது

வசப்படுத்திக்கொண்டார். நாளடைவில் முகம்மதுவினுடைய அதிகாரம் பெருகி வந்தது. இரண்டு வருஷங்களுக்குள் அரேபியாவின் பெரும் பாகமும் அவருடைய ஆட்சியில் அடங்கிவிட்டது. கி. பி. 632-ல், முகம்மது நபி இறந்துபோனார். ஆயினும், அவருடைய இஸ்லாம் மதம் கொஞ்சங் கொஞ்சமாகப் பரவி வந்தது. சுமார் நூறு வருஷங்களுக்குள் அந்த மதம் ஸ்பெயின் தேசத்திலிருந்து பஞ்சாப் நாடு வரையில் பரவிவிட்டது.

கி. பி. 711-ல், தாஹிர் என்பவன் ஸிந்து நாட்டை ஆண்டிருந்தான். அப்போது அந்நாட்டினர் சிலர் ஸிம்மளநாட்டிலிருந்து பாரஸிகக் கவர்னருக்குக் காணிக்கைகள் கொண்டுசென்ற கப்பல்களை வழிபரித்துக் கொள்ளையிட்டனர். அதனால், முகம்மது பின் காஸிம் என்பவர் ஸிந்து நாட்டின்மீது படையெடுத்து வந்து, அதைத் தமதாக்கிக்கொண்டார். அப்பொழுது வடமேற்கு நாடுகளில் ஆட்சி பெற்றிருந்த பல ஹிந்து அரசர்களும் தங்களுக்குள் சண்டையிட்டு வந்தார்கள். அதனால், அவர்கள் முகம்மதியர்களை வரவொட்டாமல் தடுக்க யாதொரு முயற்சியும் செய்யவில்லை. அன்றியும், அவர்களிற் சிலர் முகம்மதியர்களை மிகுந்த சந்தோஷத்துடன் வரவேற்றார்கள். காஸிமின் படையெழுச்சிக்குப் பின்னர், சுமார் இருநூறு வருஷங்கள் வரையில், அரபியர்கள் நமது நாட்டின்மீது படையெடுத்து வரவில்லை.

நமது நாடு வியவசாயத்திற்கும், வியாபாரத்திற்கும் பொருந்தியதாக அமைந்திருந்தது. அரேபியா, பாரஸிகம், ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகளோ மனித வாழ்க்கைக்குச் சிறிதும் பொருந்தாமல் இருந்தன. ஆகையினாலேதான் முகம்மதியர்கள் இந்தியாவின்மீது படையெடுத்து வரலாயினர். அன்றியும், அவர்கள் தாங்கள் புதிதாகக் கைக்கொண்ட இஸ்லாம் மதத்தில் வைத்திருந்த அன்பும், ஊக்கமும் அவர்களை அதைப் பரப்புமாறு தூண்டிற்று. அவர்கள் இந்நாட்டின்மீது படையெடுத்து வருவதற்கு வடமேற்கிலிருந்த கணவாய்கள் அனுகூலமாக இருந்தன. நாளடைவில் துருக்கியர்கள் அரபியரை வென்று, அவர்களுடைய அதிகாரத்தைக் கைக்கொண்டனர். இவர்கள் நமது நாட்டின்மீது படையெடுத்து வந்து, அதைக் கொஞ்சங் கொஞ்சமாக வென்று, அரசாட்சி

செய்யவும் தலைப்பட்டார்கள். 10-வது நூற்றுண்டின் கடைசியில், அரபியர்களுடைய அதிகாரம் க்ஷீணிக்கலாயிற்று. அப்பொழுது அல்ப்டிஜின் என்னும் ஒரு துருக்கிய அடிமை ஒரு சிறு படையைத் துணைக்கொண்டு கஜினிப்பட்டணத்தை எதிர்த்துப் பிடித்துக் கொண்டான். அவனுக்குப் பிறகு அவனுடைய அடிமையான ஸபக்டிஜின் என்பவன் கி. பி. 976-ல், கஜினியில் அரசனுனன். அவன் இருமுறை இந்தியாவின்மீது படையெடுத்து வந்தான். தன்னை எதிர்த்துச் சண்டையிட்ட ராஜபுத்திர அரசர்களை வென்று, பேஷாவர் நாடு முழுவதையும் தனதாக்கிக் கொண்டான். கி. பி. 997-ல், அவன் இறந்துவிடவும் பேஷாவர் சுயாதீனத்தை அடைந்து விட்டது. அப்பொழுது அவன் மைந்தரான கஜினி மஹ்மூது அரசரானுர்.

பயிற்சிகள்

1. முகம்மது நபி யார்? அவர் எப்பொழுது, எங்கே அவதரித்தார்?
2. இஸ்லாமின் முக்கியக் கொள்கைகள் யாவை?
3. அரபியர் ஸிந்து நாட்டின்மீது படையெடுப்பானேன்?
4. பேஷாவரை முதன்முதல் கைப்பற்றிய துருக்கிய அரசன் யார்? எப்போது, எவ்வாறு கைப்பற்றினுன்?

2. கஜினி மஹ்மூது
(கி. பி. 997—கி. பி. 1030)

கஜினி மஹ்மூது ஒரு சிறந்த போர்வீரர். அவருக்குச் சண்டையில் பிரியம் அதிகம். அவர் தைரியமும், விடாமுயற்சியும் உடையவர். அவர் மிகுந்த பொருளாசை கொண்டவர். அவர் நமது நாட்டின்மீது பதினேழு முறை படையெடுத்து வந்தார்.

மஹ்மூது கி. பி. 1001-ல், ஒரு முறையும், கி. பி. 1008-ல், மறு முறையும் பேஷாவர் நாட்டின்மீது படையெடுத்து வந்தார். பேஷாவரில் நடந்த முதல் சண்டையில் அவர் ஜயபாலரையும் அவருக்குத் துணையாக வந்த அரசரையும் வென்ருர். ஜயபாலர் சிறைபிடிக்கப்பட்டார். தமக்கு நேர்ந்த அவமானத்தைப் பொறுக்க

முடியாமல் ஜயபாலர் தீயில் விழுந்து உயிர் நீத்தார். இரண்டாம் பேஷாவர் சண்டையில் மஹ்மூது ஜயபாலரின் மைந்தரான அனந்த பாலரையும் பஞ்சாப் சிற்றரசர்கள் பலரையும் எதிர்த்து நின்றார். இந்தச் சண்டையில் காக்கர்கள் ஹிந்துக்களுக்கு உதவிசெய்தனர். இவர்கள் பராக்கிரமத்தைக் கண்டு அஞ்சிய மஹ்மூது திரும்பிச் சென்றுவிடத் தீர்மானித்தார். அந்த சமயத்தில் அனந்தபாலர் யுத்த முனையிலிருந்து ஓடிப்போய்விட்டார் என்ற ஒரு பொய் வதந்தி பிறந்தது. அதைக்கேட்ட ஹிந்துக்கள் சேனை முதுகுகாட்டி யோட ஆரம்பித்தது. இது முகம்மதியருக்குப் பெரிய அனுகூலம் ஆயிற்று. ஓடிவிடக் கருதியிருந்த முகம்மதியர்கள் ஆண்மையுடன் சண்டையிட்டு ஜயம்பெற்றனர்.

மஹ்மூது ஏராளமான திரவியத்துடன் கஜினிக்குச் சென்றார். பின்னர், அவர் நாகர்கோட்டையையும், (வட) மதுரையையும், கன்னோசியையும் எதிர்த்துச் சண்டையிட்டுக் கைப்பற்றிக்கொண்டார். அவர் அந்நகரங்களிலிருந்த கோயில்களை யெல்லாம் இடித்து, விக்ரஹங்களை யெல்லாம் உடைத்துவிட்டார். அவர் அங்குள்ள பொருள்களைக் கொள்ளைகொண்டு கஜினியிற் கொண்டு சேர்த்தார். அதைப் பார்ப்பதற்கு ஜனங்கள் நாலாப் பக்கங்களிலிருந்தும் திரண்டுருண்டு வந்தார்கள் என்று சொல்லப்பட்டுளது. கி. பி. 1022-ல், லாகூரும், குவாலியரும் மஹ்மூதின் வசமாயின.

அப்பொழுது வடமேற்கில் காந்தாரம், பஞ்சாப், டில்லி, கன்னோசி (கானூஜ்), மகதம், மாளவம், குவாலியர் முதலிய நாடுகளை ஹிந்து சிற்றரசர்கள் ஆண்டிருந்தனர். இவர்கள் மனம் வேறுபட்டுத் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டு வந்தார்கள். இவர்கள் தங்கள் சச்சரவுகளை நீத்து ஒன்று சேர்ந்து மஹ்மூதைத் தடுத்து நாட்டைக் காத்திருக்கக்கூடும். ஆனால் இவர்கள் ஒருவர் மீது ஒருவர் அழுக்காறும், பகைமையும் கொண்டிருந்ததனால், ஒன்றுபட இயலாமற்போயிற்று. இந்நாட்டின் சீர்கேட்டிற்கு இத்தகைய ஒற்றுமையின்மையே இன்றும் காரணமாக இருந்து வருகின்றது.

கி. பி. 1024-ல், மஹ்மூது கூர்ஜர நாட்டிலுள்ள ஸோமநாதபுரம் என்னும் நகரைக் கொள்ளையடிக்க வெண்ணி ஒரு பெரும் படை

யுடன் வந்து சேர்ந்தார். அவ்வூர்க் குடிகள், சில அயல் நாட்டுச் சிற்றரசர்களின் துணையைக்கொண்டு, மிகுந்த வீராவேசத்துடன் சண்டையிட்டார்கள். ஆயினும், முகம்மதியர்கள் அவர்களை வென்று ஸோமநாத ஸ்வாமியின் கோயிலுக்குள் நுழைந்துவிட்டார்கள். ஹிந்துக்கள் மஹ்மூதுக்கு ஏராளமான பணத்தைத் தருவதாகச் சொல்லி, அவரைத் தங்கள் விக்ரஹத்தைத் தீண்டாதிருக்கும்படி வேண்டினார்கள். அவர், தாம் விக்ரஹத்தை உடைப்பவரேயன்றி, விற்பவர் அல்லர் என்று சொல்லி, அக்கோயிலிலிருந்த லிங்கத்தை உடைத்துக் கீழே தள்ளிவிட்டார். அவர் தமக்கு அங்குக் கிடைத்த பொருளை யெல்லாம் திரட்டி யெடுத்துக்கொண்டு தம்மூருக்குத் திரும்பிச் சென்றுவிட்டார். கி. பி. 1030-ல், அவர் இறந்துபோனார். மஹ்மூது சாகுந் தருணத்தில் தாம் சேர்த்துவைத்த பொருளை யெல்லாம் தம்முன் குவித்து வைக்கச் செய்து அதைப் பார்த்து விசனித்த வண்ணமே உயிர்துறந்தார்.

மஹ்மூது கல்வியையும், கற்றோரையும் பெரிதும் பேணி வந்தார். அவருடைய சம்ஸ்தானத்தில் அல்பிரூனி என்னும் வான சாஸ்திரியும், பாரபி என்னும் வேதாந்த சாஸ்திரியும், பருக்கி என்னும் கவியும், இன்னும் பலரும் இருந்தார்கள். அவர்களின் பொருட்டு அவர் வருஷத்தில் 22 லக்ஷம் ரூபாய் செலவு செய்து வந்தார். அவர் கஜினியில் ஒரு சர்வ கலாசாலையையும், ஒரு புஸ்தக சாலையையும், ஒரு பொருட்காட்சி சாலையையும் உண்டாக்கினார். அவர் அங்கே ஓர் அழகிய மசூதியையும் கட்டுவித்தார். அவர் ராஜரிகத்தில் கெட்டிக்காரர் அல்லர். அவர் நிலைவரமான துரைத்தன அமைப்பை உண்டாக்கவில்லை. ஆயினும், அவர் நடுவு நிலைமையுடன் நியாயம் நடத்திவந்தார் என்பதை விளக்கப் பல கதைகள் வழங்கிவந்துள்ளன. கஜினிக்குடிகள் அவரை நீதிமான் என்றும், கொடையாளர் என்றும் சிறக்கக் கற்றவர் என்றும் கொண்டாடினார்கள்.

அவருக்குப் பின்பு அவருடைய ராஜ்யம் சிதைவுபடலாயிற்று. கோரி என்னும் வேறு ஒரு திருக்கிய வம்சத்தினர் அவருடைய ராஜ்யம் முழுவதையும் வென்றுவிட்டார்கள்.

பயிற்சிகள்

1. பெஷாவரில் இருமுறை சண்டை நடந்தது எப்பொழுது, ஏன், யார் யாருக்கு? அதன் முடிவு என்ன?

2. கஜினி மஹ்மூது இந்தியாவின்மீது படையெடுப்பானேன்?

3. அவருடைய கடைசி படையெழுச்சியைப் பற்றிச் சிறிது கூறுக.

4. தான் கவர்ந்து சென்ற அளவற்ற செல்வத்தைக் கஜினி மஹ்மூது எவ்வாறு செலவிட்டார்?

3. முகம்மது கோரி

(கி. பி. 1194—கி. பி. 1206)

முகம்மது கோரி தாமும் ஏராளமான பொருளைச் சம்பாதிக்க வேண்டுமென்று விரும்பினர். அவருக்கு இந்தியாவில் தாம் ஒரு ராஜ்யத்தை உண்டாக்கி ஆளவேண்டும் என்னும் ஆசையும் இருந்தது. அதனல், அவரும் இந்தியாவின்மீது பன்முறை படையெடுத்து வந்தார். அப்பொழுது வட இந்தியாவில் ஆட்சி பெற்றிருந்த சிற்றரசர்களுள் ஜயசந்திரர் என்னும் கன்னேசி நாட்டரசரும், பிருதிவி என்னும் டில்லி-அஜ்மீர் அரசருமே முதன்மையானவர்கள்.

ஜயசந்திரர் பிருதிவியின் பெருமையையும், பராக்கிரமத்தையுங் கண்டு அவர்மீது மிகுந்த பொருமைகொண்டிருந்தார். பிருதிவி ஜயசந்திரரின் மகளான ராணிஸம்யுக்தையை சுயம்வர மண்டபத்தினின்றும் தூக்கிச் சென்று மணஞ்செய்துகொண்டார். அதனல் ஜயசந்திரருக்குப் பிருதிவியின்மீது அடங்காக் கோபம் உண்டாயிற்று. அவர் பிருதிவியைத் தாம் எவ்விதத்திலாயினும் தண்டிக்க வேண்டுமென்று தீர்மானித்தார். அவர் கோரியரசரைத் தமக்குத் துணை வரும்படி கேட்கவும், முகம்மதிய மன்னருக்கு அவ்வேண்டுகோள், 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டது' போலாயிற்று.

பிருதிவிக்கும் கோரிக்கும் ஸ்தானேசுவரம் என்னுமிடத்தில் இருமுறை சண்டை நடந்தது. கி. பி. 1191-ல், நடந்த முதற் சண்டையில் கோரி தோற்றுப்போனர். ஆனல், கி. பி. 1193-ல்,

நடந்த இரண்டாவது சண்டையில் பிருதிவி யுத்த முனையில் கொலை யுண்டுபோனார். கி. பி. 1194-ல், கோரியரசர் ஜயசந்திரர்மீதும் சண்டை தொடுத்து அவரையும் வென்று, அவருடைய நாட்டையும் கைப்பற்றிக்கொண்டுவிட்டார். நாட்டை இழந்த ஜயசந்திரர் கங்கையில் வீழ்ந்து மாண்டார். தன்வினை தன்னைச்சுட்டது. பின்பு கோரி அரசர் செல்வம் நிறைந்த காசிப் பட்டணத்தைக் கொள்ளை யிட்டார். தாம் இந்தியாவில் சம்பாதித்த செல்வத்தை 1200 ஒட்டகங்களின்மீது ஏற்றிச் சென்றார். கோரி ஹிந்துஸ்தானத்தின் ஒரு பெரும் பாகத்தை வென்று அதை ஆள்வதற்குத் தமது சேனாதிபதியான குத்புதீன் என்பவரை நியமித்தார். குத்புதீன் தெற்கில் கூர்ஜாம் வரையிலுள்ள நாடுகளையும், கிழக்கில் சேதி வரையிலான தேசங்களையும் ராஜபுத்திரர்களிடமிருந்து வென்று கொண்டார். கோரி மன்னருக்குப் பக்தியார் கில்ஜி என்ற வேறொரு தளகர்த்தரும் இருந்தார். இவர் ஹிந்துஸ்தானத்தின் கீழ்ப்பாகத்திலிருந்த மகதராஜ்யத்தை வென்றார். நாளடைவில் மாளவமும் அஸ்ஸாமும் ஒழிந்த மற்றைய ஹிந்துஸ்தானம் முழுவதும் முகம்மதியர் வசப்பட்டுவிட்டது. கி. பி. 1206-ல், முகம்மது கோரி கொலையுண்டு போனார்.

அவருக்குப் பிள்ளை யில்லாததனால், அவருடைய இந்திய ராஜ்யத்தை அவருடைய பிரதிநிதியாகவிருந்த குத்புதீன் தாமே சொந்தமாகப் பெற்று அரசு செலுத்தி வரலானார்.

பயிற்சிகள்

1. பிருதிவியுடன் முகம்மது கோரி போர் புரிவானேன்?
2. இருவருக்கும் நடந்த 2 சண்டைகளையும் விவரித்துக் கூறுக.
3. ஜயசந்திரர் யார்? அவர் கதி என்னவாயிற்று? ஏன்?
4. ராணி ஸம்யுக்தை ஏன் வந்துள்ளாள்?

4. அடிமை அரசர்கள்

(கி. பி. 1206—கி. பி. 1290)

குத்புதீன் அரசரானபொழுது, டில்லியைத் தமது ராஜ்யத்தின் தலைநகரமாக்கிக்கொண்டார். அவர் முதலில் கோரியரசரின் அடிமையாக இருந்ததனால், அவருக்கும், அவருடைய வம்சத்தில் தோன்றி, அவருக்குப் பின்பு பட்டத்துக்கு வந்த டில்லி சுல்தான்களுக்கும் அடிமை அரசர்கள் என்றும், மாமலூக் சுல்தான்கள் என்றும் பெயர்கள் வந்தன.

குத்புதீன் நியாயம் தவறாது செங்கோல் செலுத்தி வந்தார். அவர் ஆட்சியில் ஓநாயும் ஆட்டுக்குட்டியும் ஒரே துறையில் தண்ணீர் குடித்தன என்று சொல்லப்பட்டுள்ளது. அவருடைய ஆட்சியில் நாட்டில் சமாதானம் குடிகொண்டிருந்தது. குத்புதீன் தைரியமும், திறமையும் உடையவர். அவர் ஈகையில் கர்ணன் போன்றவர். ஆகையினாலேதான் அவருக்கு ஐபெக் எனப் பெயர் வந்துள்ளது. ஐபெக் என்பதற்கு லக்ஷக் கணக்கில் கொடுப்பவர் என்று பொருள். அவர் டில்லியில் ஒரு பெரிய மசூதியைக் கட்டுவித்தார். டில்லிக்கருகாமையிலுள்ள குத்ப்மினார் என்னும் ஸ்தூபியும் அவராலேதான் கட்டப்பட்டது என்பது சிலர் கொண்டுள்ள அபிப்பிராயம். அது சுமார் 250 அடி உயரமுள்ளது. கி. பி. 1210-ல், குத்புதீன் போலோ விளையாடும்பொழுது குதிரையினின்றுங் கீழே விழுந்து இறந்துபோனார்.



குத்ப்மினார்

குத்புதீனுக்குப் பிறகு அவருடைய மருமகரான இல்டுட்மிஷ் சுல்தானானார். இவர் ஸிந்து நாட்டை வென்று தமது ராஜ்யத்தோடு

சேர்த்துக்கொண்டார். இவர் வங்காளத்தை ஜயித்துத் தம் அதிகாரத்தில் அடக்கிக்கொண்டார். பின்னர் இவர் மாளவ நாட்டையும் வென்றுகொண்டார். அப்போது இவர் உஜ்ஜயினியில் இருந்த பெரிய கோயிலேயும், ஸரஸ்வதி புஸ்தக சாலையையும் இடித்துத் தகர்த்துவிட்டார். ஆயினும் இவர் சிறந்த நீதிமான். இவர் குடிகளின் குறைகளைத் தாமே நேரில் கேட்டறிந்து, அவற்றைப் போக்குவார். இவர் நாம் இப்பொழுது வழங்கிவரும் ரூபாயைப் பெரிதும் ஒத்த டங்கா என்னும் வெள்ளி நாணயத்தை வெளியிட்டார். அது 175 தானிய மணி எடையுள்ளது. இவர் அஜ்மீரில் ஒரு பெரிய மசூதியைக் கட்டுவித்தார்.

இவருக்குப் பின்னர் இவருடைய மகனும், மகளும் ஒருவர் பின் ஒருவராகப் பட்டத்துக்கு வந்தார்கள். சுல்தான் ரஜியா என்னும் அப்பெண்ணரசி செவ்வனே ஆட்சி செய்தாளெனினும், சீக்கிரத்திலேயே கொலையுண்டு போனாள். அவளுக்குப் பின்பு அவள் தம்பியும், மருமகனும் சிறிது காலம் ஆட்சி செய்துவந்தார்கள். அவர்களுக்கும் பிறகு பட்டத்துக்கு வந்த இல்டுட்மிஷின் குமாரரான நாஸர் உத்தீன் சிறந்த தெய்வ பக்தியுள்ளவர். அவர் உலகப் பற்றுக்களை ஒழித்துத் தமது காலத்தைத் தெய்வ வணக்கத்திலும், படிப்பிலும் கழித்து வந்தார். அதனால், அவர் ராஜ்ய பாரத்தை நடத்துவதற்குத் தமது மாமனை பால்பன் என்பவரை நியமித்துக்கொண்டார்.

கியாஸ் உத்தீன் பால்பன் பராக்கிரமம் மிக்க போர்வீரர். அவர் நாட்டில் கலகங்கள் செய்துவந்த பிரபுக்களை யடக்கியும், நாட்டின் மீது பன்முறை படையெடுத்து வந்த மங்கோலியரை வரவொட்டாமல் தடுத்தும் குடிகளுக்கு அமைதியை உண்டாக்கினார். அவர் தமது குடிகள் மதுபானம் செய்யக்கூடாது என்று திட்டஞ் செய்திருந்தார். அவர் கல்வியையும், கற்றோரையும் ஆதரித்தார். அவர் நாட்டின் பலவிடங்களிலும் நடக்கும் விஷயங்களை ஒற்றர்களைக் கொண்டு தெரிந்துகொண்டார். கி. பி. 1285-ல், மங்கோலியரோடு நடந்த சண்டையில் அவருடைய மகன் கொலையுண்டுபோனான். சீக்கிரத்திலேயே பால்பனும் புத்திர சோகத்தினால் இறந்துபோனார்.

அவர் காலஞ்சென்ற மூன்று வருஷங்களுக்குள் மாமலூக் வம்சம் தங்கள் அரசை இழந்துவிட்டது.

பால்பனின் பெயரனுன கைகுபாத் காலத்தில் நாட்டில் கலகங்கள் மூண்டுப் பெருகிப்போயின. அவன் சிற்றின்பங்களிலேயே மூழ்கிக் கிடந்ததனுல் குடிகள் அவனை வெறுத்தார்கள். அப்பொழுது, கில்ஜி என்னும் வம்சத்தைச் சேர்ந்த ஆப்கானியர்கள் ஜயம் பெற்று, ராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொண்டுவிட்டார்கள். கி. பி. 1290-ல், கைகுபாத் கொலையுண்டுபோனுன். இவனே அடிமை அரசர்களில் கடைசியவனுவான்.

பயிற்சிகள்

1. டில்லியில் ஆண்ட முதல் துருக்கிய அரசர் யார்?
2. அவர் வம்சத்துக்கு அடிமை அரசர்கள் எனப்பெயர் வருவானேன்?
3. குத்ப்மினுர் என்பது என்ன?
4. ஐபெக் என்ற பெயர் யாருக்கு வந்துளது? ஏன்?
5. நாஸர் உத்தீன் ஆட்சியில் பால்பன் அரசியலை நடத்துவானேன்?
6. பால்பன் செய்த நற்காரியங்கள் எவை?

5. அல்லா உத்தீன் கில்ஜி
(கி. பி. 1295—கி. பி. 1316)

மாமலூக் சுல்தான்களுக்குப் பின்பு டில்லியில் சிம்மாசனம் ஏறிய கில்ஜி அரசர்கள் முப்பது வருஷங்கள்தான் ஆட்சி பெற்றிருந்தார்கள். ஜலால் உத்தீன் என்பவர் அந்த வம்சத்தின் முதலரசர். அவர் கி. பி. 1290-ல், பட்டத்துக்கு வந்து, ஐந்து வருஷகாலம் ராஜ்யபாரம் நடத்தினுர். அவர் துஷ்டர்களைத் தண்டித்து அடக்காததனுல் நாட்டில் கலகங்கள் பெருகிப்போயின. கி. பி. 1296-ல், அவருடைய சகோதரரின் மகனுன அல்லா உத்தீன் அவரைக் கொன்றுவிட்டுத் தாம் அரசரானுர். அல்லா உத்தீன் தமது சிற்றப்பனுடைய பிள்ளைகளினுல் தமக்குத் தீங்குண்டாகாதபடி அவர்களைச் சிறையிலிட்டு, அவர்கள் கண்களையும் குத்திக் குருடாக்கிவிட்டார்.

ஜலால் உத்தீன் காலத்திலேயே, கி. பி. 1294-ல், அல்லா உத்தீன் தக்ஷிணத்தின்மீது படையெடுத்து வந்து, தேவகிரி யரசனை

வென்று சிறைப்படுத்தி, அளவிடவொண்ணாத பொருளைக் கவர்ந்து சென்றார். தக்ஷிணத்தின்மீது முதன் முதல் படையெடுத்து வந்த முகம்மதியர் அல்லா உத்தீனே யாவர்.

கி. பி. 1298-ல், அவர் தமது நாட்டின்மீது படையெடுத்து வந்த தார்த்தாரியரை வென்று துரத்திவிட்டார். அன்றியும், அவர் கூர்ஜரத்தை ஜயித்துத் தமதாக்கிக் கொண்டார். அவர் தாம் அடைந்த வெற்றிகளினால் கர்வம் கொண்டு, தாம் இரண்டாவது அலெக்ஸான்டர் என்று சொல்லிக்கொண்டார்.

கி. பி. 1303-ல், அவர் ராஜபுதனத்திலுள்ள சித்தூரை முற்றுகை செய்தார். அந்நாட்டரசரான பீமஸிங்க் என்பவரது மனைவியான பத்மினி என்பவள் ஒப்பில்லாத அழகு வாய்ந்தவள். அல்லா உத்தீன் அந்த கற்பிற்கரசியை எப்படியாவது தமது மனைவியாக்கிக்கொள்ள வேண்டுமென விரும்பினார். அதன் பொருட்டே அவர் சித்தூரை முற்றுகைசெய்தார்.

அல்லா உத்தீன் தம்மால் சித்தூரை ஜயிக்க முடியாது என்று கண்டார். அவர் தந்திரத்தினால் தமது எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள நினைத்துத் தாம் பீமஸிங்குடன் சமாதானஞ் செய்து கொள்வதாக நடித்தார். அவர் சூழ்ச்சியினால் பீமஸிங்கைச் சிறைப் படுத்தினார். பத்மினி தம்மை மணந்து கொண்டாலன்றித் தாம் அவரை விடுவதில்லை என்றார். அவர் செய்த மோசத்திற்குத் தக்க படி பத்மினியும் அவ்வரசரை ஏமாற்றியும், அவமானப்படுத்தியும் தனது கணவனைச் சிறை மீட்டாள். அதின் விவரங்களை நீங்கள் அறிவீர்கள். அல்லா உத்தீன் தமக்கு நேர்ந்த அவமானத்தைச் சகிக்கமுடியாதவராய்த் தம்மூருக்குத் திரும்பிச் சென்றுவிட்டார்.

பின்னர் அல்லா உத்தீன் தமது சேனாதிபதியான மாலிக்காபூர் என்பவனைத் தக்ஷிணத்தை வென்று வரும்படி அனுப்பினார். இவன் தெற்கில் ராமேசுவரம் வரையில் படையெடுத்துச் சென்றான். பல நாடுகளைக் கொள்ளைகொண்டு, ஏராளமான பொருளுடன் டில்லிக் குத் திரும்பிச் சென்றான். அப்பொழுது, அவன் கூர்ஜர மன்னனது அழகிய பெண்ணைச் சிறைப்பிடித்து வந்து, அல்லா உத்தீன் மக னுக்கு மணஞ் செய்வித்தான்.

அல்லா உத்தீன் தமது குடிகளுக்குச் சில கடுமையான சட்டங்களை ஏற்படுத்தினர். அவருடைய பிரபுக்கள் மதுபானஞ் செய்யலாகாது. அவர்கள் அரசாது உத்தரவின்றித் தங்கள் பெண், பிள்ளைகளுக்கு மணஞ் செய்விக்கக்கூடாது. அவர்கள் ஒருவர் வீட்டுக்கு ஒருவர் போகக்கூடாது. அவர்கள் ஒருவருக்கொருவர் விருந்து செய்து உபசரிக்கலாகாது. அவர்கள் சபைகூடிப் பேசக்கூடாது. ஹிந்துக்கள் ஆயுதங்களை எடுத்துச் செல்லலாகாது. இவர்கள் குதிரை யேறிச் சவாரி செய்யக்கூடாது.

குடிகள் சரக்குகளைத் துரைத்தனத்தார் ஏற்படுத்தியுள்ள விலைக்கே விற்கவும், வாங்கவும் வேண்டும். அவர்களுக்குச் சுதந்திரங்களே கிடையா என்னலாம். அதனல், அவர்களுக்கு அரசர் மீது அன்பும் கிடையாது. அவருடைய கடைசி காலத்தில் நாட்டில் கலகங்கள் உண்டாயின. அவ்வாருன தருணத்தில், கி. பி. 1316-ல், அவர் இறந்துபோனர்.

அவருக்குப் பிறகு பட்டத்துக்கு வந்த அவருடைய மகன் முபாரக் பயனற்றவன். அவன் சிற்றின்பப் பிரியன். அவன் திறமை சிறிதும் இல்லாதவன். கி. பி. 1321-ல், அவனுடைய நண்பனை குஸ்ருகான் அவனைக்கொன்றுவிட்டுத் தான் அரசனுனன். குஸ்ருகான் அவனினும் பயனற்றவன். நாட்டுக் குடிகள் அவன் இழைத்த தீமைகளைச் சகிக்கமுடியாமல் ஆங்காங்குக் கலகஞ் செய்தார்கள். அப்பொழுது, பஞ்சாபில் கவர்னாக விருந்த கியாஸ் உத்தீன் துக்ளக் என்பவர் குஸ்ருகானைக் கொன்றுவிட்டுக் குடிகள் விரும்பியபடியே தாம் அரசரானர்.

பயிற்சிகள்

1. ஜலால் உத்தீன் டில்லியில் சுல்தானனது எப்பொழுது? எவ்வாறு?
2. அல்லா உத்தீன் பட்டத்துக்கு வந்தது எங்ஙனம்? எப்பொழுது?
3. அல்லா உத்தீன் சித்தூரை முற்றுகை செய்வானேன்? அதன் பயன் என்ன?
4. மாலிக்காபூர் யார்? ஏன் வந்துளான்?
5. அல்லா உத்தீன் செய்த சட்டங்கள் யாவை?

6. ஜூனு முகம்மது துக்ளக்
(கி. பி. 1325—கி. பி. 1351)

கியாஸ் உத்தீன் வியவசாயிகளை ஆதரித்தும், வரிகளைக் குறைத்தும் ராஜ்யபாரம் செய்தார். அதனால், நாடு செழித்துக் குடிகளும் சுகமாக வாழ்ந்து வந்தார்கள். அவர் வங்காளத்தையும், தக்ஷிணத்தின் பெரும்பாகத்தையும் ஜயித்துத் தமது ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார். அவர் டில்லிக்கருகில் துக்ளகபாத் என்னும் நகரைக் கட்டினார். ஒரு கட்டிடம் இடிந்து மேலே விழுந்ததனால், அவர் கி. பி. 1325-ல், இறந்துபோனார்.

அவருக்குப் பின்பு அவருடைய மைந்தர் ஜூனு முகம்மது துக்ளக் பட்டத்துக்கு வந்து, கி. பி. 1351 வரையில் ஆண்டு வந்தார். அவர் சிறந்த கல்விமான். அவர் தர்க்கம், வேதாந்தம், வான சாஸ்திரம், கணிதம் முதலிய பல கலைகளை நன்றாகக் கற்றவர். அவர் கவி பாடுவதில் வல்லவர். அவர் தெய்வ பக்தியும், ஞாபக சக்தியும் பொருந்தியவர். ஆனால், அவர் மூர்க்கமும், பிடிவாதமும் உடையவர். அதனால்தான் அவர் சில கொடுஞ்செயல்களைச் செய்து குடிகளைத் துன்புறுத்தினார். அவருடைய ராஜ்யம் தெற்கில் கிருஷ்ணா நதிவரையில் பரவி யிருந்தது.

அவர் தமது ராஜ்யத்தின் தலைநகரம் அதன் மத்தியில் இருக்க வேண்டுமென விரும்பித் தேவகிரியைத் தமது நாட்டின் தலைநகராகத் தீர்மானித்தார். அவர் தமது டில்லிக் குடிகளைத் தங்களுடைய சகல பொருள்களுடனும் தேவகிரிக்குச் சென்று குடியேறும்படி ஆஜ்ஞாபித்தார். போகும் வழியிலேயே அவர்களிற் பலர் பசியினாலும், இளைப்பினாலும், பிணியினாலும் மாண்டுபோனார்கள். எஞ்சிய மிகச் சிலரே தேவகிரியை வந்தடைந்தார்கள். அங்கே இவர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் கிடைக்கவில்லை. அதனால் துக்ளக் இவர்களைத் திரும்பவும் டில்லிக்குச் சென்றுவிடும்படி கட்டளையிட்டார்.

அவர் சீனா, பாரஸிகம் முதலான அயல் நாடுகளை ஜயிக்க எண்ணங்கொண்டு, அதன்பொருட்டு ஒரு பெரும்படையைத் தயாரித்து அனுப்பினார். அது இமயமலையின் பனிக்கும், குளிருக்கும் ஆற்றாது மடிந்து போயிற்று.

அவர் தமது பணத்தை வீண் செலவுகள் செய்து வந்ததனால், அவருடைய பொக்கிஷம் வரண்டு போயிற்று. அதனால் அவர் வரிகளை உயர்த்தினார். அவர் தமது குடிகள் செம்பு நாணயங்களை வெள்ளிக்கு ஈடாக உபயோகிக்கவேண்டுமென்று உத்தரவு செய்தார். அவர் செய்த கொடுமைகளைச் சகிக்கமுடியாமல், அவருடைய குடிகளிற் பலர் நாட்டைவிட்டுக் காட்டிற்குச் சென்றுவிட்டார்கள். துக்ளக் இவர்களை வேட்டையாடிக் கொன்றார். இவ்வாறாக நாட்டில் வியவசாயமும், வாணிபமும் க்ஷீணித்துவிட்டன.

கடைசியில், அவருடைய குடிகள் நாட்டின் நாலாப் பக்கங்களிலும் கலகஞ் செய்தார்கள். அப்பொழுது அவருடைய ராஜ்யத்தில் அடங்கியிருந்த பலநாடுகள் தத்தம் சுயாதீனத்தைப் பெற்றுவிட்டன. அப்பொழுதுதான் தக்ஷிணத்தில் பஹ்மனி, விஜயநகர ராஜ்யங்கள் உண்டாயின. கி. பி. 1351-ல் துக்ளக் இறந்துபோனார். துக்ளக் ஓர் ஒப்பற்ற கற்றறிவுடன் ஆனார். அவருக்கு விவேகம் இருந்த போதிலும் அவர் அதைச் சரிவர உபயோகிக்க இயலாமற்போயிற்று.

அவருக்குப் பிறகு வந்த பிரோஜ்ஷா வெகு நல்லவர். அவர் வியவசாயத்திற்கும், போக்குவரவிற்கும் உதவுவனவான யமுனை வாய்க்காலையும், அதைப்போன்ற இன்னும் பலவற்றையும் வெட்டுவித்தார். அவர் வரிகளைக் குறைத்தும், தள்ளியும் உதவினார். அவர் வைத்தியசாலைகளையும், பள்ளிக்கூடங்களையும் ஏற்படுத்தினார். அவர் வயது முதிர்ந்த போர் வீரர்களுக்கும், சண்டையில் காயப்பட்டு உறுப்புக்களை இழந்துபோனவர்களுக்கும் உபகாரச் சம்பளம் கொடுத்து வந்தார். அவரது ஆட்சியில் குடிகள் சுகமாக வாழ்ந்து வந்தார்கள். அவர் கி. பி. 1388-ல், தமது 90-வது வயதில், காலஞ் சென்றார்.

அவருக்குப் பின்பு வந்த அரசர்கள் பயனற்றவர்கள். அப்பொழுது அவருடைய ராஜ்யம் சிதைவுண்டு அதனின்றும் பல சிறிய ராஜ்யங்கள் தோன்றின. தக்ஷிணத்தில் ஒரு கொடிய பஞ்சம் உண்டாகி, அதில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் மடிந்துபோனார்கள். இவ்வாறான சமயத்தில், கி. பி. 1398-ல், ஸாமர்க்கண்ட் அரசனான நொண்டித் தைமூர் இந்தியாவின்மீது படை யெடுத்து வந்தான். இவன் ஊர்களைச் சுட்டெரித்தும், குடிகளைக் கொன்றும், பயிர்களை

அழித்தும் நாட்டின் செல்வத்தை எல்லாம் கவர்ந்துகொண்டும், சொல்லரிய தீங்குகளைச் செய்தான்.

இவன் இந்தியாவை விட்டுப் போனபொழுது, கிஸிர்கான் என்பவனைப் பஞ்சாபுக்குக் கவர்னராக்கிச் சென்றான். கடைசி துக்ளக் அரசன் இறந்துபோனதும், இவன் தைமூரின் பெயரைச் சொல்லிக்கொண்டு டில்லியில் அரசாளத் தொடங்கினான். இவன் ஸையத் என்னும் வம்சத்தைச் சேர்ந்தவன். இவனுக்குப்பிறகு அந்த வம்சத்தைச் சேர்ந்த மூவர் டில்லியில் அரசாண்டு வந்தார்கள். இவர்கள் காலத்தில் டில்லியும் அதைச்சார்ந்த ஒரு சிறிய பிரதேசமுமே இவர்களுக்குச் சொந்தமாக இருந்தன.

கி. பி. 1451-ல், லோடி வம்சத்தைச் சேர்ந்தவர்கள் டில்லியில் அரசரானார்கள். அவர்களில் கடைசியானவன் இப்ரஹீம் லோடி என்பவன். அவன் தனது கொடுமைகளினால் தன் குடிகளின் பகையைச் சம்பாதித்துக் கொண்டான். அப்பொழுது நாட்டில் கலகங்கள் அதிகரித்தன. அவனது சிற்றப்பனான அல்லா உத்தீனும், பஞ்சாப் கவர்னரான தௌலத்கான் லோடியும் அவனுக்கு விரோதமாகக் கிளம்பி, அவனைத் தொலைத்துவிடத் தீர்மானித்தார்கள். இவர்கள் காபூல் அரசரான பாபர் என்பவரைத் தங்களுக்குத் துணை செய்யும்படி கேட்டார்கள். பாபர் வெகு நாட்களாக இந்தியாவில் ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்த வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தார். அதனால், அவர் லோடி அரசனுடன் சண்டைக்கு வந்து, கி. பி. 1526-ல் பானிப்பட்டில் இப்ரஹீம் லோடியைக் கொன்று டில்லியில் அரசரானார். அதனோடு துருக்கியருடைய ராஜ்யம் அழிந்து போயிற்று.

பயிற்சிகள்

1. ஜூனா முகம்மது துக்ளக் எப்பொழுது, எவ்வாறு பட்டத்திற்கு வந்தார் ?

2. அவரிடத்திருந்த நல்ல குணங்களும் தீய குணங்களும் யாவை ?

3. ‘அவர் செய்த சில காரியங்கள் நல்ல எண்ணத்தோடு செய்யப்பட்டபோதிலும், தீமையாக முடிந்தன.’ எப்படி ? ஏன் ?

4. பிரோஜ்ஷா செய்த நன்மைகள் யாவை ?

5. தைமூர் யார் ? ஏன் வந்துளான் ?

7. பஹ்மனி ராஜ்யம்

முகம்மது துக்ளக்கின் உத்யோகஸ்தர்களில் ஒருவரான ஹாஸன் ஜாபர்கான் என்பவர் தௌலதாபாத்தைத் தம் வசமாக்கிக் கொண்டு, ஒரு தனி ராஜ்யத்தை உண்டாக்கினர். அப்பொழுது அவர் சுல்தான் அல்லா உத்தீன் ஹாஸன் பஹ்மனி எனப் பெயர் வைத்துக்கொண்டார். பஹ்மன் என்ருல் பிராமணன் என்று பொருள். அவர் ஒரு பிராமணருடைய உதவியினல் உயர்ந்த பதவியை யடையவும், அவருடைய ஞாபகார்த்தமாகத் தாம் பஹ்மனி எனப் பெயர் வைத்துக்கொண்டார் என்பது சிலருடைய அபிப்பிராயம். மற்றுஞ் சிலர் அவர் பஹ்மன் என்னும் பாரஸிக வரசரது வம்சத்தில் தோன்றினதனல், அவருக்கும் அவருடைய சந்ததியாருக்கும் பஹ்மனி யரசர்கள் எனப்பெயர் வந்தது என்று எண்ணுகிருர்கள். ஆனல், அவர் உண்டாக்கின ராஜ்யத்திற்கு பஹ்மனி ராஜ்யம் எனப்பெயர் வந்ததைக் குறித்து யாதொரு கருத்து வேறுபாடும் இல்லை.

அவ்வரசருடைய ஆட்சியில் அந்த ராஜ்யம் வடக்கில் பேன் கங்கா ஆறுமுதல் தெற்கில் கிருஷ்ணு நதிவரையிலும், கிழக்கில் பாங் கீர் பட்டணம் முதல் மேற்கில் அரபிக் கடல்வரையிலும் பரவியிருந் தது. அதற்கு முதலில் குல்பர்காவும், பின்னர் முகம்மதாபத்— பீடாரும் தலை நகரங்களாக இருந்தன.

பீடார் ஒரு பெரிய பட்டணம். அது சமுத்திர மட்டத்திற்கு மேல் சுமார் 2,500 அடி உயரத்தில் இருந்தது. அதைச் சத்துருக்கள் எளிதில் கைப்பற்ற முடியாது. அதன் கோட்டையின் சுவர் 13,500 அடி நீளமும், 45 அடி அகலமும், 36 அடி உயரமும் இருந்தது. அது கற்களினலானது. அதைச்சுற்றிலும் ஓர் ஆழமான அகழி யிருந்தது. கோட்டைக்குள் அரண்மனைகளும், மசூதிகளும், மருந்துக் கிடங்கு, தங்கசாலை முதலியனவும் இருந்தன. கோட்டையைச் சுற்றிப் பீரங்கிகள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்று 23 அடி நீளமுள்ளது. அதன் வாய்ப்புறம் 19 அங்குலம் இருக்கும். கோட் டைக்கு மேற்கில் மாமரங்களும் புளியமரங்களும் அடர்ந்த ஒரு தோப்பு இருந்தது. நகரம் கோட்டையினின்றும் சிறிது தூரத்தில்

இருந்தது. அவ்விரண்டிற்கு மிடையில் ஒரு பெரிய மைதானம் இருந்தது. நகரத்தின் தெருக்கள் அகலமாகவும், ஒழுங்காகவும் இருந்தன. இருபுறங்களிலும் வீடுகள் அழகாகவும், சித்திரவேலைப் பாடுகளுடனும் கட்டப்பட்டிருந்தன. மாளிகைகளின் சிகரங்கள் உன்னதமாக அமைந்திருந்தன. அந்நகரத்தை விஜயநகரத்தோடு அன்றி வேறு எதனுடனும் ஒப்பிடமுடியாது.

சுல்தான் அல்லா உத்தீன் ஸ்தாபித்த பஹ்மனி ராஜ்யத்தை அவன் சந்ததியார்கள் சுமார் 150 வருஷங்கள் வரையில் ஆண்டுவந்



பெரிய பீரங்கி

தார்கள். அவர்களுக்கும் விஜயநகரத்து அரசர்களுக்கும் அடிக்கடி சண்டைகள் நடந்துவந்தன. அவற்றினால் இருதிறத்தாரும் பலங் குன்றி வரலானார்கள்.

பஹ்மனி அரசர்களில் மஹ்மூதுஷா என்பவன் கடைசி அரசன். அவன் கி. பி. 1482-ல் பட்டத்துக்கு வந்தான். அவனுக்கு ராஜ்யத்தை ஆளுந்திறமை சிறிதும் இல்லை. அதனால், அவனுடைய அதிகாரத்திலடங்கி யிருந்த மாகாண கவர்னர்கள் பலரும் சுயேச்சாதிகாரத்தைப்பெற்று, தனித்தனிச் சிற்றரசர்கள் ஆனார்கள். அவர்களுள் யூஸூப் அடில்ஷா என்பவர் ஒருவர். அவர் துருக்கிய ஜாதியைச்

சேர்ந்தவர். அவர் பஹ்மனி ராஜ்யத்தில் ஒரு சிறிய உத்யோகத்தில் அமர்ந்து நாளடைவில் பீஜப்பூர் மாகாணத்திற்குக் கவர்னர் ஆனார். அவர் கி. பி. 1489-ல், பீஜப்பூரை ஒரு தனிராஜ்ய மாக்கிக்கொண்டு விட்டார்.

யூஸூப் நன்ருகக் கற்றவர். அவருக்கு சங்கீதத்தில் பிரியம் அதிகம். அவர் கற்றவர்களைப் பெரிதும் போற்றிவந்தார். அவர் சிற்றின்பப்பிரியராக விருந்தும், தமது ராஜகாரியங்களைக் கைவிட வில்லை, அவர் ஹிந்துக்களை உயர்ந்த உத்யோகங்களில் நியமித்திருந்



பீஜப்பூர் கோட்டை

தார். அவருக்குப்பிறகு பீஜப்பூரையாண்ட ஆலி அடில்ஷா என்பவரின் மனைவியே சந்த் பீபீ என்னும் ஸ்திரீ ரத்னம். அடில்ஷா பீஜப்பூரில் ஒரு பெரிய ஏரியை உண்டாக்கி, ஒரு மசூதியையும் அமைத்து வைத்தார். அவர் வியவசாயத்திற்கான கால்வாய்களை வெட்டுவித்தும், நகரத்தைக் காக்க ஒரு பெரிய மதில்சுவரை எழுப்பியும் உதவினார்.

பீஜப்பூரைப் போன்று, பீரார், பீடார், கோலகோண்டா, அஹமதுநகரம் என்னும் நாடுகளும் சுயேச்சாதிகாரத்தைப் பெற்று, தனித்

தனி ராஜ்யங்கள் ஆய்விட்டன. இவைகள் தங்களுக்குள்ளேயும், விஜயநகரத்துடனும் சண்டைகள் செய்துவந்தன. அச்சண்டைகளில் ஹிந்துக்கள் முகம்மதியர்களுக்கும், முகம்மதியர் ஹிந்துக்களுக்கும் சொல்லரிய தீமைகளைச் செய்தார்கள். அன்றியும், அச்சண்டைகளில் நாடுநகரங்கள் பாழாக்கப்பட்டும், கண்ணையும் கருத்தையும் கவரும் மாடமாளிகைகளும், கோயில்களும் மசூதிகளும், பள்ளிவாசல்களும் இடித்துத் தகர்க்கப்பட்டும் போயின.

கடைசியில், முகம்மதிய சுல்தான்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, கி. பி. 1565-ல், தலைக்கோட்டை என்னுமிடத்தில் விஜயநகரத்தரசரை எதிர்த்துச் சண்டைசெய்து ஜயம் பெற்றார்கள். அதனோடு விஜயநகர ராஜ்யத்தின் பெருமை முழுவதும் தொலைந்து போயிற்று. பின்னர், அந்த முகம்மதிய சுல்தான்கள் முன்போல் தங்களுக்குள்ளேயே சண்டையிடத் தலைப்பட்டார்கள். அதனால், அக்பர் பீராரையும், கோலகோண்டாவையும் வென்று, தமது ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டுவிட்டார். ஔரங்கஜீப்பின் ஆட்சியில் பீடாரும், பீஜப்பூரும், அஹமதுநகரமும் அவரது வசப்பட்டு முகலாய ராஜ்யத்தில் சேர்ந்துபோயின. இவ்வாறாகப் பஹ்மனி ராஜ்யம் அடியோடு அழிந்துவிட்டது.

பயிற்சிகள்

1. பஹ்மனி ராஜ்யம் எப்போது, ஏன் தோன்றியது ?
2. அப்பெயர்வரக் காரணம் என்ன ?
3. பீடாரைச் சிறிது வருணித்துக் கூறுக.
4. ஆலி அடில்ஷா ஏன் வந்துளார்? அவர் செய்த நற்காரியங்கள் யாவை ?
5. சந்த் பீபீயின் பெருமை எவ்வாறானது ?
6. தலைக்கோட்டைச் சண்டை எப்போது, ஏன் நடந்தது ? யார் யாருக்கு ? அதன் முடிவும், பயனும் என்ன ?

8. சித்தூர் ராஜபுத்திரர்கள்

ஒரிஸ்ஸாவிலிருந்து அரவல்லிமலைத் தொடர்கள் வரையிலான பிரதேசத்தின் ஒரு பாகம் காண்ட்வன நாடும் மற்றொன்று மத்திய இந்தியாவும் ஆகும். இங்கே அப்போது அநேக ராஜபுத்திர ராஜ்யங்கள் இருந்தன. இவற்றின் சிற்றரசர்கள் இந்த நாடுகளின் வடக்கிலும் தெற்கிலும் இருந்த முகம்மதிய நாட்டரசர்களோடு சண்டையிட்ட வண்ணமாகவே இருந்தனர். அவ்வாறிருந்தும், முகம்மதியர்கள் இவர்களை வென்றுகொள்ளாததன் காரணம் இவர்கள் நாட்டின் அமைப்பே யாம். ராஜபுத்திர நாடுகள் யாவும் காடுமலைகளையும், கடத்தற்கு அரிய வனாந்தரங்களையும் பொருந்தியிருந்தன. அங்கே பாலைவனங்களும் இருந்தன.

ராஜபுத்திரப் பிரதேசத்தில் ராஜபுதனம் என்ற நாடுதான் முக்கியமானது. இது அப்பிரதேசத்தின் மேற்கோடியாகும். இந்நாட்டை ஆபூ மலைத்தொடர் இரண்டு பிரிவுகளாக வகுத்துளது. அம்மலைத் தொடரின் மேற்கில் மார்வார் (இதற்கு ஜோதிபுரம் என்றும் பெயருண்டு) நாடும், பிகானீர் நாடும், ஜய்ஸல்மீரும், அமரக்கோட்டையும் இருந்தன. கிழக்கில் மீவார் (இதைச் சித்தூர் என்றும் கூறுவர்) நாடும், ஆம்பேர் அல்லது ஜயபுரமும், கோடாவும், பூந்தியும் இருந்தன.

இந்நாடுகளனைத்திலும் ஜோதிபுரம் முகம்மதியருடைய தீமையின்றி இருந்தது. ஆனால், ஜய்ஸல்மீர், ஜயபுரம், கோடா, பூந்தி, சித்தூர் நாடுகளின் அரசர்கள்மட்டில் அடிக்கடி முகம்மதியர்களோடு சண்டைகள் செய்து, அவர்களுடைய ஆதிக்யம் பெருகவொட்டாமல் தடுத்துவந்தார்கள். கி. பி. 1420-க்கும் 1470-க்கும் இடையில், சுமார் ஐம்பது வருஷங்கள் வரை, மீவார் நாடு உன்னத நிலைமையில் இருந்தது. அப்போது அதைக் கும்பாராணா என்பவர் ஆண்டிருந்தார். இவர் தமது நாட்டின் பாதுகாப்புக்காகக் கோட்டைகள் பல கட்டுவித்தார். இவர் ராஜஸ்தானி பாஷையில் எழுதப்பட்ட கிரந்தங்களின் அபிவிருத்தியில் பெரிதும் உதவினார். இவர் மாளவத்தையும், கூர்ஜரத்தையும் வென்றார். தமது வெற்றியைக் குறிக்க இவர் ஒரு கீர்த்தி ஸ்தம்பத்தை நாட்டினார். இவரை

யல்லாது அப்போது மற்றொரு பெரிய ராஜபுத்திர அரசரும் ஆட்சி செய்திருந்தார். அவர் சங்கிராம ஸிங்க் என்பவர். அவரை ராணு ஸாங்கா என்றும் கூறுவர். அவர் சித்தூர் நாட்டைக் கி. பி. 1510 முதல் கி. பி. 1528 வரை ஆண்டிருந்தார். அவர் சிறந்த பராக்கிரம சாலி. தோள்வலியும் ஆண்மையும் பொருந்தியவர். அவர் அக்கம் பக்கங்களிலிருந்த ஹிந்து நாடுகளையும், முகம்மதிய நாடுகளையும் வென்றார். அவர் முகலாய பாபரோடு சண்டையிட்டார். அதன் விவரம் பின்னுற் கூறப்படும். அவர் டில்லியில் திரும்பவும் ஹிந்து ஸாம்ராஜ்யத்தை நிலைநாட்ட ஆசைகொண்டிருந்தார்.

ஜயபுரம் டில்லிக்கருகில் இருந்ததனால், முகம்மதிய சுல்தான் களின் ஆதிக்யத்தில் அடங்கியிருக்க வேண்டியதாயிற்று. முகலாய ரோடு முதன்முதல் நட்புக்கொண்ட ராஜபுத்திர நாடுகளுள் ஜயபுரம் ஒன்று. ஆனால் பண்டில்கண்டின் மத்தியிலிருந்த சில சிறிய ராஜ புத்திர நாடுகள் மட்டில் சுயேச்சாதிகாரம் உடையனவாகவே இருந்தன. இவற்றைப் போன்று, இமயமலைச் சாரலிலிருந்த சில ராஜபுத்திர ராஜ்யங்களும் தங்கள் சுயேச்சாதிகாரத்தை இழந்து விடாமல் இருந்துவந்தன.

ராஜபுத்திர அரசர்கள் ஹிந்து மதத்தையும், கல்வியையும் காப்பாற்றி வந்தனர். அவர்கள் ஸம்ஸ்கிருத பாஷையின் அபி விருத்தியிலும் உதவினர். ராணு கும்பாவின் ராணியான மீராபாய் கிருஷ்ண பகவானைக் குறித்துப் பாடிய பாடல்களை ஹிந்துக்கள் இன்றும் கொண்டாடி வருகிறார்கள். பஞ்சுகொட்டும் தொழிலைச் செய்துவந்த தாது என்பவர் கபீர் கண்டுபிடித்த மதத்தினின்றும் சிறிது வேறுபட்ட ஒரு மதத்தை ராஜபுதனத்தில் பரப்பினர். இவரும் ஒரு பெரிய தோத்திர நூலை இயற்றியுள்ளார்.

பயிற்சிகள்

1. ஆபூ மலையின் கிழக்கிலும் மேற்கிலும் இருந்த ராஜபுத்திர நாடுகள் எவை?

2. கும்பாராணுவும், ராணுஸாங்காவும் என் வந்துளார்கள்?

3. மீராபாய், தாது—இவர்கள் யார்?

9. விஜயநகர ஸாம்ராஜ்யம்

முகம்மது துக்ளக் தக்ஷிணத்தின்மீது படையெடுத்து வந்து அதை வென்றபொழுது, அங்கே சங்கமா என்றெருவர் இருந்தார். அவருடைய பிள்ளைகள் ஐவரில் ஹரிஹரர், புக்கர் என்னும் இருவர் அப்பொழுது முகம்மதியர் இழைத்துவந்த கொடுமைகளைத் தடுக்க வேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டார்கள். அவர்கள் துங்க பத்திரையாற்றின் வடகரையிலிருந்த ஆனைக்குந்தி சம்ஸ்தானத் துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே ஹரிஹரர் மந்திரியாகவும், புக்கர் பொக்கிஷதாரராகவும் வேலைபார்த்து வந்தார்கள். சீக்கிரத் திலேயே முகம்மதியர்கள் இயற்றிவந்த துன்பங்கள் ஆனைக்குந்திக் கும் பரவிவிட்டன. அப்பொழுது அவ்விரு சகோதரர்களும் பம்பா என்னும் ஊரிலிருந்த வித்யாரண்யர் என்னும் குருவின் ஆணைப்படி, துங்கபத்திரையின் தென்கரையில் ஒரு நகரத்தை ஏற்படுத்தினார்கள். அவர்கள் அதற்கு வித்யாரண்யம் எனப் பெயரிட்டார்கள்.

மிகச் சிறிது காலத்திற்குள் அந்நகரம் மிகவும் பெரியதாகி விட்டது. முகம்மதியருடைய தீமைகள் தம்மை யணுகாதிருக்க விரும்பி, ஹிந்துக்கள் நாலாப்பக்கங்களிலிருந்தும் வந்து அங்குக் குடியேறினார்கள். அவ்விடமே முன்பு சுக்ரீவன் ஆண்டிருந்த கிஷ்கிந்தை என்றும், அங்குள்ள ஹம்பிதான் பழைய பம்பை என்றும் எண்ணப்படுகின்றன. ஜயகரமான புண்ணிய ஸ்தலத்தில் உண்டான அந்நகருக்கு விஜயநகரம் என்றும் பெயர் வந்தது.

விஜயநகரம் ஓர் அழகான பட்டணம். அது 64 சதுர மைல் பரப்புள்ளதாக இருந்தது. அதைக் கட்டுவதற்கு ஏழு வருஷங்கள் ஆயின. அதைச்சுற்றி ஏழு உயர்ந்த மதில்கள் கட்டப் பட்டிருந்தன. முதல் மதிலை யடுத்து ஓர் அழகான அகழியிருந்தது. அந்நகரில் அமைக்கப்பட்டிருந்த மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் மேகமண்டலத்தை அளாவியிருந்தன. அவற்றின் சுவர்களிலும், சிகரங்களிலும் கண்ணைக்கவரும் சித்திரங்கள் மிகவும் அழகாக வரையப்பட்டிருந்தன. முதல் மூன்று மதில்களுக் கிடையில் நறுமணங் கமழும் புஷ்பச் செடிகள் நிறைந்த நந்தவனங் களும், தென்னை, மா, பலா, கமுகு முதலிய விருக்ஷங்கள் அடர்ந்த

சோலைகளும், தாமரைத் தடாகங்களை இடையிடையே உடைய பூஞ்சோலைகளும் இருந்து பொலிந்தன. அன்றியும், அங்கே துங்க பத்திரையினாலும், அதனின்றும் வெட்டப்பட்டிருந்த பல கால்வாய் களினாலும் தண்ணீர் ஊட்டப்பெற்று, மிக்க வளத்தைப் பொருந்தி யிருந்த புலங்கள், பயிர்த்தொழிலுக்கு ஏற்றனவாக அமைந்து வியவ சாயிகளுக்கு ஊக்கத்தை உண்டாக்கின.



விஜயநகரத்துச் சபாமண்டபம்

அந்நகரம் வியவசாயத்திலன்றி வாணிபத்திலும் சிறந்திருந்தது. அதன் கடைவீதிகள் நான்காவது முதல் ஏழாவது வரையிலான மதில்களுக்கு இடையில் அமைந்திருந்தன. விசாலமான அக் கடைத் தெருவுகளில் ஜனங்கள் திரள்திரளாகக்கூடிச் சரக்குகளை விற்றும், வாங்கியும் வியாபாரஞ்செய்து வந்தார்கள். அந்நகரவாசிகள் பெரிதும் விரும்பிய கந்தங்கமழும் இனிய புஷ்பங்கள் எக்காலத்திலும்

கிடைக்கும். அங்கே காணக்கிடைக்காத ஆடைகளாவது ஆபரணங்களாவது இல்லை. இலகுவில் விலைமதிக்கவொண்ணாத நவரத்னங்கள் அக்கடைவீதியில் சாதாரணச் சரக்குகளைப்போன்று குவிந்து கிடக்கும்.

அரசருடைய அரண்மனை எல்லாவற்றிற்கும் மத்தியில் இருந்தது. அதைச்சார்ந்து ஒன்றின் எதிரில் மற்றொன்றாக நான்கு கடைவீதிகள் இருந்தன. அரண்மனையின் நாலாப்பக்கங்களிலும் சலவைக் கற்களினால் கட்டப்பட்டிருந்த சுத்தநீர் வாய்க்கால்கள் ஓடிச் சென்றன. அந்நகரத்தின் வனப்பையும், செல்வத்தையும் கருதி அதைப் பூலோக அமராவதி என்னலாம். இவ்வகை வனப்புவாய்ந்த பட்டணத்தைத் தலைநகராகக்கொண்டிருந்த ராஜ்யத்தை ஹரிஹரர் நீதிதவறாது ஆட்சி செய்துவந்தார்.

விஜயநகரத்து அரசர்களில் கிருஷ்ணதேவராயர் புகழ்பெற்றவர். அவர் அந்த ராஜ்யத்தைக் கி. பி. 1509 முதல் கி. பி. 1530 வரையில் அரசாண்டு வந்தார். அவர் சிறந்த வீரர். அவர் பஹ்மனியரசர்களோடு பல சண்டைகள் செய்து ஜயம் பெற்றார். அச்சண்டைகளில் அவருக்கு அப்பொழுது வியாபாரத்தின் பொருட்டு நமது நாட்டிற்கு வந்திருந்த போர்ச்சுகேயர் உதவியாக இருந்தார்கள். அவருடைய ராஜ்யம் சற்றேறக்குறைய தென்னிந்தியா முழுவதும் பரவியிருந்தது. அவரது அதிகாரத்திற்கடங்கி ஆட்சிசெய்து வந்த சிற்றரசர்கள் அவருக்குக் கப்பம் செலுத்தியும், போர்ப்படைகள் தந்து உதவியும் வந்தார்கள்.

ராயர் சிறந்த கல்விமான். அவருக்குக் கவிபாடும் திறமையுண்டு. அவர் தெலுங்கு பாஷையில் ஆமுக்த மால்யத என்னும் காவியத்தைச் செய்திருக்கிறார். அவருடைய சம்ஸ்தானத்தில் அநேக அறிஞர்கள் இருந்தார்கள். அவர்களில் திம்மரசுவும் பெத்தன்னாவும் முக்கியமானவர்கள்.

ராயர் வைஷ்ணவர். ஆனால், அவர் பிற மதத்தினரையும் பரிவுடன் ஆதரித்து வந்தார். அவர் செய்த சட்டதிட்டங்கள் குடிகளின் நன்மையையே நாடினவைகளாகும். அவர் யுத்தத்தில் தமது வசமான கைதிகளையும், தோற்றுத் தம்மைச் சரணமடைந்த பகைவர்களையும் தயையுடன் நடத்தினர்.

ராயர் கட்டிடப்பிரியர். அவர் அநேக தேவாலயங்களையும், தருமசத்திரங்களையும் கட்டிவைத்திருக்கிருர். காஞ்சியிலுள்ள தேவாதிராஜன் கோயிலின் ராயகோபுரம் அவர் கட்டினதேயாகும். ராயர் கி. பி. 1530-ல் காலகதியையடைந்தார். அவருக்குப்பிறகு பட்டத்துக்குவந்த அச்சுத தேவராயர், சதாசிவராயர் காலங்களில் பல சிற்றரசர்கள் சுயேச்சாதிகாரத்தைப் பெற்ருர்கள். அதனுல், விஜயநகர ராஜ்யம் சிதைவுபடலாயிற்று. ராமராயர் காலத்திலேதான் அவர் முகம்மதியருக்கு இழைத்த தீமைகளைப் பொறுக்கமுடியாமல், முகம்மதிய சுல்தான்கள், ஒன்று சேர்ந்து, அவரைக் கி. பி. 1565-ல் தலைக்கோட்டையில் சண்டையில் தோற்க அடித்துக் கொன்றது. அப்பொழுது முகம்மதியர்கள் விஜயநகரத்தை முழுவதும் இடித்துத் தகர்த்துப் பாழாக்கிவிட்டார்கள். அந்நகரத்தின் பெருமையை உணர்த்தும் பல அறிகுறிகளை நாம் இப்பொழுதும் ஹம்பியின் அருகில் காணலாம்.

விஜயநகர ராஜ்யம் அழிந்துபட்டதினின்றும் பல சிறிய ராஜ்யங்கள் தோன்றின. அவற்றுள் திருமலை நாயக்கர் ஆண்ட மதுரை மற்றவற்றினுஞ் சிறந்ததாம். ராமராயரின் சந்ததியார்கள் சிலகாலம் சந்திரகிரியில் ஆட்சி செய்திருந்தார்கள். அவர்களிலொருவரான ஸ்ரீரங்கராயரிடமிருந்துதான் ஆங்கிலேயர்கள் சென்னபட்டணத்தை விலைக்குவாங்கி, அங்கே தங்களது வியாபாரத்திற்கான கிடங்குகளையும், கோட்டையையும் கட்டிக்கொண்டார்கள்.

பயிற்சிகள்

1. விஜயநகர ராஜ்யம் எப்பொழுது, எங்கே, யாரால் உண்டாக்கப்பட்டது?
2. வித்யாரண்யர் ஏன் வந்துளார்?
3. விஜயநகரத்தைச் சிறிது வருணித்துக் கூறுக.
4. கிருஷ்ணதேவராயரின் சிறப்பு எவ்வாருனது?

10. முகலாய பாபர்

(கி. பி. 1526—கி. பி. 1530)

இந்தியாவின்மீது படையெடுத்து வந்து ஊர்களைக் கொள்ளை யடித்தும், குடிகளைக் கொன்றும் தீங்கிழைத்த தைமூர் இறந்ததும், அவன் உண்டாக்கின ராஜ்யம் சிதைவுண்டு பலசிறிய ராஜ்யங் களாகப் பிரிந்துபோயிற்று. அவற்றில் ஒன்றான பர்கானு என்னும் மாகாணத்துக்குப் பாபர், கி. பி. 1494-ல், அரசர் ஆனார். அப் பொழுது அவருக்கு வயது பதினொன்று.

பாபருக்குத் தாம் ஒரு பெரிய ராஜ்யத்தைச் சம்பாதித்து ஆளவேண்டும் என்னும் ஆசையிருந்தது. அதன்பொருட்டு அவர் பத்துவருஷகாலம் மிகுந்த ஊக்கத்துடன் உழைத்தார். அவர் பல தோல்விகளையடைந்து வருந்தினார். ஆயினும், அவர் இருமுறை ஸாமர்க்கண்ட் என்னுமிடத்தில் சிம்மாசனம் ஏறினார். ஆனால், அவர் அங்கிருந்து துரத்தப்பட்டதனால், கீழ்முகமாக வந்துவிட்டார்.

பாபர், ஹிந்துகுஷ் மலையைத் தாண்டிவந்து, கி. பி. 1504-ல், காபூலைக் கைப்பற்றிக்கொண்டு அந்நாட்டிற்கு அரசரானார். அவர் கி. பி. 1522-ல் காண்டஹாரையும், கி. பி. 1524-ல் லாகூரையும் வென்றுகொண்டு, அவைகளுக்கும் கிழக்கிலுள்ள ஹிந்துஸ் தானத்தை முழுவதும் ஜயித்துக்கொள்ள எண்ணினார். அவ்வாறான சமயத்திலேதான் அல்லா உத்தீனும், தௌலத்கானும் அவரை இப்ரஹீம் லோடிக்கு விரோதமாகத் தங்களுக்குத் துணைவரும்படி வேண்டினார்கள். பாபர் வெகு சந்தோஷத்துடன் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கினார்.

கி. பி. 1526-ல், அவர் ஒரு பெரும்படையுடன் லோடி யரசரை எதிர்த்துச் சண்டைசெய்யவந்தார். இருதிறத்தாருக்கும் பானிப் பட்டு என்னுமிடத்தில் பெரும்போர் நிகழ்ந்தது. அந்தச் சண்டை யிலே தான் முதன் முதல் நமது நாட்டில் பீரங்கிகளும், வெடி மருந்தும் உபயோகிக்கப்பட்டன. பாபருடைய சேனைகள் பொறுமையாகவும், மன உறுதியுடனும் சண்டையிட்டு, ஆப்கானி யரை எளிதில் வெற்றி கொண்டுவிட்டன. லோடி யரசரும், ஆயிரக்கணக்கான போர்வீரர்களும் சண்டையில் மடிந்துபோனார் கள். பாபர் தாம் எண்ணியபடியே டில்லியில் அரசரானார்.

பாபர் டில்லியிலும், ஆக்ராவிலும் இருந்த பொக்கிஷங்களைக் கைப்பற்றிக்கொண்டு, தமது போர்வீரர்களுக்கும், காபூல் நாட்டுக் குடிகளுக்கும் ஏராளமான சன்மானங்களைச் செய்தார். அப்பொழுது அவருடைய மகன் ஹுமாயூனுக்கு இரண்டு லக்ஷம் ரூபாய் கிடைத்தது. பாபர் தமது திறமையினல் ஆப்கானிய பிரபுக்களையும், காபூலை

பாபர்

நோக்கித் திரும்பிச்செல்ல எண்ணின தமது போர் வீரர்களையும் தம் வசமாக்கிக்கொண்டார்.

பாபர் ராஜபுத்திரர்களை ஜயிக்கக் கருதி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகையில், அந்த ராஜபுத்திரர்கள் சிறந்த போர் வீரர்கள் எனக் கேள்வியுற்ற அவருடைய சேனைகள் மனத்தளர்ச்சியை யடைந்தன. பாபர் அவர்களுக்குத் தைரியத்தை யுண்டாக்கியும்,



பாபருடைய தோட்டம்

(From a Persian Ms. now in the British Museum)

வெற்றிக்கு ஒருகால் இடையூருக இருக்கக்கூடிய மதுபானத்தை யொழித்தும் சண்டைக்குத் தயாராஞர். கி. பி. 1527-ல், கான் வாஹா என்னுமிடத்தில் பாபர் ராஜபுத்திரர்களின் தலைவரான ராணு ஸாங்காவைச் சண்டையிட்டு வென்ருர். பின்னர், அவர் சாண்டேரிக் கோட்டையை முற்றுகைசெய்து மாளவத்தைப் பிடித்துக் கொண்டார். அதன் பின்னர், ராஜபுத்திரர்கள் அவரை எதிர்த்து வரவில்லை. கி. பி. 1528-ல், பீஹாரும், வங்காளமும் பாபர் வசமாயின. இவ்வாருகப் பாபர் உண்டாக்கின ராஜ்யம் இமயமலைமுதல் குவாலியர் வரையிலும், மத்திய ஆசியாவிலுள்ள ஆக்ஸஸ் நதிமுதல் வங்காளம் வரையிலும் பரவிவிட்டது.

பாபருடைய பிரபுக்களும், ஜாகீர்தார்களும் அவருக்கு நிலைவரமான வரிகளைச் செலுத்தித் தாங்கள் குடிகளிடமிருந்து நிலவரி, வியாபாரவரி, ஹிந்துக்கள் செலுத்திவந்த தலைவரி முதலிய வரிகளை வசூல் செய்துகொண்டார்கள். பாபருக்கு வருஷவாரியில் இரண்டரை கோடி ரூபாய் வருமானம் கிடைத்துவந்தது.

பாபர் தைரியமும், வீரமும் பொருந்தியவர். அவரிடம் ஈவு, இரக்கம், அன்பு, விடாமுயற்சி, தயை முதலிய நற்குணங்கள் குடிகொண்டிருந்தன. அவர் சேனையை யுத்தமுனையில் நடத்துவதிலும், ராஜ்யத்தை ஆட்சி செய்வதிலும் வெகு கெட்டிக்காரர். அவர் தோல்வியினுல் ஒருபொழுதும் மனத்தளர்ச்சியை அடைந்ததில்லை. குதிரையேறிச் சவாரி செய்வதிலும், நீந்துவதிலும் அவருக்கு விருப்பம் அதிகம். அவர் சிங்கத்தின் பலம் பொருந்தப் பெற்றதனுல் அவருக்குப் பாபர் என்னும் பெயர் பொருந்தியதேயாகும்.

பாபர், கல்வி கேள்விகளிற் சிறந்தவர். அவருக்குச் சிற்பத்தில் பிரியம் அதிகம். அவருக்கு உருதுவும், பாரஸிகமும் நன்ருகத் தெரியும். அவர் உருதுவில் அநேக நூல்களைச் செய்திருக்கிருர். அவர் தமது சரித்திரத்தைத் தாமே மிகுந்த நடுவுநிலைமையுடன் எழுதியிருக்கிருர். அதில் அவர் தமது குணங்களையும், குற்றங்களையும் உள்ளவாறு கூறியுள்ளார். அவர் இந்தியாவைப் பழித்து எழுதியிருக்கிருர். "ஹிந்துஸ்தானத்தின் நகரங்கள் அழகில்லாதவை. அவையாவும் ஒரேமாதிரியாக இருக்கின்றன. அங்கே தோட்டங்

களுக்கு மதில்களில்லை. அந்நாட்டின் பெரும் பாகமும் ஒரு சம வெளி. அங்குள்ள ஜனங்கள் குரூபிகள். அவர்கள் இன்பங்கள் எதையும் அறியார்கள். அவர்களுக்குக் கூரியபுத்தி, அன்பு, கைத் தொழில்களில் பயிற்சி, சிற்பத்தில் தேர்ச்சி முதலியன இல்லை. அந்நாட்டில் குதிரைகள் இல்லை,'' என்று அவர் கூறியுள்ளார். பாபர் கி. பி. 1530-ல் இறந்துபோனார். நோயினால் வருந்தி, சாகுந்தருணத் திலிருந்த அவருடைய மகன் அவர் வேண்டியபடி பிழைக்கவும், பாபர் நோய் கண்டு காலஞ்சென்றார்.

பயிற்சிகள்

1. பாபர் யார்? அவர் முகலாய ஸாம்ராஜ்யத்தை இந்தியாவில் ஸ்தாபித்தது எங்ஙனம்?
2. பாபர் ராஜபுத்திரரை எவ்வாறு வென்றார்?
3. அவர் இந்தியாவைக் குறித்துக் கூறியிருப்பது என்ன?
4. அவர் இறந்தது எங்ஙனம்?

11. ஹுமாயூன்

(கி. பி. 1530—கி. பி. 1540; கி. பி. 1555)

ஹுமாயூன் தமது 24-வது வயதில் அரசரானார். அவர் சிறந்த கல்விமான். அவர் மிகுந்த தயை பொருந்தியவர். ஆனால், அவரிடத்து ஊக்கமும், விடாமுயற்சியும் இல்லை. அவருக்கு அவருடைய சகோதரர்களும், பீஹாரையாண்டுவந்த ஷேர்ஷா என்னும் ஆப்கானிய அரசரும், கூர்ஜர, மாளவநாடுகளை யாண்டுவந்த பஹதுர் ஷாவும் பெரும் பகைவர்களாக ஏற்பட்டிருந்தார்கள்.

முதலில் ஹுமாயூன் ஷேர்ஷாவின்மீது படையெடுத்துச் சென்று அவரைத் தோற்க அடித்துவிட்டுச் சுனார்கோட்டையை முற்றுகைசெய்தார். அப்பொழுது ஆப்கானியவரசர் அவருக்குக் கீழ்ப்படிந்து விட்டதனால், அவர் அவரை அம்மட்டில் விட்டுவிட்டுப் பஹதுர்ஷாவை எதிர்த்துச் சென்றார். பஹதுர்ஷா யுத்தமுனையிலிருந்து தப்பியோடவும், ஹுமாயூன் அவரை ஊர்ஊராகத் துரத்

திச் சென்ருர். ஆனுல், சீக்கிரத்திலேயே பஹதுர்ஷா போர்ச்சு கேயருடைய உதவியைக்கொண்டு, ஹுமாயூன் வசமாய்ப்போன கூர்ஜரத்தைக் கைப்பற்றிக் கொண்டுவிட்டார்.

அப்பொழுது ஷேர்ஷா வங்காளத்தைப் பிடித்துக்கொண்டு விட்டதனுல், ஹுமாயூன் ஷேர்ஷாவை எதிர்த்துச் சென்ருர். கி. பி. 1539-ல் பக்ஸார் என்னுமிடத்தில் அவ்விருவருக்கும் கடும் போர் நிகழ்ந்தது. அதில் ஹுமாயூன் தோல்வி யடைந்து போனுர். மறு வருஷம் கன்னேசியில் நடந்த சண்டையில் ஹுமாயூன் இன்னுமொரு முறை தோல்வி யடைந்து நாட்டைவிட்டு உயிர்பிழைக்க வோடினுர்.

மூன்று வருஷங்கள் வரையில் அவர் ராஜபுதனம், ஸிந்து நாடுகளிலுள்ள பாலைவனங்களில் சுற்றித்திரிந்து, சொல்லரிய துன் பங்களை அனுபவித்துக் காலங்கழித்துவந்தார். பின்பு, அவர் பார ஸிகத்தை நாடிச்செல்லும் வழியில், கி. பி. 1542-ம் வருஷம் அக் டோபர் மாதம் 15-ம் தேதியன்று, அமரக்கோட்டையில் அவருக்கு அக்பர் பிறந்தார். அப்பொழுது அவர் தம்மிடத்திருந்த கஸ்தூரியை அங்கிருந்தவர்களுக்குக் கொடுத்துத் தமது மைந்தரின் கீர்த்தி அதன் மணத்தைப்போல் பரவவேண்டும் எனக் கடவுளை வேண்டினுர்.

பின்னர் ஹுமாயூன் பாரஸிக அரசனுடைய உதவியைக் கொண்டு தமது சகோதரர்களிடமிருந்து காண்டஹாரையும், காபூலை யும் ஜயித்துக்கொண்டு அங்கே ஆட்சிசெய்து வரலானுர். சீக்கிரத்தி லேயே அவருடைய சகோதரர்கள் இறந்துவிட்டதனுல், ஹுமா யூனுக்கு அமைதி உண்டாயிற்று.

ஹுமாயூன் நாட்டைவிட்டு ஓடிவிட்டதனுல், ஷேர்ஷா ஹிந்துஸ் தானத்தின் பெரும்பாகத்தையும் வென்று மிக்க மேம்பாட்டுடன் ஆட்சிசெய்து வந்தார். அவர் சிறந்த புத்திமான். அவர் சண்டையி லன்றித் துரைத்தனத்தை நடத்துவதிலும் கைதேர்ந்தவர். அவர் ஹிந்துக்களை மிகவும் பக்ஷமாய் நடத்தி வந்ததனுல், நாட்டில் அமைதி உண்டாயிருந்தது. அவர் ஏற்படுத்திய சட்டதிட்டங்கள் குடிகளின் நன்மையைநாடிச் செய்யப்பட்டனவாம். அவர் குற்றவாளிகளைக் கடுமையாய்த் தண்டித்து வந்ததனுல், ஜனங்கள் அவருக்குப் பயந்து உயிர்வாழ்ந்து வந்தார்கள். அவரது ஆட்சியில் நாட்டில் திருடர்க

ளாவது, கொள்ளைக்காரர்களாவது கிடையார். அவருடைய காலத்தி லேதான் தபால் வண்டிகள் முதன்முதல் ஏற்பட்டன. அவர் பிர யாணிகளின் சௌகரியத்திற்காகப் பாதையோரங்களில் நிழல்தரும் மரங்களை வைத்தும், கிணறுகளை வெட்டியும், சாவடிகளைக் கட்டியும் உதவினர்.

அவருக்குப் பிறகுவந்த அரசர்கள் சிறிதும் பயனில்லாதவர்கள். அவர்கள் காலத்தில் நாட்டில் கலகங்கள் உண்டாயின. அப்பொழுது கி. பி. 1555-ல் ஹுமாயூன் இந்தியாவின்மீது படையெடுத்துவந்து, ஸிகண்டர்ஷாவை ஸிர்ஹிண்ட் என்னுமிடத்தில் தோற்க அடித்துத் தாம் முன் இழந்துவிட்ட சிம்மாசனத்தை மீண்டும் அடையப் பெற்றார். ஆனால், அப்பொழுது அவருக்கு ஒரு மிகச் சிறிய ராஜ்ய மே சொந்தமாக இருந்தது. அதையும் அவர் ஆறுமாதகாலந்தான் ஆட்சி செய்தார். ஒருநாள் அவர் படியினின்றும் தடுக்கி விழுந்து உயிர் துறந்தார். ஆயுள் முழுவதும் இடர்ப்பட்டு உயிர்வாழ்ந்த அவர் இடறிவிழுந்து இறந்ததும் விந்தையே! அதனினும் விந்தை அவருக்கு அதிர்ஷ்டசாலி எனப்பொருள்தரும் ஹுமாயூன் எனப் பெயர் வைத்தது.

பயிற்சிகள்

1. ஹுமாயூனின் பகைவர்கள் யார்?

2. அவர் அவர்களை வெல்லமாட்டாமைக்கு என்ன காரணம்?

3. அக்பர் அமரக்கோட்டையில் பிறப்பானேன்?

4. ஹுமாயூன் இழந்துவிட்ட ராஜ்யத்தை எப்பொழுது, எவ்வாறு திரும்பப்பெற்றார்?

5. ஷேர்ஷாவின் ஆட்சி எவ்வாறு சிறப்புற்று இருந்தது?

12. அக்பர் மஹா சக்ரவர்த்தி

(கி. பி. 1556—கி. பி. 1605)

ஹுமாயூன் இரண்டாவதுமுறை டில்லியில் அரசரான பொழுது, அவருக்கு மிகச்சிறிய ராஜ்யமே சொந்தமாக இருந்தது அல்லவா? கி. பி. 1556-ல், அக்பர் அதற்கு அரசரானர். அப்பொழுது ஆப்கானிஸ்தானமும், வட இந்தியாவின் பெரும்பாகமும் தனித்தனி ராஜ்யங்களாக விருந்தன. ஆனால், அக்பர் அவற்றையெல்லாம் வென்று, தமது ராஜ்யத்தைப் பரப்பினர். அந்த முயற்சியில் அவர் சுமார் முப்பது வருஷகாலம் செலவு செய்தார்.

ஹுமாயூன் இறந்துபோனபொழுது ஷேர்ஷாவின் வம்சத்தைச் சேர்ந்த ஆப்கானிய அரசனின் மந்திரியான ஹிமு என்பவன் டில்லியையும், ஆக்ராவையும் பிடித்துக்கொண்டு விக்கிரமாதித்யன் என்னும் பிருதுப் பெயருடன் அரசனுனன். அக்பரும், அவருடைய அத்தையின் புருஷரான பைராம்கான் என்பவரும் அவனைக் கி. பி. 1556-ல், பானிப்பட்டில் முறிய அடித்துக் கொன்றுவிட்டார்கள். அதனால், அக்பருக்கு டில்லியும் ஆக்ராவும் கிடைத்தன. அன்றியும், ஸிகண்டர்ஷா என்னும் ஆப்கானிய அரசன் பஞ்சாபைவிட்டு வங்காளத்துக்கு ஓடிப்போய்விட்டதனால், அக்பருக்குப் பஞ்சாபும் கிடைத்தது. கி. பி. 1560-ல், அக்பர் பைராம்கானை மெக்காவுக் கனுப்பிவிட்டு, ராஜ்யபரிபாலனத்தைத் தாமே ஏற்றுக்கொண்டு விட்டார். போகும்வழியில் பைராம்கான் ஒரு பகைவனது கையினால் கொலையுண்டுபோனர்.

அக்பர் சீக்கிரத்திலேயே மாளவம், பீஹார், காண்ட்வன நாடுகளை ஜயித்துத் தமது ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார். அவர் ஜயபுரத்தை யாண்டுவந்த ராஜபுத்திர அரசனது மகளைத் தாம் விவாகஞ் செய்துகொண்டும், ஜோதிபுரத்தரசரது மகளைத் தமது மைந்தர் ஸலீமுக்கு மணஞ்செய்வித்தும், ராஜபுத்திரர்களுடைய சிநேகத்தைச் சம்பாதித்துக்கொண்டார். ஆனால், மீவார் நாட்டரசர் மட்டில் அக்பரைச் சிறிதும் மதிக்கவில்லை. அதனால், கி. பி. 1567-ல், அக்பர் சித்தூரை முற்றுகைசெய்து பிடித்துக்கொண்டார். ராணபிரதாப ஸிங்க்

என்னும் அந்நாட்டரசர் அக்பருடன் பன்முறை சண்டைசெய்து தோற்றுப்போனதினுல், உதயபுரத்திற்கு ஓடிச்சென்று அங்கே



ஆட்சி செய்துவந்தார். கி. பி. 1568-ல் கூர்ஜாமும், வங்காளமும் அக்பர் வசமாயின.

கி. பி. 1579-ல், அக்பருடைய சகோதரரான ஹகிம் மிர்ஜா என்பவர் காபூலில் கலகம் செய்யவும், அக்பர் அவரைப் போரில் வென்று, அவரையே தமது பிரதிநிதியாக நியமித்துக்கொண்டார். அவ்வாறே, அவர் மாளவ அரசனையும் வென்று, அவனையே அந் நாட்டிற்குக் கவர்னராக்கினர். கி. பி. 1586-ல், ஹகிம் மிர்ஜா இறந்து போய்விட்டதனால், அக்பர் மான்ஸிங்கைக் காபூல் கவர்னராக ஆக்கினர். அப்பொழுது அக்பர் லாகூரைத் தமது ராஜ்யத்தின் தலை நகரமாகச் செய்துகொண்டார். நாளடைவில் ஹிந்துஸ்தானம் முழுவதும் அக்பர் வசமாகிவிட்டது.

கி. பி. 1595-ல் அக்பருடைய மைந்தரான மூராட், அஹமது நகரத்தின்மீது படையெடுத்துச் சென்றார். அவர் தம்முடன் மிகுந்த வீராவேசத்தோடு சண்டையிட்ட சந்த் பீபியுடன் சமாதானஞ் செய்துகொண்டு பீராரைச் சம்பாதித்தார். ஆனால், சிறிது காலத்திற்குள் அஹமது நகரத்தில் கலகங்கள் பெருகிப்போனதினால், அக்பர் தாமே நேரிற்சென்று அதைக் கைப்பற்றிக் கொண்டுவிட்டார்.

கி. பி. 1605-ல், அக்பர் பரகதியை யடைந்தார். இறக்கும் பொழுது அவர் தமது பிரபுக்களைத் தம்மிடம் வரவழைத்துத் தாம் அவர்களுக்கு ஏதேனும் தீமை செய்திருந்தால் அவர்கள் தம்மை மன்னிக்கவேண்டுமெனப் பிரார்த்தித்தார். அவர் அவர்களுக்குச் சிறந்த உபதேசங்களைச் செய்து கடவுளைத் துதித்த வண்ணமாகவே உயிர்துறந்தார்.

அக்பர் கம்பீரமான தோற்றமுடையவர். அவருடைய புஜங்கள் பருத்துத் திரண்டும், மார்பும் நெற்றியும் அகன்றும், கைகள் முழங்கால் வரையில் நீண்டும் இருந்தன. அவர் சிங்கத்தின் பலம் பொருந்தியவர். அவர் நீந்துவதிலும், குதிரையேறிச் சவாரி செய்வதிலும் வெகு சமர்த்தர். அவருக்குப் போலோ விளையாட்டில் பிரியம் அதிகம். அவர் இரவில் நெருப்புப் பந்தை வைத்துக்கொண்டு ஆடுவார். அவர் மிதமாக உண்டும், உடுத்தும் வந்தார். அவர் வாரத்தில் இருமுறைதான் மாமிசம் புசிப்பார். அவர் சாந்தமும், தயையும் பொருந்தியவர். அவர் மிகுந்த தெய்வ பக்தியுடையவர். அவர் பிறமதங்களைச் சிறிதும் வெறுத்தது இல்லை.

அக்பர் தமது குடிகளைச் சிறிதும் வேற்றுமையின்றிச் சமமாகப் பாவித்து நடத்திவந்தார். அவர் அவர்களை ஒற்றுமைக்கான வழிகளில் பழக்கி வந்தார். அவர் எல்லோருக்கும் ஒரே விதமான சட்டதிட்டங்களைச் செய்திருந்தார். அவைகள் யாவும் குடிகளின் நன்மையை நாடிச் செய்யப்பட்டன. அவருடைய ஆட்சியில் நாலா மதத்தினர்களும், சுகமாகவும், சந்தோஷமாகவும் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் அனைவரும் அவரிடம் அன்பு பாராட்டி ராஜ விசுவாசத்துடன் நடந்துகொண்டார்கள்.

அவர் எல்லா மதத்தினர்களையும் சமமாக நடத்திவந்ததைக் கேள்வியுற்ற மேனாட்டினர் மிகுந்த ஆச்சரியத்தை யடைந்தார்கள். அப்பொழுது இங்கிலாந்தில் அரசு செலுத்திவந்த ட்யூடர் வம்சத்தைச் சேர்ந்த அரசர் அரசிகள் மத சம்பந்தமாகத் தங்கள் குடிகளைத் துன்புறுத்தினது இவ்வளவு அவ்வளவு அல்ல. அதனால், அந்நாட்டினரில் சிலர் ஒப்பற்ற சமரச புத்தியையுடைய அக்பரைத் தரிசிக்க வேண்டுமென இந்நாட்டிற்கு வந்தார்கள்.

அக்பர் ஹிந்துக்களை உயர்ந்த உத்யோகங்களில் அமர்த்தி அவர்களுடைய நன்றியறிதலையும், அன்பையும் கைம்மாறாகப் பெற்றுக்கொண்டார். ராஜா மான்ஸிங்கும், ராஜா பகவன்தாஸும் அவருடைய தளகர்த்தர்களாகவும், ராஜா பிர்பால் அவருடைய ஆசியக்காரராகவும், ராஜா தோடர்மால் அவருடைய பொக்கிஷ மந்திரியாகவும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர் ராஜபுத்திரர்களோடு கலந்து உறவாடி அவர்களைத் தமக்கு நண்பர்களாக்கிக் கொண்டார் அல்லவா? அவர் ஹிந்து யாத்திரிகர்கள் செலுத்தி வந்த வரியையும், எல்லா ஹிந்துக்களும் செலுத்திவந்த ஜிஸியா என்னும் தலைவரியையும் அடியோடு தள்ளிவிட்டார். அதனாலும், ஹிந்துக்கள் அவரிடம் மிகுந்த அன்பு பாராட்டினார்கள்.

அக்பர் தமது குடிகள் தங்களுடைய இஷ்டம்போல் கடவுளை வணங்கலாம் என உத்தரவு கொடுத்திருந்தார். அவருடைய அந்தப்புரத்திலேயே முகம்மதிய, ஹிந்து, கிறிஸ்தவ, பாரஸிக மதங்கள் கொண்டாடப்பட்டு வந்தன. அக்பர் நெற்றியில் திலகம் அணிந்தும், மாட்டிறைச்சி யுண்பதை நீத்தும் ஹிந்துக்களுக்குச் சந்

தோஷத்தை உண்டாக்கினார். அவருடைய கொள்கைகள் முகம்மதிய உலீமாக்களுக்கு வருத்தத்தை உண்டாக்கின. அவர் அவர்களை மதவிஷயங்களில்கூட அரசர்தான் மேலானவர் என்று

அக்பருடைய தர்பார்

ஒப்புக்கொள்ளும்படி செய்துவிட்டதனால், அவர்கள் ஒன்றுஞ் செய்ய இயலாமற்போயிற்று.

அவர் ஸிக்ரியில் மதப்பிரசாரம் செய்வதற்கென ஒரு பெரிய சபாமண்டபத்தை அமைத்தார். அதற்கு இபாதத்காஞ என்றுபெயர். அவருடைய சபைக்கு எல்லா மதத்தினர்களும் வந்து, அவரவர்களும் தங்கள் தங்கள் மதத்தின் பெருமையை யெடுத்துப் பேசுவார்கள். அரசர் அவற்றைக் கேட்டு ஆனந்திப்பார்.

அக்பர் கல்வி கேள்விகளில் சிறந்தவர். அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது என்னும் அபிப்பிராயத்தை ஒத்துகொள்ளச் சிறந்த காரணங்கள் கிடையா. அவர் நாவில் வல்லவர்களையும், சிற்பிகளையும், சாம்பிரதிகளையுங்கூடப் பரிவுடன் ஆதரித்து வந்தார். அவருடைய ஜீவிய சரித்திரமான ஆயினி அக்பரீ என்னும் நூலைச் செய்த அபுல் பஜல் என்பவரும், அவருடைய சகோதரரான அபுல் பெய்ஜி என்பவரும் அவருடைய சம்ஸ்தான வித்வான்களிற் சேர்ந்தவர்கள்.

அக்பருக்கு ஞாபகசக்தி யதிகம். அவர் தமது புஸ்தகசாலையில் சுமார் 24,000 புஸ்தகங்களைச் சேர்த்து வைத்திருந்தார். அவற்றின் பொருட்டு அவர் 65 லக்ஷம் ரூபாய் செலவு செய்தார். அவர் இராமாயண, மஹாபாரதங்களையும், பகவத்கீதையையும், அதர்வ வேதத்தையும் பாரஸிக பாஷையில் மொழி பெயர்த்து வைத்தார்.

அவர் தமது பெரிய ராஜ்யத்தைப் பதினைந்து மாகாணங்களாகப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் ஒரு கவர்னரை நியமித்தார். அவர் அவர்களினுடையவும், அவர்களுக்கடங்கிய உத்யோகஸ்தர்களினுடையவும் கடமைகளையும், உரிமைகளையும் குறித்துச் சட்டங்களை ஏற்படுத்தினர். அவருடைய மந்திரியான தோடர்மால் என்பவர் நிலங்களை அளந்தும், அவைகளை அவற்றின் செழிப்புக்கும், பாய்ச்சலாதாரங்களுக்கும் தக்கபடி தரங்களாகப் பிரித்தும் வரிகளை விதித்தார். ஏழைக் குடிகளுக்குச் சர்க்காரில் முன் பணம் கொடுக்கப்பட்டது. அவர்கள் அதைக்கொண்டு உழுது, பயிர்செய்து வரும் லாபத்திலிருந்து தாங்கள் வாங்கின கடனைக் கொஞ்சங் கொஞ்சமாகத் திருப்பிக் கொடுப்பார்கள். வரி வசூல் சம்பந்தமான சட்டங்கள் குடிகளுக்கு அநுகூலமாகச் செய்யப்பட்டிருந்தன. குடிகள் தங்கள் வருமானத்தில் மூன்றிலொரு பங்கை வரியாகச் செலுத்தி வந்தார்

கள். பஞ்சகாலங்களில் வரிகள் குறைக்கப்பட்டன. குடிகள் வரியைப் பணமாகவும், தானியமாகவும் செலுத்தலாம்.

அக்பர், கன்னிகைகளுக்கு மிகச் சிறிய வயதில் மணஞ் செய் விக்கக் கூடாதென்று திட்டஞ் செய்தார். அவர், சதிகளின் உற்றார் உறவினர்கள், அவர்களைத் தங்கள் பதிகளுடன் உடன்கட்டை ஏறும்படி கட்டாயப்படுத்தக்கூடாது என்றும் உத்தரவு செய்தார். அவர் விதவைகள் மறுபடியும் விவாகம் செய்துகொள்ளலாம் என்று அனுமதி கொடுத்தார். அவர் பசு பலி கூடாதென்றும், யாகத் திற்காக மிருகங்களைக் கொல்லக்கூடாதென்றும் கட்டளையிட்டார். இத்திருத்தங்கள் பலவும் முழுவதும் அனுஷ்டிக்கப்படவில்லை யாயி னும், அவைகள் செய்யப்பட்டதின் பயனாகப் பல கொடிய பழக்க வழக்கங்கள் குறைவுபட்டு வரலாயின. சுருங்கச் சொல்லில், அக்பர் தமது குடிகளைத் தகப்பன் தனது மக்களைக் காப்பதை யொத்து, மிக்கப் பரிவுடன் பாதுகாத்து ஆட்சிசெய்து வந்தார் என் பது மிகையாகாது. ஆதலால், அவர் புகழ் உலகெங்கும் பரவின தில் யாதொரு ஆச்சரியமும் இல்லை அல்லவா ?

பயிற்சிகள்

1. மதவிஷயத்தில் அக்பருக்கு மிகுந்த சமரஸ புத்தி யிருந்ததென் பதை எடுத்துக்காட்டுக.

2. அக்பர் ஹிந்துக்களின் அன்பையும், நட்பையும் எங்ஙனம் சம்பா தித்துக்கொண்டார் ?

3. ட்யூடர் வம்சத்தரசர்கள் என் வந்துள்ளார்கள் ?

4. சமூக வாழ்க்கையில் அக்பர் செய்வித்த சீர்திருத்தங்கள் யாவை ?

5. 'முகலாய ஸாம்ராஜ்யத்தை இந்தியாவில் உண்மையில் நிலை நாட்டியவர் அக்பரே யாவர்.' எப்படி ?

6. அக்பர் ஸாம்ராஜ்யத்தின் பரப்பைக்காட்டும் படம் ஒன்று வரைக.

13. ஜஹாங்கீர்

(கி. பி. 1605—கி. பி. 1627)

அக்பர் விரும்பியபடியே, அவருடைய மைந்தரான ஸலீம் என்பவர் கி. பி. 1605-ல், பட்டத்துக்கு வந்தார். அப்பொழுது அவர் தமது பெயரை ஜஹாங்கீர் என மாற்றிவைத்துக்கொண்டார். 'ஜஹாங்கீர்' என்ருல் 'உலகத்தை வென்றவர்' என்று பொருள்.

அவருடைய மைந்தரான குஸ்ரூ என்பவன் அவருக்கு விரோதமாகக் கலகஞ்செய்து, தான் அரசனுகவேண்டுமென எண்ணினுன். ஜஹாங்கீர் அவனேச் சிறையிலிட்டு, அவன் கண்களேயும் குத்திக் குருடனுக்கிவிட்டார். அவர் அவனுக்குத் துணே வந்தவர்களேக் கழுவேற்றிக் கொன்று கலகத்தை யடக்கிவிட்டார். கி. பி. 1622-ல், குஸ்ரூ சிறையிலேயே இறந்துபோனுன்.

ஜஹாங்கீர்

ஜஹாங்கீர் தமது தந்தையின் சிறந்த வழிகளேப் பின்பற்றி ராஜ்யபாரம் நடத்திவந்தார். அவரது ஆட்சியில் பஞ்சாபில் ஒரு கொடிய கொள்ளே நோய் உண்டாகி, ஹிந்துஸ்தானத்தின் பெரும் பாகத்துக்கும் பரவி வந்ததனுல், ஜனங்கள் ஆயிரக் கணக்கில் மாண்டுபோனுர்கள்.

ஜஹாங்கீர் நூர்ஜஹான் என்னும் ஒப்பற்ற அழகு வாய்ந்த பாரஸிக மாதை மணந்துகொண்டார். நூர்ஜஹான் வெகு கெட்டிக்காரி. அவள் சாமர்த்தியமும், நற்குணங்களும் பொருந்தியவள். ஜஹாங்கீர் ராஜ்ய பரிபாலனத்தை அவளிடம் ஒப்புவித்துவிட்டுத் தாம் உண்டும், உடுத்தும், குடித்தும், ஆடிப்பாடியும் சுகமாகக் காலங் கழித்துவந்தார். நூர்ஜஹான் தனது அரண்மனே வாயிலில் மணி

யொன்று கட்டுவித்தாள். பிரியாது சொல்ல வருபவர்கள் அதை யடிப்பார்கள். அதன் ஓசை காதிற் பட்டதும் அரசி வெளியே வந்து வழக்குக்களை விசாரித்து நியாயம் நடத்துவாள். அவள் அன்பும் தயையும் உடையவள். அவள் திக்கற்ற பெண்களுக்குத் தன் கையிலிருந்து பணத்தைச் செலவு செய்து மணஞ் செய்வித்தாள்.

ஒருகால் ஜஹாங்கீரின் மைந்தரான ஷாஜஹான் என்பவர் கலகஞ் செய்தபொழுது, அரசி, மகபத்கான் என்னும் தனது சேனைத் தலைவனை யனுப்பி அவரைத் தோற்க அடித்தாள். ஆனால், சீக்கிரத்திலேயே மகபத்கான் ஷாஜஹானுடன் சேர்ந்துகொண்டுவிட்டான். கி. பி. 1626-ல், அவ்விருவருமாக ஜஹாங்கீரைச் சிறைப்படுத்திவிட்டார்கள். ஆனால், நூர்ஜஹான் தந்திரமாக அரசரைச் சிறை மீட்டுவித்தாள். சில மாதங்கள் கழித்துக் கி. பி. 1627-ல் ஜஹாங்கீர் இறந்து போனார். நூர்ஜஹான் அவருக்குப் பின்பு பதினெட்டு வருஷகாலம் ஜீவித்திருந்து, கி. பி. 1645-ல், காலஞ்சென்றாள். அவள் இருந்தவரையில் ஷாஜஹான் அவளைச் செம்மையாக உபசரித்து வந்தார்.

நூர்ஜஹான்

ஜஹாங்கீர் சிற்றின்பப் பிரியர். அவருக்கு மதுபானத்தில் விருப்பம் அதிகம். அவருக்குச் சித்திரிப்பதிலும், சங்கீதத்திலும் மிகுந்த ஆசையும், தேர்ச்சியும் இருந்தன. அவருக்குச் சிற்ப சாஸ்திரமும் நன்றாகத் தெரியும். அவர் தமது அரண்மனையின் சுவர்களைப் படங்களினால் அலங்கரித்திருந்தார்.

அவரது ஆட்சியில் அவரைக் காணுவதற்கென்று ஹாக்கின்ஸ் என்னும் ஓர் ஆங்கிலேய தூதர் வந்திருந்தார். அவர் ஜேம்ஸ் என்ற அரசரால் அனுப்பப்பட்டவர். ஜஹாங்கீர் அவரை மரியாதையுடன் வரவேற்று உபசரித்தார். அவர் இந்நாட்டில் இரண்டு வருஷ காலந் தங்கியிருந்தார். முகலாய அரசர் அந்தத் தூதருடைய

வேண்டுகோளின்படி ஆங்கிலேயருக்கு வியாபாரத்திற்கான யாதொரு சுதந்திரத்தையும் கொடுக்கவில்லை. ஆனால், ஹாக்கின்ஸுக்குப் பிறகு, கி. பி. 1615-ல், வந்த ஸர் தாமஸ் ரோ என்னும் ராயபாரி மூன்று வருஷங்கள் வரையில் இந்நாட்டில் தங்கியிருந்து, அரசரிடமிருந்து சில சுதந்திரங்களைப் பெற்றுக்கொண்டு தமது ஊருக்குத் திரும்பிச் சென்றார்.

பயிற்சிகள்

1. நியாய பரிபாலனத்தின் பொருட்டு நூர்ஜஹான் செய்வித்த ஏற்பாடு என்ன?

2. மகபத்கான் யார்? ஏன் வந்துள்ளான்?

3. ஜஹாங்கீரைக் காணவந்த ஆங்கிலேய தூதர்கள் யாவர்? ஏன் வந்தார்கள்?

14. ஷாஜஹான்

(கி. பி. 1627—கி. பி. 1658)

ஜஹாங்கீர் இறந்துவிட்டதும், ஷாஜஹான் தக்ஷிணத்திலிருந்து ஓடி வந்து, தமது சகோதரனான ஷரியாரையும், மற்றும் பல தாயாதிகளையும் கொன்றுவிட்டுக் கி. பி. 1628-ல், சிம்மாசனம் ஏறினார். அவருடைய ஆட்சியில் கூர்ஜரத்தில் ஒரு கொடிய பஞ்சம் உண்டாகி, அதில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் மாண்டு போனார்கள். அரசர், வரிகளைத் தள்ளியும் ஏழைகளுக்கு உணவுப் பொருள்களைத் தந்தும் உதவினார். அவ்வாறு செய்தும் ஜனங்கள் பட்ட துன்பம் முழுவதும் நீங்கினதாகக் காணப்படவில்லை. ஷாஜஹான் அக்பருடைய மேலான வழிகளைப் பின்பற்றி, ஹிந்துக்களைப் பக்ஷமாக நடத்திவந்ததாகத் தெரியவருகின்றது.

ஷாஜஹான், அப்பொழுது ஹூக்ளியில் பண்டகசாலையையும், கோட்டையையும் ஏற்படுத்திக்கொண்டு வியாபாரம் செய்துவந்த போர்ச்சுகேயரை எதிர்த்தார். அவர்களுடைய கிடங்குகளையும், கோட்டையையும் இடித்துத் தகர்த்துப் பாழாக்கிவிட்டார்.

போர்ச்சுகேயர்கள் அடிமை வியாபாரஞ் செய்தும், கப்பற் கொள்ளைக்காரர்களுக்கு உதவிபுரிந்தும், இந்நாட்டுக் குடிகளைக் கிறிஸ்தவர்களாக்க முயன்றும் வந்தனர். அதனால், அரசருக்கு அவர்கள்மீது கோபம் உண்டாயிற்று.

ஷாஜஹான் கட்டிடப் பிரியர். அவர் ஆக்ராவில் யமுனா நதி தீரத்தில் கட்டிவைத்துள்ள தாஜ் மஹால் என்னும் கட்டிடம் உலகப் பிரசித்தமானது. அதற்கு நிகரான கட்டிடம் வேறு எங்கும் கிடையாது. அது அவருடைய மனைவியான மும்தாஜ் அம்மையினது சமாதி. அவளிடம் பேரன்புகொண்டிருந்த அரசர் அவள் பெயர் என்றும் அழியாமல் இருக்க விரும்பி அதைக் கட்டினார். அதை, 20,000 வேலையாட்கள் பதினேழு வருஷகாலம் வேலை செய்து கட்டினார்கள். அதைக் கட்டுவதற்கு ஒன்பது கோடி ரூபாய் பிடித்தது. அது முழுவதும் சலவைக் கற்களினாலானது.

ஹாஜஹான்

அதையன்றி, அவர் ஆக்ராவில் முத்து மசூதி என்னும் வேறொரு சிறந்த கட்டிடத்தையும் கட்டிவைத்திருக்கிறார். டில்லியிலுள்ள ஜும்மா மசூதியும் அவர் கட்டியதேயாகும். அது ஒரு பெரிய கற்பாறையின்மீது வெகு அழகாகக் கட்டப்பட்டு, இரண்டு கோபுரங்களையும், மூன்று சலவைக்கல் சிகரங்களையும் பொருந்தியிருக்கின்றது. அதன் முற்றத்தில் ஏககாலத்தில் அநேக ஆயிரம் பெயர்கள் உட்கார்ந்து ஜபம் செய்யலாம்.

ஷாஜஹானுடைய மயிலாசனம் முழுவதும் பொன்னினாற் செய்யப்பட்டும், நவரத்னங்கள் இழைக்கப்பட்டும் பொலிந்திருந்தது. அதன் விலை சுமார் ஒரு கோடி ரூபாய் இருக்கும். இவற்றை

யெல்லாம் செய்வித்து, அவர் நாட்டின் நானுவித கைத்தொழில் களையும் ஆதரித்து முன்னுக்குக் கொண்டுவந்திருக்கிறார்.

ஷாஜஹான் தமது ஆட்சியின் முதலில், சுமார் பதினொரு வருஷங்கள் வரையில், ஆக்ராவைத் தமது ராஜ்யத்தின் தலைநகரா கக்கொண்டிருந்தார். அந்நகரம் கோடையில் அதிக வெப்பமாக விருந்தது. அன்றியும், அதன் வீதிகள் சிறியனவாகவும், கோட்டைக் குள்ளிருந்த இடம் போதாமலும் இருந்தன. அதனால், ஷாஜஹான் டில்லியைத் தமது ராஜ்யத்தின் தலைநகரமாகச் செய்துகொண்டு,



தாஜ்மஹால்

அங்கே யமுனா நதி தீரத்தில் ஷாஜஹான்பாத் என்னும் ஓர் அழ கிய நகரத்தை நிருமித்தார். அது மூன்றாம் பிறைச் சந்திரனைப் போன்று வளைந்த வடிவமாகக் கட்டப்பட்டது. அதன் சுற்றளவு சுமார் ஏழு மைல் இருக்கும். நகரத்தைச் சுற்றிக் கல்லினாலாக்கப் பட்ட மதில் இருந்தது. அந்நகரத்தின் கோட்டை சுமார் ஒன் றரை மைல் சுற்றளவை யுடையது. அதைச் சுற்றி 60 அடி முதல் 75 அடி வரையில் உயரமுள்ள மதிலும், அதை யடுத்து 75 அடி அகலமும் 30 அடி ஆழமும் உள்ள அகழியும் அமைந்திருந்தன.

மதிலில் அநேக சிகரங்கள் கட்டப்பட்டிருந்தன. அதில் ஐந்து வாயில்கள் இருந்தன. நகரம் கோட்டைக்கு வெளியில் இருந்தது. அங்கே பிரபுக்களின் மாடமாளிகைகளும், பள்ளிவாசல்களும், நந்தவனங்களும், கடைவீதிகளும் ஒழுங்காகக் கட்டப்பட்டிருந்தன. வீதிகள் அகலமாயும், சாலையின் இருபுறங்களிலும் நிழல் தரும் மரங்கள் வளர்க்கப்பட்டும் இருந்தன. சில வீதிகள் சுமார் 80 அடி அகலம் இருக்கும்.

கோட்டைக்குள் அரண்மனையும், அந்தப்புரங்களும், மண்டபங்களும், அழகிய வீதிகளும், தோட்டங்களும், பள்ளிவாசலும், ஸ்நான கட்டங்களும் அமைந்திருந்தன. யமுனா நதியிலிருந்து ஒரு வாய்க்கால் வெட்டப்பட்டு, அதன் தண்ணீர் கோட்டைக்குள் பாய்ந்தோடிச் சென்றது. அந்த வாய்க்கால் முழுவதும் சலவைக் கற்களினால் கட்டப்பட்டிருந்தது.

அங்கிருந்த மண்டபங்களுள் அரசர் கொலு வீற்றிருக்கும் சபா மண்டபம் எல்லாவற்றிலும் மேலானது. அதற்குத் தீவானி ஆம் என்று பெயர். அதன் சிகரத்தின் உட்புறம் பொன், வெள்ளித் தகடுகளினால் மூடப்பட்டும், மிகவும் அழகாகச் சித்திரிக்கப்பட்டும் இருந்தது. அதன் கம்பங்கள் பொன்னினாற் செய்யப்பட்டும், ரத்னங்கள் இழைக்கப்பட்டும் இருந்தன. அந்த மண்டபத்தில்தான் அரசருடைய மயிலாசனம் வைக்கப்பட்டிருந்தது. அதற்குப் பின்னால், அந்தப்புரஸ்திரீகள் இருக்கும் ரங் மஹால், சோடா ரங் மஹால் என்னும் அழகிய கட்டிடங்கள் இருந்தன. அவற்றின் மேற் கூரையின் அடிப்புறம் வெள்ளித் தகட்டினால் மூடப்பட்டிருந்தது.

இவைகளையன்றி, அரசர் மந்திராலோசனை செய்யும் ஷா மஹால் என்பதும், ஹம்மாம் என்னும் ஸ்நான கட்டங்களும், மோதி மஸ்ஜித் என்னும் மசூதியும், மோதி மஹாலும் உயர்ந்த சலவைக் கற்களினாலும் பொன், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களின் தகடுகளினாலும் கட்டப்பட்டிருந்தன. இவற்றை இத்தலி முதலான மேனாடுகளிலிருந்தும் வரவழைக்கப்பட்ட சிற்பிகளும், சித்திரிப்பவர்களும் கண்ணையும், கருத்தையும் ஒருங்கே கவரும் வண்ணம்

அமைத்து வைத்தார்கள். அவற்றின் வனப்பையும், அங்கிருந்த நந்தவனங்களின் சிறப்பையும் வருணித்துச் சொல்லுவதும் எளிதல்ல.

ஷாஜஹானுக்குப் பின்பு பட்டத்துக்கு வந்த முகலாய அரசர்களிற் சிலர் கோட்டைக்குள் இன்னும் அநேக புதிய கட்டிடங்களைக் கட்டுவித்தார்கள். இவற்றில் பல சிப்பாய்க் கலகத்தின் பொழுதும், மற்ற காலங்களிலும் இடித்துத் தகர்க்கப்பட்டுப் பாழாய்ப் போயின. என்றாலும், நாம் ஷாஜஹான் உண்டாக்கின கோட்டையின் பெருமையை உணர்த்தும் பல சின்னங்களை இன்றும் காணலாம்.

ஷாஜஹானுக்கு அவருடைய கடைசி காலத்தில் அவருடைய பிள்ளைகளினால் மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அவர் வியாதியினால் வருந்திக் கிடக்கையில், அவர்கள் சிம்மாசனத்தைக் குறித்துத் தமக்குள் சண்டையிடலானார்கள். அவர்களில் ஔரங்கஜீப் என்பவர் தமது சகோதரர்களை வென்றும், தந்தையைச் சிறையிலிட்டும் ராஜ்யபாரம் நடத்திவந்தார். ஷாஜஹான் ஏழு வருஷ காலம் சிறையிலிருந்து மிகுந்த துன்பத்தை அனுபவித்து, கி. பி. 1666-ல், காலஞ்சென்றார். அவருடைய உடலும் தாஜ்மஹாலிலேயே அடக்கம் செய்யப்பட்டது.

பயிற்சிகள்

1. ஷாஜஹான் போர்ச்சுகேயரிடம் கோபம் கொள்வானேன்? கோபித்து அவர் செய்தது என்ன?

2. அவர் கட்டுவித்த சிறந்த கட்டிடங்கள் யாவை?

3. ஷாஜஹான்பாத்தை வருணித்துக் கூறுக.

4. ஷாஜஹானின் கடைசிகாலம் எவ்வாறு இருந்தது? ஏன்?

15. ஒளரங்கஜீப்

(கி. பி. 1658—கி. பி. 1707)

தந்தையைச் சிறையிலடைப்பித்தும், சகோதரர்களைக் கொன்றும் சிம்மாசனம் ஏறிய ஒளரங்கஜீப் கி. பி. 1658 முதல் கி. பி. 1707 வரையில் ராஜ்யபாரம் செய்தார். அவர் மிகுந்த பராக்கிரமம் உடையவர். அவர் அரசு செலுத்துவதில் கை தேர்ந்தவர். அவர் நியாயம் நடத்துவதில் பக்ஷபாத மில்லாதவர். அவர் தமது கடமைகளை ஊக்கத்துடன் செய்யும் இயல்பை யுடையவர். அவர் சிற்றின்பங்களை முற்றும் வெறுத்தவர். அவர் மது மாமிசங்களைக் கனவிலும் விரும்பாதவர். அவர் குடிகளின் நலத்தையே நாடி உழைத்தவர். அவர் தம் பொருட்டுப் பொக்கிஷத்திலிருந்து பணத்தைச் செலவு செய்யாமல், தொழில் முன்னிலையில் பணஞ் சம்பாதித்துச் செலவு செய்து வந்தார். அவர் கொலுவீற்றிருக்கையிலன்றி, மற்றச் சமயங்களில் விலையுயர்ந்த ஆடைகளையாவது ஆபரணங்களையாவது அணிவது இல்லை. அவர் கல்வியிற் சிறந்தவர். அவர் அஞ்சாத நெஞ்சம் படைத்தவர். அவர் ராஜ தந்திரங்களில் வல்லவர். அவர் இதர மதங்களிடத்துப் பெரும் பகையுள்ளவர். அவருக்குக் குர் ஆன் மனப்பாடம். அவர் அதனை இருமுறை எழுதி அந்தப் பிரதிகளை மெக்காவுக்கும், மெடீனுவுக்கும் அனுப்பிவைத்தார்.



ஒளரங்கஜீப்

இவ்வாருன பல நற்குணங்களையும் பொருந்தியிருந்த அவர், ஒருவரையும் நம்புவதில்லை. அன்றியும், அவர் முகம்மதிய மதம்

தவிர மற்றவைகள் யாவும் பொய்யென்று தீர்மானமாக எண்ணி யிருந்தார். இவைகளே அவர் துன்பப்படவும், முகலாய ராஜ்யம் அழியவும் முக்கியக் காரணங்களாயின. அவர் வெகு நாட்களாக ராஜாங்க உத்யோகங்களிலிருந்த ஹிந்துக்களையும், பாரஸிகர்களையும் அவரவர்களுடைய வேலைகளிலிருந்தும் நீக்கிவிட்டார். ஹிந்துக்கள் தங்களுடைய பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு மத போதனை செய்யக்கூடாது என்று உத்தரவு செய்தார். அவர் அக்பர் காலம் முதல் தள்ளுண்டிருந்த ஜஸியா என்னும் தலைவரியை மீண்டும் விதித்தார். அவர் ராஜா ஜஸ்வந்த ஸிங் என்னும் ஜோதிபுரத்தரசர் இறந்துவிட்டபொழுது, அவருடைய பிள்ளைகளை முகம்மதியர்களாகும்படி கட்டாயப்படுத்தினர். அதனால், ராஜபுத்திரர்களுக்கு அவர்மீது பகை உண்டாயிற்று. இவர்களை யல்லாது, மஹாராஷ்டிரரும் அவருக்குப் பெரும் பகைவராயினர். இவர்களைப் பற்றின விவரம் பின்னுற் கூறப்படும்.

அவர் இவ்வாறு தாம் செய்துவந்த காரியங்களை யெல்லாம் தமது மேலான கடமைகள் என்று எண்ணியிருந்தார். அவருக்குத் தாம் அவற்றைச் செய்ததனாலுண்டான தீமைகள் சிறிதும் புலப்படவில்லை. பிற மதங்களில் அவருக்கிருந்த பகை அவருடைய கண்களை முற்றும் மறைத்துவிடவும், அவர் தாம் செய்த தீங்குகளைச் சிறிதும் கண்டிலர். உற்று நோக்கின், நாம் அவர்மீது இரக்கம் கொள்ளவேண்டுமேயன்றி, அவரைப் பகைப்பது தவறாகும்.

ஔரங்கஜீப் ராஜபுத்திரர்களையும், மஹாராஷ்டிரர்களையும் பகைத்துக்கொண்டதனால், அவருக்குச் சொல்லரிய துன்பங்கள் உண்டாயின. அவருடைய பகை அதனுடன் நின்றுவிடவில்லை. அவர் பீஜப்பூர், கோலகோண்டா நாட்டு முகம்மதிய சுல்தான்களுடனும் சண்டைசெய்யத் தலைப்பட்டார்.

பீஜப்பூரும், கோலகொண்டாவும் தனி ராஜ்யங்களாகப் பலத்திருந்தது முகலாய ராஜ்யத்திற்கு நன்மையே ஆயிற்று. அந்நாட்டரசர்கள் பகைவர்களைத் தங்கள் நாடுகளின் வழியாகச் செல்லவிடாதிருந்தவரையில், முகலாய ராஜ்யத்திற்குத் தக்ஷிணத்திலிருந்து சத்துருக்கள் வரக்கூடாமல் இருந்தது. ஔரங்கஜீப் அவற்றை

வென்று, தமது ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டதும், மஹாராஷ்டிரர்கள் அவர் நாட்டின்மீது எளிதில் படையெடுத்துச் செல்ல வழி உண்டாகிவிட்டது.

ஒளரங்கஜீப் முதலில் பீஜப்பூரின்மீது படையெடுத்துச் சென்று வென்று, அதைக் கி. பி. 1686-ல் தமது ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார். அவர் மிகவும் வனப்பு வாய்ந்த அரண்மனைகளும், மாளிகைகளும், கோபுரங்களும் நிறைந்து பொலிந்திருந்த பீஜப்பூர் நகரை இடித்துத் தகர்த்துப் பாழாக்கிவிட்டார்.

பின்னர், அவர் கோலகொண்டாவின்மீதும் படையெடுத்துச் சென்றார். அவர் அதை எளிதில் ஜயிக்கமுடியவில்லை. அதனால், அவர் அந்நாட்டரசரின் போர்வீரர்களுக்கு லஞ்சம் கொடுத்தும், ஆசைகள் காட்டியும் தம் வசப்படுத்திக்கொண்டார். ஆனால், அப்துர் ரஸாக் என்னும் அமீர் மட்டில் தமது இறைவனுக்குத் துரோகம் செய்யாமல், கடைசிவரையில் உண்மையாகச் சண்டை செய்தார். அவர் சண்டையில் காயப்பட்டு விழுந்தபோது, அவருடைய உடம்பில் எழுபதிற்கும் அதிகமான காயங்கள் இருந்தன. ஒளரங்கஜீப் அவருடைய உண்மையையும், வீரத்தையும் கண்டு வியந்து, தமது வைத்தியரை யனுப்பி அவருடைய காயங்களை ஆற்றுவித்தார். ரஸாக் விழுந்துவிடவும் கோலகொண்டா அரசர் சிறையுண்டார்; அந்நாடும் ஒளரங்கஜீப்புக்குச் சொந்தமாய்விட்டது. அதனுடன் அவருக்கு ஏழுகோடி ரூபாயும், முன்னிலும் அதிகமான துன்பங்களும் கிடைத்தன.

ஒளரங்கஜீப்பின் பகைவர்கள் அனைவரினும் தலைசிறந்திருந்த மஹாராஷ்டிர வரசரான சிவாஜி இறந்துவிட்டபொழுது, ஒளரங்கஜீப் தாம் இனி மஹாராஷ்டிரர்களை எளிதில் வென்றுவிடலாம் என எண்ணினார். ஆனால், அந்த எண்ணம் ஈடேறவில்லை. அவர் சுமார் இருபது வருஷகாலம் மஹாராஷ்டிரர்களுடனும், தக்ஷிண முகம்மதியர்களுடனும் சண்டையிட்டு வருகையில், வடக்கில் ராஜபுத்திரர்களும், ஸீக்கர்களும் அதிகார வளர்ச்சியைப்பெற்று அடிக்கடிக் கலகஞ்செய்து வந்தார்கள். அவர் மேற்கொண்ட காரியங்கள் எல்லாம் அவருக்குத் தீமையையே விளைத்தன. அவர்

தமது கடைசி காலத்தில் பல துன்பங்களை அனுபவித்து, எவரையும் நம்பாதவராய்த் தமது பிள்ளைகளையே சிறையிலிட்டும், பலராலும்



வெறுக்கப்பட்டும், சொல்லரிய மனவருத்தத்துடன் கி. பி. 1707-ல் உயிர் துறந்தார்.

அவர் தாம் சாவதற்குமுன்பு தமது பிள்ளைக்கு எழுதிய நிருபத்தில், "நான் வரும்பொழுது ஒன்றையுங் கொண்டுவரவில்லை. ஆயினும், நான் போகும்பொழுது என்னால் சுமக்க முடியாத பாவச் சுமையைச் சுமந்து போகிறேனே! நான் மகாபாபி. கடவுள் எனது உள்ளத்தில் இருந்தும் நான் அவரை அறியவில்லை. அவர் என்னை எவ்வாறு தண்டிப்பாரோ நான் அறியேன். என்றாலும், நான் அவரையேதான் நம்பியிருக்கிறேன்" என்று எழுதியிருக்கிறார்.

பயிற்சிகள்

1. ஔரங்கஜீப்பின் சிறந்த குணங்களை விவரித்து எழுதுக.
2. அவரிடம் இருந்த குறைகள் யாவை?
3. ராஜபுத்திரரும், மஹாராஷ்டிரரும் அவரைப் பகைப்பானேன்?
4. அவர் பீஜப்பூரையும், கோலகொண்டாவையும் வெல்லுவானேன்?
5. அதன் பயன் என்ன?
6. அப்துர் ரஸாக் என் வந்துள்ளார்?

16. முகலாய ராஜ்யத்தின் அழிவு

ஔரங்கஜீப்புக்குப் பின்பு அவரது மைந்தர் பஹதூர்ஷா என்பவர் பட்டத்துக்கு வந்தார். அவருக்கு ஷாஹலம் என்றும் பெயருண்டு. அவர் ஐந்து வருஷங்கள்தான் ஆட்சி செய்தார். அதற்குள்ளேயே நாடெங்கும் கலகங்கள் உண்டாய்விட்டன. அவருக்குப்பின்பு கி. பி. 1719-க்குள், அதாவது ஏழு வருஷகாலத்தில் நான்கு அரசர்கள் பட்டத்துக்குவந்து ஒருவர் பின் மற்றொருவராக அனைவரும் கொலையுண்டு போனார்கள். அதன் பின்னர், முஹம்மதுஷா என்பவர் கி. பி. 1719-ல் பட்டத்துக்கு வந்து, கி. பி. 1748 வரையில் ராஜ்யபாரம் நடத்தினார். அவருடைய ஆட்சியில் வங்காளமும், அயோத்தியும் முகலாய ராஜ்யத்தினின்றும் பிரிந்து தனித்தனி ராஜ்யங்கள் ஆய்

விட்டன. அப்பொழுதே, அசப் ஜா என்பவர் சுயாதீனத்தையடைந்து, ஹைதராபாத் நிஜாம் ஆனார். அவருடைய சந்ததியார்கள் அவர் உண்டாக்கின ராஜ்யத்தை இன்னமும் ஆட்சிசெய்து வருகிறார்கள்.

இவ்வாறான சமயத்தில், நாட்டிற்கு ஒரு பெரிய துன்பம் நேரிட்டது. கி. பி. 1738-ல், நாதர்ஷா என்னும் பாரஸிக அரசன் ஆப்கானிஸ்தானம் முதலான மேனாடுகளை ஜயித்துக்கொண்டு, இந்தியாவின் மீது படையெடுத்து வந்தான். அவன் முகம்மதுஷாவைச் சண்டையில் வென்று, டில்லிக்கு வந்து குடிகளைக்கொன்றும், அவர்களுடைய பொருள்களைக் கொள்ளையடித்தும் துன்புறுத்தினான். அவன் இந் நாட்டிலிருந்து கவர்ந்து சென்ற பொருள் சுமார் முப்பது கோடி ரூபாய் மதிப்பு இருக்கும். அவன் ஷாஜஹானுடைய மயிலாசனத்தையுங்கூட எடுத்துச் சென்றுவிட்டான். அவனுடைய படையெழுச்சிக்குப் பின்னர், முகலாய ராஜ்யம் முன்னிலும் அதிகமாகச் சிதைந்து போகலாயிற்று.

நாதர்ஷாவுக்குப் பின்பு அஹமதுஷா துரானி என்பவன் பாரஸிகம், ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகளுக்கு அரசன் ஆனான். துரானியும் நாதர்ஷாவைப்போன்று இந்தியாவின்மீது படையெடுத்து வந்தான். அவனுக்கு இந்நாட்டில் ஏராளமான பொருள் கிடைத்ததனாலும், அவனை எதிர்த்துச் சண்டைசெய்ய வல்லவர்கள் அப்பொழுது எவரும் இல்லாததனாலும், அவன் மேலும் மேலும் வரத் தலைப்பட்டான். கி. பி. 1747-ல் முகம்மதுஷாவின் மைந்தரான அஹமதுஷா என்பவர் அவனை ஸிர்ஹிண்ட் என்னுமிடத்தில் சண்டையில் தோற்கஅடித்துத்துரத்தினார். மறுவருஷத்தில் முகம்மதுஷா இறந்துபோனதனால், அஹமதுஷா அரசரானார். அவருக்குப் பின்பு டில்லியில் சிம்மாசனம் ஏறிய ஆலம்கீர் II-ன் ஆட்சியில், கி. பி. 1756-ல், துரானி டில்லியில் பிரவேசித்து ஜனங்களைக் கொன்றும், அவர்களுடைய பொருள்களைக் கொள்ளைகொண்டும் ஏராளமான திரவியத்துடன் தன்னூருக்குச் சென்றான். அதற்குப் பின்னரும் அவன் நமது நாட்டின்மீது பன்முறை படையெடுத்து வந்து எண்ணரிய தீமைகளைச் செய்தான்.

கி. பி. 1759-ல், அவன் இன்னுமொருமுறை படையெடுத்து வந்து பஞ்சாபிலிருந்த மஹாராஷ்டிரர்களை வென்று, அவர்களிட மிருந்து லாகூரைப் பிடுங்கிக்கொண்டான். அவன் அதன்பிறகு டில்லியை நோக்கிவந்தபொழுது, ஆலம்கீரின் மந்திரியான காஸி உத்தீன் என்பவன் தனது எஜமானனைக் கொன்றுவிட்டுத் தானே அதிகாரம் செலுத்தி வந்தான். அப்பொழுது ஆலம்கீரின் குமார ரான ஷாஹலம் II பயந்து வங்காளத்துக்கு ஓடிப்போய்விட்டார். துரானி டில்லியை நோக்கி வருவதைக் கேள்வியுற்ற காஸி உத்தீன் சிம்மாசனத்தைவிட்டு, உயிர் தப்பிப்பிழைக்க ஓடிப்போய்விட்டான். அதனால், துரானி டில்லிக்கு வந்தபொழுது, முகலாய சிம்மாசனம் காலியாய்க் கிடந்தது. முகலாய ராஜ்யத்தின் கதியும் மிகுந்த கேவல மாயிருந்தது. அப்பொழுது மஹாராஷ்டிரர்கள் மிகுந்த அதிகார வளர்ச்சியைப் பெற்றிருந்ததனால் காஸி உத்தீன் அவர்களைத் துரானிக்கு விரோதமாகத் தனக்கு உதவிபுரியும்படி வேண்டினான். அவன் அவர்களைப் பஞ்சாபை வென்று வரும்படி சொல்லவும், ரகுநாதராவ் சென்று லாகூரைக் கைப்பற்றிக்கொண்டார். அப்பொழுது இந்தியாவின்மீது ஆறுவது முறை படையெடுத்துவந்த துரானி மஹாராஷ்டிரர்களை லாகூரினின்றும் துரத்திவிட்டு, ஸிந்தியாவையும் ஹோல்காரையும் தோற்க அடித்துவிட்டான். அப்பொழுது மஹாராஷ்டிரருடைய அதிகாரப் பெருக்கைக்கண்டு அவர்கள்மீது அழுக்காறுகொண்டிருந்த பல முகம்மதிய சிற்றரசர்கள் துரானியுடன் சேர்ந்துகொண்டார்கள்.

கி. பி. 1761-ல், மஹாராஷ்டிரருக்கும் அஹமதுஷா துரானிக்கும் பானிப்பட்டில் பெரும்போர் நிகழ்ந்தது. அதில் மஹாராஷ்டிரர்கள் அடியோடு தோற்றுப்போனார்கள். அச்சண்டையில் ஆயிரக்கணக்கான மஹாராஷ்டிரப் போர்வீரர்கள் மடிந்துபோனார்கள். சீக்கிரத்திலேயே பீஷ்வாவும் சோகத்தினால் இறந்துபோனார். அவருடன் மஹாராஷ்டிரருடைய மேன்மையும் இறந்துபட்டது.

துரானி தான் கஷ்டப்பட்டு ஜயித்தநாட்டை ஆட்சி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யாமல், தனக்குக்கிடைத்த கொள்ளையுடன் தன்னூருக்குத் திரும்பிச் சென்றுவிட்டான். பானிப்பட்டுச் சண்டை

யில் மஹாராஷ்டிரர்கள் தங்கள் சிறப்பை அடியோடு இழந்துவிட்டனர். அதற்கு முன்னமேயே முகலாய அதிகாரம் முற்றும் குறைந்துவிட்டது. அதனால் அப்பொழுது வியாபாரத்தின் பொருட்டு நமது நாட்டிற்கு வந்து கொஞ்சங் கொஞ்சமாக நாடுகளைச் சம்பாதித்தும், அதிகார வளர்ச்சியைப் பெற்றும் வந்த ஆங்கிலேயர்கள் ஒரு பெரிய ஸாம்ராஜ்யத்தைச் சம்பாதித்துக் கொண்டார்கள். இதுவும் ஒரு பெரிய அதிர்ஷ்டமே யாகும் அல்லவா ?

பானிப்பட்டுச் சண்டைக்குப் பின்பு முகலாய ராஜ்யம் என்பது கொஞ்சமும் இல்லை. ஆயினும், சுமார் நூறு வருஷங்கள் வரையில் முகலாய மன்னர்கள் மட்டில் இருந்து வந்தார்கள். ராஜ்யமில்லாமல் ராஜாக்களாக இருந்தவர்களில் ஷாஹலம் II என்பவரே முதலாமவர். அவர் கி. பி. 1806 வரையில் முகலாய சக்ரவர்த்தி என்னும் பெயரை வகித்துவந்தார். அவர் கி. பி. 1764-ல், அதிகாரம் பெற வேண்டும் என்னும் ஆசையினால் அயோத்தி நவாப்புடன் சேர்ந்து கொண்டு ஆங்கிலேயரோடு சண்டைசெய்தார். அவர் தோற்றுப் போய்விட்டதனால், ஆங்கிலேயரோடு சமாதானஞ் செய்துகொண்டு, அவர்களிடமிருந்து உபகாரச் சம்பளம்பெற்று அல்லாஹாபாத்தில் காலங்கழித்து வந்தார்.

அவர் இன்னும் ஒருமுறை மாகாதஜி ஸிந்தியா என்னும் மஹாராஷ்டிரத் தலைவருடன் சேர்ந்துகொண்டு அதிகாரம் பெறவேண்டுமென்று செய்த முயற்சிகளும் வீணாயின. ஸிந்தியா அவரை அல்லாஹாபாத்திலிருந்து டில்லிக்கு அழைத்துவந்து, மிகச்சிறிய நாட்டைவென்று, அதையும் அவர் பெயரைச் சொல்லிக்கொண்டு தாமே ஆட்சிசெய்து வந்தார். ஒருகால் ஸிந்தியா புனாவுக்குச் சென்றிருந்தபொழுது, ரோஹில்லன் ஒருவன் ஷாஹலத்தின் கண்களைக்குத்திக் குருடாக்கிவிட்டான். அதன் பிறகும் அவர் பல துன்பங்களை அனுபவித்துக் கி. பி. 1806-ல் இறந்துபோனார். அவருக்குப் பின்பு அவருடைய மைந்தரான அக்பர் II டில்லிச் சக்ரவர்த்தி என்னும் பெயரையும், ஆங்கிலேயர் கொடுத்துவந்த உபகாரச் சம்பளத்தையும் பெற்றுக்கொண்டு, கி. பி. 1837 வரை

யில் வாழ்ந்திருந்தார். அவர் இறந்ததும், அவருடைய மைந்தரான பஹதுர்ஷா II அந்த இரண்டு உரிமைகளையும் தாம் பெற்றுக் கொண்டு வாழ்ந்துவந்தார். ஆனால், அவர் தமது முன்னோர்கள் இழந்துவிட்ட அதிகாரத்தைத் தாம் மீட்டுக்கொள்ளவேண்டும் என்னும் ஆசையினால் கி. பி. 1857-ல் உண்டான சிப்பாய்க் கலகம் என்னும் சுதந்திரப்போரில் சேர்ந்துகொண்டு ஆங்கிலேயருக்கு விரோதமாகச் சண்டைசெய்தார். அப்பொழுது அவர்கள் அவரை இந்நாட்டைவிட்டு ரங்கூனுக்கு அனுப்பி விட்டார்கள். அங்கே அவர் சில வருஷங்கள் இருந்து, கி. பி. 1862-ல் இறந்துபோனார். அதற்கு முன்னமேயே அவருடைய மகனும், பெயரனும் மரண தண்டனையை அடைந்துபோனார்கள். அதனால், அவருடன் முகலாய சக்ரவர்த்தி என்னும் பெயரும் அழிந்துபோயிற்று.

ஒரு ராஜ்யம் வேரூன்றி நிலைபெற்றிருப்பதற்கு நாட்டுக்குடிகளின் அன்பும், ஆதரவும், அபிமானமும் வேண்டும். அவ்வாறின்றி, முகலாய ராஜ்யத்தின் வலிமை அதன் அரசர்களுடைய புஜபலத்தையும், திறமையையும், குணத்தையும் பொருந்தி யிருந்தது. அதனால், அது ஔரங்கஜீப்பின் காலத்திலேயே, அவருக்கு வயது முதிர்ந்து பலங்குன்றிவிட்டபொழுது, சிதைவுபடத் தலைப்பட்டது. அல்லாமலும், முகலாயப் பிரபுக்கள் மிதமின்றி உண்டும், குடித்தும் செல்வச் செருக்கில் உயிர் வாழ்ந்து வரவும், அவர்களுடைய பலம் குன்றிவிடலாயிற்று. அவ்வாறான சமயத்தில் வலிமையும், சிக்கனமும் மிக்க மஹாராஷ்டிரர்கள் அவர்களுக்குப் பகைவர்களாக ஏற்பட்டுவிட்டார்கள். இவற்றையன்றி, ஔரங்கஜீப் தமது தலைநகரைவிட்டுச் சென்று, தக்ஷிணத்தில் வெகுநாட்கள் வரையில் சண்டையிட்டு வந்தபொழுது, அவருடைய உத்யோகஸ்தர்கள் லஞ்சம் வாங்கியும், குடிகளை வருத்தியும், பணத்தை வீணில் செலவு செய்தும் ராஜ்யத்திற்கு நாசத்தை விளைத்தார்கள். அரசருடைய போர்ப்படைகளின் பலம் குன்றிவிட்டதும், பிந்திய முகலரசர்கள் ஹிந்துக்களின் ஆதரவை இழந்துவிட்டதும், பட்டத்தைக் குறித்து அடிக்கடிச் சண்டைகள் உண்டானதும், முகலரசர்களுக்குக் கப்பற் படைகள் இல்லாதிருந்ததும், முகலாய ராஜ்யம் அழிந்துபோனதற்குக் காரணங்களாயின.

பயிற்சிகள்

1. நாதர்ஷா யார்? அவன் செய்த கொடுமைகள் என்ன?

2. இரண்டு அஹமதுஷாக்களின் சண்டை எப்பொழுது, எங்கே நடந்தது?

3. ரகுனாத ராவ் எப்போது, என் லாகூரைக் கைப்பற்றிக் கொண்டார்?

4. மூன்று பானிப்பட்டுச் சண்டைகளும் எவ்வெப்பொழுது, யார் யாருக்கு, என் நடந்தன? அவற்றின் முடிவு என்ன?

5. மாகாதஜி ஸிந்தியா என் வந்துளார்?

6. முகலாய ராஜ்யம் அழிந்து போனதின் காரணங்கள் என்ன?

17. மஹாராஷ்டிரர் சரித்திரம்—சிவாஜி

மஹாராஷ்டிரம் கரடுமுரடான மலைப்பிரதேசம். அதன் பரப்புச் சுமார் லக்ஷம் சதுரமைல் இருக்கும். அதில் நூற்றுக்கணக்கான குன்றுகளும், அவற்றின் இடையில் பல பள்ளத்தாக்குக்களும் இருந்தன. குன்றுகளின்மேல் சத்துருக்கள் எளிதில் முற்றுகை செய்து பிடித்துக்கொள்ள முடியாதனவான பல கோட்டைகள் இருந்தன.

மஹாராஷ்டிரர்கள் தங்கள் மலைக்கோட்டைகளிலிருந்து வெளியேவந்து, பகைவர்களைச் சண்டையிட்டுவென்றும், அவர்கள் பொருள்களைக் கொள்ளைகொண்டும் திரும்பியோடிச் சென்றுவிடுவார்கள். அப்பொழுது அவர்களைத் துரத்திச்செல்லுவது முடியாத காரியம். அந்நாட்டினுடைய பழக்கம் சிறிதும் இல்லாத அந்நியர்கள் செங்குத்தான அம்மலைகளின்மீது ஏறிச் செல்லவாவது, இடையிடையேயுள்ள காணாறுகளைக் கடக்கவாவது, ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்லும் வழிகளைக் கண்டறியவாவது முடியாது. அதனால், அவர்கள் பகைவர் பயமின்றிச் சுகமாக வாழ்ந்து வந்தார்கள்.

அந்நாட்டின் இவ்வாறான இயற்கையமைப்பும், மிதசீதோஷ்ணமும் புஜபலபராக்கிரமம் பொருந்திய வீரர்களின் உற்பத்திக்கு

அனுகூலமாக இருந்தன. அல்லாமலும், அந்நாட்டுக் குடிகள், முகம்மதியப் படையெழுச்சியினால் உண்டான தீமைகள் எதுவுமின்றித் தங்களுடைய மதம், பாஷை, கொள்கை, கட்டுப்பாடு முதலியனவற்றைச் சிறிதும் இழந்துவிடாமலும், முகம்மதியக் கலப்பில்லாமலும், ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தார்கள். அவர்களிற் பலர் முகம்மதியர்களினால் சமமாக மதிக்கப்பட்டும், அவர்களுடைய சம்ஸ்தானங்களில் உயர்ந்த உத்யோகங்களில் நியமிக்கப்பட்டும் வந்ததனால், அந்தஸ்திலும், செல்வாக்கிலும் உயர்ந்து இருந்தார்கள்.

இப்படி முதன்மைபெற்றிருந்த மஹாராஷ்டிராக் குடும்பங்களுள் பான்ஸ்ல வம்சம் ஒன்று. அந்த வம்சத்தில் ஷாஜி என்றொருவர் இருந்தார். அவர் பீஜப்பூரரசருடைய சேனைத்தலைவராக இருந்தார். அவருடைய மனைவியின் பெயர் ஜிஜிபாய். அந்தத் தம்பதிகளுக்குக் கி. பி. 1627-ல், உண்டான குழந்தையே உலகப்பிரசித்திபெற்று, இன்றைக்கும் கொண்டாடப்பட்டுவரும் சிவாஜி என்பவர்.

ஷாஜி, சிவாஜியைத் தமது ஜாகீரைப் பார்த்துவந்த தாதாஜி கோன தேவரிடம் ஒப்புவித்தார். அவரும் ஜிஜிபாயும் பயிற்றுவித்ததின் பயனாக, சிவாஜிக்கு அறிவும், ஊக்கமும், விடாமுயற்சியும், மதாபிமானமும், நல்லொழுக்கங்களும் உண்டாயின. அவருக்கு இராமாயண, மஹாபாரதக் கதைகளைக் கேட்பதில் பிரியம் அதிகம். அவருக்குத் துக்காராம், ராமதாஸர் முதலான பெரியோர்களின் நட்பு உண்டாகவும், அவர் தெய்வபக்தி, தேசாபிமானம், நடுவு நிலைமை முதலிய நற்குணங்களைப் பொருந்தப் பெற்றார். அவர் வில், வேல், வாள் முதலிய ஆயுதங்களிலும் பயின்று பெரிய யுத்தவீரர் ஆனார்.

சிவாஜி சிறிதும் சுயநலம் கருதாதவர். அவர் மஹாராஷ்டிர முன்னேற்றத்தில் ஈடுபட்டு, அதன் பொருட்டுப் பெரும்பாடுபட்டார். அவர் தமது நோக்கத்திற்கு இணங்கி வந்தவர்களை மதபேதமின்றி, தம்முடன் சேர்த்துக்கொண்டார். அவர் தம் எண்ணத்திற்கு மாறாக நடப்பவர்கள் தமது இனத்தினராக இருந்தாலும், அவர்களை நிராகரித்துத் தள்ளியும், ஓங்கவொட்டாமல் தடுத்தும்

வந்தார். அவரிடம் ஓர் ஒப்பற்ற வசீகர சக்தி இருந்தது. அதனால், அவரை வந்தடைந்தவர்கள் ஒருபொழுதும் அவரை விட்டகன்றது இல்லை. அவர் தாம் மேற்கொண்ட எந்தக் காரியத்தையும், பகவான் முன்னின்று முடித்து வைப்பார் என்று தீர்மானமாய் எண்ணியிருந்தார். அவர் பவானியைத் தமது குலதெய்வமாகக்கொண்டு பூஜித்து வந்தார்.

சிவாஜி

சிவாஜிக்குச் சுமார் பதினாறு வயதானபொழுது, அவர் வயதிலும், ஆண்மையிலும் தம்மையொத்த சிறுவர்களைத் துணைசேர்த்துக் கொண்டு அயல் நாடுகளுடன் சண்டையிட்டுத் தமக்கென ஒரு ராஜ்யத்தைச் சம்பாதிக்க ஆரம்பித்தார். அவர் பீஜப்பூரரசருக்குச்

சொந்தமான சில கோட்டைகளைப் பிடித்துகொண்டபொழுது, அவ்வரசர் சிவாஜியைத் தண்டித்துவரும்படி அப்ஸல்கான் என்பவரை அனுப்பினர். ஆனால், அவர் சிவாஜியின் கையினால் கொலையுண்டு போனார். அதன் பின்னர், பீஜப்பூரரசர் சிவாஜியுடன் சமாதானஞ்செய்துகொண்டு அவருக்குக் கொங்கிணி நாட்டைக் கொடுத்துவிட்டார்.

சிவாஜியின் அதிகாரப் பெருக்கைக்கண்டு பயந்த ஔரங்கஜீப், சிவாஜியைத் தண்டித்துவர ஷயிஸ்டகான் என்னும் தமது மாமனை யனுப்பினர். சிவாஜி அவரைத் திடீரென்று எதிர்த்துத் தாக்கித் துரத்திவிட்டார். அதன் பின்னர், சிவாஜி முகலாய மன்னர் தம்மை அடக்கி வருமாறு அனுப்பிய ஜயஸிங் என்பவருடன் சமாதானஞ் செய்துகொண்டு, ஒரு முறை தமது மகனுடன் டில்லிக்குச் சென்றார். ஔரங்கஜீப் அவர்களை அவமானப்படுத்திச் சிறையிலிட்டுவிட்டார். சிவாஜியும், அவர் மகனும் தந்திரமாகச் சிறையினின்றும் தப்பி ஓடிப்போய்விட்டார்கள். அவர் முகலாய மன்னரோடு சண்டைசெய்து வென்று, தமது கோபத்தைச் சிறிது தணித்துக்கொண்டார்.

கி. பி. 1674-ல் சிவாஜி ரைகார் கோட்டையில் மகுடஞ் சூட்டிக்கொண்டு மஹாராஷ்டிர அரசரானார். அப்பொழுது அவருடைய ராஜ்யம் வடக்கில் சூரத்திலிருந்து தெற்கில் ஹுப்ளி வரையிலும், கிழக்கில் பீஜப்பூர், கோலகொண்டாமுதல் மேற்கில் அரபிக்கடல் வரையிலும் பரவியிருந்தது. அந்த ராஜ்யத்தை அவர் ஆறு வருஷகாலம் மிக்க மேன்மையுடன் அரசு செலுத்தி வந்து, கி. பி. 1680-ல் காலஞ்சென்றார்.

சிவாஜி எல்லா மதத்தினரையும் பேதமின்றி உத்யோகங்களில் அமர்த்தி, அவர்களுக்குச் சம்பளங்கள் கொடுத்துவந்தார். அவர் வரிவசூலுக்கான ஏற்பாடுகளைத் திருத்தமாகச் செய்திருந்தார். அவர் தமது உத்யோகஸ்தர்கள் கொண்டொழுகவேண்டிய சட்டதிட்டங்களை நன்ருக வரையறுத்திருந்தார். அவர் கல்வியின் பொருட்டும், தேவாலயங்களின் பொருட்டும், ஏராளமான பணத்தைச் செலவு செய்தார். அவர் காலத்தில் ஹிந்துமதம் மிகவும் பரவிவரவும்,

அதைப் பல ஜாதியினரும் அனுஷ்டித்து வரலானார்கள். அப்பொழுதுதான் சங்கதேவர், முக்தாபாய், வேணுபாய், சொக்கமேளர் முதலிய பெரியோர்கள் தோன்றி, ஹிந்து மதத்தில் பக்தி மார்க்கத்தின் சிறப்பைச் சாமானிய ஜனங்களும் அறியும்படி எடுத்துப் புகட்டினார்கள்.

சிவாஜி முகம்மதியர்களைக் கௌரவமாக நடத்திவந்தாரென்றும், அவர் அவர்களுடைய குர் ஆனை பழித்தாவது, மசூதிகளை யிடித்தாவது தீங்கிழைக்கவில்லை யென்றும், அவர் பிறமாதர்களைத் தமது அன்னையாகவும், சகோதரிகளாகவும் எண்ணிவந்தார் எனவும், அவர் சண்டையிற் சிறைப்படுத்திய ஸ்திரீகளையும், குழந்தைகளையும் அன்புடன் நடத்திவந்தார் எனவும் முகம்மதிய சரித்திராசிரியர்களே சொல்லியிருக்கிறார்கள். சிவாஜி மன்னரின் பெருமையும், புகழும் எக்காலத்திலும் அழியத்தக்கனவல்ல.

பயிற்சிகள்

1. மஹாராஷ்டிர நாட்டைச் சிறிது வருணித்துக் கூறுக.
2. அது மஹாராஷ்டிரர் முன்னேற்றத்திற்கு அனுகூலமாக அமைந்தது எங்ஙனம்?
3. அப்ஸல்கானும், ஷயிஸ்டகானும் ஏன் வந்துள்ளார்கள்?
4. சிவாஜியினிடமிருந்த நற்குணங்கள் யாவை?

18. பீஷ்வாக்களும், மஹாராஷ்டிர அதிகாரம் பெருகிக் குன்றியதும்

சிவாஜிக்குப்பிறகு அவருடைய் மைந்தர் சாம்பாஜி மஹாராஷ்டிர அரசரானார். இவர் சிற்றின்பப் பிரியர். இவர் ஒரு நாள் மதுபானஞ்செய்து மெய்ம்மறந்து கிடக்கையில் ஔரங்கஜீப் இவரையும், இவரது மைந்தரான ஸாஹூவையும் சிறைப்படுத்திவிட்டார். முகலாய அரசர், சாம்பாஜி முகம்மதியராகும் பக்ஷத்தில் அவரைச் சிறைமீட்பதாகச் சொன்னார். அதைக்கேட்டு வெகுண்ட சாம்

பாஜி, ஔரங்கஜீப் அவரது பெண்ணைத் தமக்குத் தந்து மணஞ் செய்வித்தால் தாம் முகம்மதியராவதாக அறிவித்தார். அதன்மீது ஔரங்கஜீப் அடங்காக் கோபங்கொண்டு, சாம்பாஜியின் நாக்கை அறுத்துத் தலையையும் வெட்டிவிடும்படி ஆஜ்ஞாபித்தார். ஔரங்கஜீப் சாகுமளவும், ஸாஹு சிறையிலிருந்தார். பின்னர், அவர் விடுதலையைப் பெற்றுச் சிம்மாசனம் ஏறினார். ஸாஹுவும், அவருடைய தந்தையைப்போல், சிற்றின்பங்களில் நாட்டங்கொண்டிருந்தார். அதனால், ராஜ்ய பரிபாலனத்தைப் பீஷ்வா என்னும் அவருடைய முதன் மந்திரி நடத்திவந்தார்.

கி. பி. 1714 முதல் கி. பி. 1720 வரையில் பீஷ்வாவாக இருந்த பாலாஜி விசுவநாத் என்பவர் வெகு கெட்டிக்காரர். அவர் ராஜ்யத்தைச் செவ்வனே ஆட்சிசெய்து வந்தார். அவருக்குப்பின்பு பீஷ்வாவாக வந்த பாஜீராவ் I கி. பி. 1740 வரையில் அதிகாரம் செலுத்தி வந்தார். அவர் தமது சேனையைப் பலப்படுத்தி முகம்மதியருடைய அதிகாரத்தைப் பெருகவொட்டாமல் தடுத்துவந்தார். அவருடைய காலத்தில் பரோடா, குவாலியர், இந்தூர், பீரார் என்னும் நாடுகள் தனித்தனி ராஜ்யங்கள் ஆய்விட்டன. அவற்றிற்கு முறையே கேயிக்வாரும், ஸிந்தியாவும், ஹோல்காரும், பான்ஸ்லவும் தலைவர்கள் ஆனார்கள். இவர்கள் அனைவரும் முதலில் தாங்கள் வசூலித்துவந்த சவுத் என்னும் வரிப்பணத்தைப் பீஷ்வாவுக்குச் செலுத்தி வந்தார்கள். ஆனால், நாளடைவில், இவர்கள் தாங்கள் வசூலித்துவந்த பணத்தைத் தாங்களே வைத்துக்கொண்டுவிட்டார்கள்.

பாஜீராவுக்குப்பின்னர், அவரது மைந்தரான பாலாஜி பாஜீராவ் பீஷ்வாவாகக் கி. பி. 1761 வரையில் அதிகாரம் செலுத்திவந்தார். இவர் சிறந்த புத்திமான்; பேசுவதில் வெகு கெட்டிக்காரர். இவர் மற்றைய மஹாராஷ்டிரப் பிரபுக்களைத் தம்முடன்சேர்த்துக்கொண்டு எல்லோரும் ஒன்றுசேர்ந்து நடத்துவதான ஒரு சமஷ்டி துரைத்தன அமைப்பை உண்டாக்கினார். இவருடைய காலத்தில் மஹாராஷ்டிருடைய அதிகாரம் மிகுந்த உன்னத நிலைமையில் இருந்தது. அவர்கள் தெற்கில் சென்று திரிசிராப்பள்ளியைக் கைப்பற்றிக்கொண்டார்கள். அவர்கள் வங்காள நவாப்பைத் தங்களுக்குச் சவுத் செலுத்தும்

படி செய்தார்கள். அப்பொழுது கல்கத்தாவிலிருந்த ஆங்கிலேயர்கள்கூட அவர்களுடைய அதிகாரத்திற்கு அஞ்சித் தங்கள் கோட்டையைச் சுற்றி ஓர் அகழியை வெட்டிக்கொண்டார்கள்.

மஹாராஷ்டிரர்கள் இவ்வாறு மேன்மையான நிலையில் இருந்தபொழுதுதான் காஸி உத்தீன் அவர்களைத் துரானிக்கு விரோதமாகத் தனக்கு உதவிபுரியும்படி வேண்டினன். அவன் அவர்களைப் பஞ்சாபை வென்று வரும்படி சொல்லவும், ரகுநாத ராவ் சென்று லாகூரைக் கைப்பற்றிக்கொண்டார். ஆனல், இந்தியாவின்மீது ஆருவது முறை படையெடுத்துவந்த துரானி மஹாராஷ்டிரர்களை லாகூரினின்றும் துரத்திவிட்டு, ஸிந்தியாவையும் ஹோல்காரையும் தோற்க அடித்துவிட்டான் அல்லவா? அப்பொழுது மஹாராஷ்டிரருடைய அதிகாரப் பெருக்கைக்கண்டு அவர்கள்மீது அழுக்காறு கொண்டிருந்த பல முகம்மதிய சிற்றரசர்கள் துரானியுடன் சேர்ந்துகொண்டார்கள்.

கி. பி. 1761-ல், மஹாராஷ்டிரருக்கும் அஹமதுஷா துரானிக்கும் பானிப்பட்டில் பெரும்போர் நிகழ்ந்தது. அதில் மஹாராஷ்டிரர்கள் அடியோடு தோற்றுப்போனர்கள். அச்சண்டையில் ஆயிரக்கணக்கான மஹாராஷ்டிரப் போர்வீரர்கள் மடிந்துபோனர்கள். சீக்கிரத்திலேயே பீஷ்வாவும் சோகத்தினல் இறந்துபோனர். அவருடன் மஹாராஷ்டிரருடைய மேன்மையும் இறந்துபட்டது.

பயிற்சிகள்

1. பீஷ்வாக்கள் யார்? அவர்கள் அதிகாரம் பெற்றது எங்ஙனம்?
2. மஹாராஷ்டிர ராஜ்யத்தினின்றும் பிரிந்த நாடுகள் எவை?
3. பாலாஜி பாஜீராவைக் குறித்துச் சிறிது கூறுக.

19. ஸீக்கர்கள்

ஔரங்கஜீப்புக்கு ஏற்பட்ட பகைவர்களுள் ஸீக்கர்களும் ஒன்று. ஸ்ரீமத் ராமாநுஜருடைய சிஷ்யர்களில் ராமாநந்தர் என்று ஒருவர் இருந்தார். இவர் எல்லா மதத்தினரையும் தம்முடைய சமூகத்தில் சேர்த்துக்கொண்டு, ஜனங்களுக்குப் பக்தியின் சிறப்பை உபதேசம் செய்துவந்தார். அப்பொழுது நெசவுத் தொழில் செய்துவந்த கபீர் என்ற முகம்மதியர் இவருக்கு சிஷ்யர் ஆனார். கபீர் ஹிந்துக்களையும், முகம்மதியர்களையும் ஒரே மதத்தினர் ஆக்க வேண்டுமென்று முயன்று வந்தார். அவருடைய கருத்தை அறிந்த நானக் என்னும் அவருடைய சிஷ்யர், கடவுள் ஒருவரே என்றும், அவரை எல்லோரும் வழிபட்டு வணங்கலாம் என்றும், ஜாதி, மத பேதங்கள் யாவும் பொய் என்றும் போதித்துவந்தார். அவருடைய உபதேசங்களைக் கேட்ட பலர் அவருக்கு சிஷ்யர்களானார்கள். அவர்களுக்குத்தான் ஸீக்கர்கள் என்று பெயர். ஸீக்கர் என்றால் சிஷ்யர் என்று பொருள்.

நானக்குக்குப் பிறகு அநேக ஸீக்கர் குருக்கள் தோன்றி அவர்களை முன்னுக்குக் கொண்டுவந்தார்கள். அவர்களுடைய முதல் நான்கு குருக்களும் ஸீக்கர்களைப் போர் செய்வதற்காவது, அரசியல் நடத்துவதற்காவது பயிற்றுவிக்கவில்லை. கி. பி. 1577-ல் அக்பர் அவர்களுக்கு அமிருதஸரஸ் என்பதைத்தரவும், அதுவே அவர்களது முக்கியப்பட்டணமாயிற்று. அங்கே அவர்கள் கட்டுவித்த பொற் கோயில் மிக்கப் புகழ்பெற்றது.

ஸீக்கரின் ஐந்தாவது குருவான அர்ஜுனர் ஜஹாங்கீரின் மைந்தரான குஸ்ரூ தந்தைக்கு விரோதமாகக் கலகம் செய்த பொழுது குஸ்ரூக்கு உதவினார். அதனால், கி. பி. 1606-ல் ஜஹாங்கீர் அவரைப் பிடித்துக் கொன்றுவிட்டார். அவர்களது ஆறாவது குருவான ஹரிகோவிந்தர் ஸீக்கர்களுக்கு யுத்தப்பயிற்சியும் செய்வித்தார். ஸீக்கர்களுக்கு மதப்பற்றும், பந்துக்கட்டுப்பாடும் அதிகம். ஸீக்கர்களின் ஒன்பதாவது குருவான டேக்பஹதூர் என்பவரை ஔரங்கஜீப் சிறையிலிட்டும், முகம்மதியராகும்படி கட்டாயப் படுத்தியும் துன்புறுத்திக் கடைசியில் கொன்றுவிட்டார். அதனால்

ஸீக்கர்களுக்கு முகம்மதியரிடம் பகை பெருகிவிட்டது. அவர்கள் முகம்மதியர்கள் இழைத்த தீமைக்குத் தக்கபடி அவர்களைத் தண்டிக்க எண்ணி, அதற்குத் தகுதியான சமயத்தை எதிர்பார்த்திருந்தார்கள்.

ஹரிகோவிந்தர்

ஸீக்கர்களது பத்தாவது குருவான குருகோவிந்தர், முகம்மதியர்கள் செய்த குற்றத்திற்காக ஸீக்கர்கள், அவர்களைத் தண்டிப்பது நியாயமாகும் என்று உபதேசம் செய்துவந்தார். அவர் அவர்களுக்கு யுத்தப் பயிற்சியைச் செய்வித்துச் சிங்கம் என்னும் பொருள்

படும் ஸிங்க் என்னும் பட்டத்தையும் கொடுத்தார். முகம்மதியர்கள் குருகோவிந்தருடைய பிள்ளைகளைப் பிடித்துக் கொன்றுவிட்டார்கள். அதனால், அவர் தக்ஷிணத்துக்கு ஓடிப்போனார். கி. பி. 1708-ல், முகம்மதியர்கள் அவரையும் பிடித்துக்கொன்றுவிட்டார்கள். குருகோவிந்தரே ஸீக்கர்களின் கடைசி குரு. அவர் கொலையுண்டதுமுதல் ஸீக்கர்களுக்கும் முகம்மதியர்களுக்கும் பகை அதிகரித்துக்கொண்டே வந்தது.

குருகோவிந்தருக்குப் பிறகு பந்தா என்பவர் ஸீக்கர் சேனையின் தளகர்த்தர் ஆனார். இவர் முகம்மதியரைக் கொன்றும், அவர்களுடைய மசூதிகளை யிடித்தும், கிராமங்களை யழித்தும் தீங்கிழைத்தார். முகம்மதியர்கள் இவரைப் பிடித்துக் கொன்றுவிட்டனர். அன்றியும் அவர்களுக்கு ஸீக்கர்மீது தீராப் பகை உண்டாயிற்று. ஆனால் ஸீக்கர்களோ நாளுக்குநாள் பலாட்டியர்களாகியும், பெருகியும் வந்தார்கள். அவர்களுடைய போர்ப்படைகள் பல பிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பிரிவிலும் பத்துமுதல் பன்னீராயிரம் போர்வீரர்கள் அடங்கியிருந்தனர். ஒவ்வொரு பிரிவும் ஒரு ஸர்தாரின் ஆணையில் அடங்கியிருந்தது.

இவர்கள் முகம்மதியர்களுடனும், மற்றவர்களுடனும் பல சண்டைகள் செய்து ஜயம்பெற்றுக் கொஞ்சகாலம் வரையில் மிகுந்த பராக்கிரமசாலிகளாக விளங்கி இருந்தார்கள். இவர்களில் தலைமை பூண்டும், பஞ்சாப் ஸிம்மம் என்று பெயர் பெற்றும் விளங்கின ரஞ்சித் ஸிங்க் என்பவரின் சரித்திரமும், ஸீக்கர்கள் தங்களுடைய பெருமையையும், சுயாதீனத்தையும் இழந்துவிட்டதின் விவரங்களும் பின்னால் சொல்லப்படும்.

பயிற்சிகள்

1 ஸீக்கர்கள் யார்?

2. குருகோவிந்தரும், பந்தாவும் அவர்களுக்கு யாது செய்தனர்?

3. ஸர்தார்கள் யார்?

4. ஸீக்கருக்கும், முகம்மதியருக்கும் பகை உண்டாவானேன்?

20. ஐரோப்பிய வர்த்தகர்கள்

வெகு நீண்டகாலமாக இந்தியாவுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் வடமேற்குக் கணவாய்கள், ஆப்கானிஸ்தானம், பாரஸிகம் முதலிய நாடுகளின் வழியாகவும், பாரஸிக வளைகுடா, செங்கடல், எகிப்து ஆகிய இவைகளின் வழியாகவும் வியாபாரம் நடந்துவந்தது என்பதை நாம் அறிவோம். எகிப்து, பாரஸிகம் முதலிய நாடுகள் முகம்மதியர் வசமானபொழுது, ஐரோப்பிய கிறிஸ்தவ வர்த்தகர்கள் அவைகளின் வழியாக வரக்கூடாமற்போயிற்று. அன்றியும், அந்தச் சுற்றுப் பிரயாணத்தில் அதிகமான பணச் செலவும், பொருள் நஷ்டமும், கால தாமதமும் உண்டாயின. வழிகளில் திருடர்களினாலும், துஷ்ட மிருகங்களினாலும், பனி, காற்று, மழை முதலியவைகளினாலும் பல துன்பங்கள் நேர்ந்தன. அதனால், ஐரோப்பிய வர்த்தகர்கள் தங்களுடைய லாபத்தையும், சௌகரியத்தையும் நாடி ஒரு புதிய வழியைக் கண்டுபிடிப்பது மிகவும் அவசியமாயிற்று.

அல்லாமலும், அப்பொழுது மேனாட்டு ஐரோப்பிய ஜாதியார்கள் பலரும் குடியேற்றத்தின் பொருட்டும், பொன் வெள்ளி முதலிய விலையுயர்ந்த பொருள்களைச் சம்பாதிப்பதன் பொருட்டும், வியாபாரத்தின் பொருட்டும் அயல் நாடுகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்னும் மனக்கிளர்ச்சியை உடையவர்களாக இருந்தார்கள். அதனால், பல ஐரோப்பியர்கள் வடக்கிலும், வடமேற்கிலும், கிழக்கிலும், தென்கிழக்கிலும் சென்று பற்பல புதிய நாடுகளைக் கண்டறிந்து வந்தார்கள்.

அப்பொழுதுதான் வாஸ்கோ ட காமா என்னும் போர்ச்சுகேயர் இந்தியாவுக்கு வந்தார். அவரே கடல் மார்க்கமாக இந்தியாவுக்கு முதன்முதல் வந்த ஐரோப்பியராவர். அவர் கள்ளிக்கோட்டை அரசரைச் சிநேகஞ் செய்துகொண்டு, அவரிடம் தமது நாட்டினர்கள் இந்தியாவில் வியாபாரம் செய்வதற்கான உத்தரவைப் பெற்றுக்கொண்டார். கி. பி. 1510-ல் போர்ச்சுகேயர் கோவா பட்டணத்தைப் பிடித்துக்கொண்டனர். கி. பி. 1530-ல் அதுவே அவர்களுடைய முக்கியப் பட்டணம் ஆயிற்று. பிறகு அவர்கள் மலாக்காவைப் பிடித்துக்கொண்டு ஸீயம், ஸுமத்ரா, ஜாவா, போர்னியோ முதலிய விடங்களில் வியாபாரம் செய்து வந்தார்கள். அப்பொழுது

அவர்கள் ஆர்மஸ் என்றவிடத்தில் கோட்டையொன்று கட்டிக் கொண்டார்கள். 1538-ல் டையூவும், 1558-ல் டாமனும் அவர்களுக்குக் கிடைத்தன. கி. பி. 1560-ம் வருஷத்தில் அவர்கள் டையூ முதல் சிட்டகாங்க் வரையிலுள்ள கடற்கரைக்கு அதிகாரிகளாயினர். இவ்வாருக அவர்கள் இந்நாட்டில் அநேக வியாபாரக் கிடங்குகளையும், அவற்றின் பாதுகாப்பிற்காகப் பல கோட்டைகளையும் கட்டிக்கொண்டு, மிக்க விமரிசையாக வியாபாரம் செய்து வந்தார்கள்.

சீக்கிரத்தில் டச்சுக்காரர் என்ற மற்ருெர் ஐரோப்பிய ஜாதியார் அவர்களுக்குப் போட்டியாகக் கிளம்பி, அவர்களைப் பல சண்டைகளில் தோற்க அடித்து அவர்களுடைய வியாபாரத்தைத் தாங்கள் கைப்பற்றிக்கொண்டார்கள். இவர்கள் 16-ம் நூற்ருண்டின் முதலில் இந்தியாவுக்கு வந்தார்கள். இவர்களும் நாளடைவில் இந்நாட்டில் பல பண்டகசாலைகளையும், அவற்றைப் பாதுகாக்கப் பல கோட்டைகளையும் கட்டிக்கொண்டார்கள். கி. பி. 1609-ல் பழவேற்காட்டிலும், கி. பி. 1616-ல் சூரத்திலும் இவர்கள் வர்த்தகக் கிடங்குகளைக் கட்டிக் கொண்டனர். ஆனல் கி. பி. 1660 முதல் நாகப்பட்டணம் இவர்களுடைய சிறந்த வியாபாரஸ்தானம் ஆயிற்று. இவர்கள் இந்தியாவுக்குவந்த சுமார் எழுபது வருஷங்களுக்குள் இந்நாட்டில் மசூலிப்

வாஸ்கோ ட காமா

பட்டணம், ஹூக்ளி, பாட்னு, டாக்கா, அஹமதாபாத், ஆக்ரா முதலிய இடங்களில் கிடங்குகள் கட்டிக்கொண்டார்கள். அன்றி யும், இவர்கள் மலாக்காவிலும், ஜாவாவிலுங்கூடப் பல பண்டக சாலேகளே அமைத்துக் கொண்டனர்.

ஆனல், இவர்கள் போர்ச்சுகேயரை வென்றுவிட்டது போலவே, இவர்களே இவர்களுக்குப் போட்டியாகக் கிளம்பிவந்த ஆங்கிலேயர் வென்றுவிட்டனர். இவர்கள் தங்களுடைய இந்திய வியாபாரத்தை முற்றிலும் இழந்து, கீழிந்தியத் தீவுகளுக்குச் சென்று வியாபாரம் செய்து வாலானர்கள்.

மேனடுகளுக்கும் இந்தியாவுக்கும் நடந்துவந்த வியாபாரம் இவ்விரண்டு ஐரோப்பிய ஜாதியினரோடு நின்றுவிடவில்லே. இவர்க ளுக்கு இந்திய வியாபாரத்தில் கிடைத்துவந்த விசேஷ லாபத்தைக் கண்ட இன்னும் சில ஐரோப்பிய ஜாதியார்கள் தாங்களும் இந்தியா வோடு வியாபாரம் செய்து பணம் சம்பாதிக்கவேண்டும் என்று முன்வந்தார்கள். அவர்களில் ஸ்பேயின், டேன்மார்க், ஸ்வீடன், ஜேர்மனி முதலிய நாட்டினர்களுடைய இந்திய வியாபாரம் வெகு சீக்கிரத்திலேயே அழிந்துவிட்டது. அவர்களேப் பற்றின விவரங் கள் நமக்கு முக்கியமானவைகள் அல்ல.

வியாபாரத்தில் மிகுந்த லாபத்தை அடைந்து வந்ததை யல்லா மல், கொஞ்சம் கொஞ்சமாக நாடுகளேச் சம்பாதித்துக்கொண்டு இந்தியாவில் ஒரு பெரிய ஸாம்ராஜ்யத்தை அமைத்து, அதை ஆட்சி செய்துவரும் ஆங்கிலேயர்களேப்பற்றியும், வெகுநாட்கள் வரையில் அவர்களுக்குப் போட்டியாக நின்றும், அவர்களுடன் பல சண்டை கள் செய்தும்வந்த பிரேஞ்சுக்காரர்களேப்பற்றியும் மட்டில் நாம் தெரிந்துகொள்ளுவது போதுமானது.

கி. பி. 1600-ம் வருஷத்தில், லண்டன் நகர வியாபாரிகளிற் சிலர் ஒன்றுசேர்ந்து, எலிஸபெத் மஹாராணியாரின் உத்தரவைப் பெற்று, இந்தியாவோடு வியாபாரம் செய்வதற்கென்று ஒரு வர்த் தகக் கம்பனியை ஏற்படுத்திக்கொண்டார்கள். அதுதான் ஆங்கி லேய கீழிந்திய வர்த்தகக் கம்பனி என வழங்கப்பட்டது.

அந்த வர்த்தகக் கம்பனியார் கி. பி. 1611-ல் மசூலிப்பட்ட ணத்தில் ஒரு வியாபாரக் கிடங்கைக் கட்டிக்கொண்டார்கள். பின்னர்,

அவர்கள் ஜஹாங்கீர் என்னும் முகலாய சக்ரவர்த்தியின் அனுமதியைப்பெற்று, கி. பி. 1613-ல் சூரத் பட்டணத்தில் ஒரு பண்டகசாலையை அமைத்துக்கொண்டார்கள். அப்பொழுதுதான் ஸர் தாமஸ் ரோ என்னும் ஆங்கிலேய ராயபாரியை ஜஹாங்கீர் தமது சம்ஸ்தானத்தில் வரவேற்றார். அவர், ரோவின் வேண்டுகோளின்படி, ஆங்கிலேயர்கள் இந்தியாவில் வியாபாரம் செய்வதற்கு அனுகூலமான பல சுதந்திரங்களைத் தந்து உதவினார். ஆங்கிலேயர்கள் சீக்கிரத்திலேயே மேற்குக் கடற்கரையை அடுத்து இன்னும் பல வர்த்தகசாலைகளை ஏற்படுத்திக்கொண்டார்கள். கி. பி. 1628-ல், அவர்கள் சென்னபட்டணத்திற்கு 70-மைல் வடக்கில் ஆர்மகான் என்னுமிடத்தில் ஒரு பண்டகசாலையைக் கட்டினார்கள். கி. பி. 1640-ல், ஷாஜஹான் அவர்கள் கல்கத்தாவில் வர்த்தகம் செய்வதற்கான அனுமதியைத் தந்து, அங்கே அவர்கள் ஒரு பண்டகசாலையைக் கட்டிக்கொள்ளலாம் என்ற உத்தரவையும் அளித்தார். அதற்கு முந்திய வருஷத்திலேதான் அவர்கள் சந்திரகிரி அரசரிடமிருந்து சென்னபட்டணத்தை விலைக்கு வாங்கிக்கொண்டது. அங்கேயும் அவர்கள் ஒரு வர்த்தகக் கிடங்கையும், அதன் பாதுகாப்பிற்காக ஒரு கோட்டையையும் கட்டிக்கொண்டார்கள். அவர்கள் அந்தக் கோட்டைக்குத் தங்களுடைய குலதெய்வத்தின் பெயரை யொட்டி ஸேன்ட் ஜார்ஜ் கோட்டை எனப் பெயர்வைத்தார்கள். அப்பொழுது கோட்டையும், அதைச் சார்ந்த ஊரும் மிகச் சிறியனவாக இருந்து நாளடைவில் பெருகிவிட்டன.

இப்பொழுது இந்தியாவிலுள்ள துறைமுகங்கள் எல்லாவற்றினும் சிறந்ததாக விளங்கிவரும் பம்பாய், கம்பனியாருக்குக் கி. பி. 1668-ல்,கிடைத்தது. பம்பாய் முதலில் போர்ச்சுகேயருக்குச் சொந்தமாக இருந்தது. கி. பி. 1661-ல், இரண்டாம் சார்ல்ஸ் என்ற ஆங்கிலேய அரசர் போர்ச்சுகேய மன்னரின் புதல்வியை மணஞ்செய்துகொண்டார். அப்பொழுது, போர்ச்சுகேய அரசர் பம்பாயைத் தமது குமாரிக்கு ஸ்திரீதனமாகக் கொடுத்தார். அதைச் சார்ல்ஸ் அரசர் மிகுந்த குறைவான வாடகைக்குக் கீழிந்திய வியாபாரக் கம்பனிக்குக் கொடுத்துவிட்டார். பம்பாயும் முதலில் மிகச் சிறியதாக விருந்து நாளடைவில் பெரிய நகரமாய்விட்டது.

வட இந்தியாவில் ஆங்கிலேயக் கம்பனியாருக்குப் பாட்னு, டாக்கா, காசிம்பஜார், என்னும் இடங்களில் ஏற்கெனவே வியா



ஸெண்ட் ஜார்ஜ் கோட்டை (1750-ல்)

பாரக் கிடங்குகள் இருந்தன. கி. பி. 1633-ல், அவர்களுக்கு வங்கா

ளத்தில் பாலசூர் என்னுமிடம் கிடைத்தது. கி. பி. 1690-ல், அவர்கள் ஹூக்ளியினருகில் மூன்று கிராமங்களை விலைக்கு வாங்கிக்கொண் டார்கள். அவைகளிலொன்றான காளிகாட் என்பதினின்றுமே



அங்கு ஏற்பட்ட நகரத்துக்குக் கல்கத்தா என்னும் பெயர் உண்டா யிற்று. அவர்கள் அங்கே போர்ட் வில்லியம் என்னும் கோட்டை யைக் கட்டிக்கொண்டார்கள்.

கி. பி. 1664-ல், பிரெஞ்சுக்காரர்கள் ஒரு வர்த்தகச் சங்கத்தை உண்டாக்கிக்கொண்டு இந்தியாவுடன் வியாபாரம்செய்ய முன்வந்தார்கள். இதற்கு முன்பு அவர்கள் உண்டாக்கின மூன்று, நான்கு வியாபாரச் சங்கங்கள் முதற் பணமும், குடிகளின் ஆதரவும் இல்லாமையினால் அழிந்து போய்விட்டன. கோல்பர்ட் என்பவர் உண்டாக்கின கம்பனிமட்டில் அபிவிருத்தியை அடைந்து, இந்நாட்டின் கிழக்குக் கடற்கரையில் சந்திரநகர், புதுச்சேரி, காரைக்கால், என்னும் ஸ்தலங்களையும், மேற்குக் கடற்கரையில் மாஹி என்னும் இடத்தையும் சம்பாதித்துக்கொண்டது. டுமோ என்னும் பிரெஞ்சு கவர்னர் புதுச்சேரியை வெகு அழகாக அமைத்தும், அங்கிருந்த கோட்டையைப் பலப்படுத்தியும், அந்நகரைப் பிரெஞ்சுக் கீழிந்தியக் கம்பனியாரின் முக்கியப் பட்டணமாக்கினார்.

பல இடங்களில் பண்டகசாலைகளையும், கோட்டைகளையும் அமைத்துக்கொண்டு வியாபாரம் செய்துவந்த ஆங்கிலேயர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் வியாபாரத்தில் போட்டியும், மற்ற காரணங்களினால் பகையும் ஏற்பட்டதனால், அவர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டையிடத் தலைப்பட்டார்கள். அவற்றைப்பற்றின விவரங்கள் பின்னால் சொல்லப்படும்.

பயிற்சிகள்

1. இந்தியா படம் ஒன்று வரைந்து அதில் போர்ச்சுகேயர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகிய இவர்கள் சம்பாதித்துக்கொண்ட ஸ்தலங்களைக் குறியுங்கள்.

2. ஆங்கிலேயருக்கு பம்பாயும், கல்கத்தாவும் எப்பொழுது, எவ்வாறு கிடைத்தன?

3. ஐரோப்பிய வியாபாரிகள் முழுவதும் கடல் மார்க்கமான வழியைக் கண்டுபிடிப்பதில் முயலுவானேன்?

21. பிரெஞ்சிய ஆங்கிலேயப் போட்டியும், ஆங்கிலேயரின் வெற்றியும்

i. முதல் கர்னுடக யுத்தம்

ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும் பல்வேறு காரணங் களை முன்னிட்டு நெடுநாட்கள் வரையில் ஐரோப்பாவில் அநேக சண்டைகள் செய்து வந்தார்கள். அவர்களுக்குள் ஐரோப்பாவில் சண்டை உண்டான பொழுதெல்லாம், அமெரிக்காவில் குடியேறி யிருந்த பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும், இந்தியா வில் வியாபாரஞ் செய்துவந்த பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கி லேயர்களுக்குங்கூடச் சண்டைகள் உண்டாயின. இவர்களுடைய பகை நாளடைவில் வளர்ந்துவரத் தலைப்பட்டபொழுது, இவர்கள் இந்நாட்டுச் சிற்றரசர்களினுடைய வியவகாரங்களிலும் தலையிட்டுக் கொள்ள நேர்ந்தது. அதனுலும், இவர்கள் ஒருவரை ஒருவர் எதிர்த்துச் சண்டைசெய்து வாலானுர்கள். இவர்கள் முதன் முதல் தஞ்சாவூர் சிம்மாசனத்தைக் குறித்து நடந்த சண்டையில் தலையிட்டுக்கொண்டார்கள். அதில் பிரெஞ்சுக்காரர்களுக்குக் காரைக் கால் கிடைத்தது.

கி. பி. 1744-ல், ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக் காரருக்கும் சண்டை உண்டாயிற்று. அப்பொழுது இந்தியாவில் பிரெஞ்சு கவர்னராக இருந்த ட்யூப்ளே என்பவர் லபோர்டனே என்னும் பிரெஞ்சுக் கப்பல் தலைவரைச் சென்னபட்டணத்தைப் பிடித்துக்கொள்ளும்படி அனுப்பினுர். அவர் அவ்வாறே சென் னைக்கு வந்து கி. பி. 1746-ல், அதை எளிதில் கைப்பற்றிக்கொண்டார். அத்துமீறித் தமது நாட்டில் சண்டைசெய்த பிரெஞ்சுக்காரரிடம் கர்னுடக நவாப்புக்குக் கோபம் உண்டாயிற்று. அதை அறிந்த ட்யூப்ளே தாம் ஸெண்ட் ஜார்ஜ் கோட்டையை மட்டில் இடித்துத் தகர்த்துவிட்டு, நகரத்தை நவாப்புக்குக் கொடுத்து விடுவதாகத் தெரிவித்தார். ஆனுல், லபோர்டனே அவரைக் கலவாமலே சென்னபட்டணத்தை ஆங்கிலேயருக்கே திருப்பிக் கொடுத்துவிட ஒப்புக்கொண்டு அவர்களிடமிருந்து எளிதில் தமக்கும், தமது

கம்பனியாருக்கும் ஏராளமான பணத்தைப் பெற்றுக்கொண்டார். அவருக்குமட்டில் 40,000 பவுன் கிடைத்தது. பின்னர், அக்கப்பல் தலைவர் திரும்பிச் சென்றுவிட்டார். அந்த ஏற்பாட்டை ட்யூப்ளே ஒத்துக்கொள்ளவில்லை. அவர் சென்னையைக் கர்னாடக நவாப்புக்குக் கொடுக்கவும் இல்லை.

ட்யூப்ளே தாம் சொல்லியபடி சென்னையைக் கர்னாடக நவாப்புக்குக் கொடாததனால், நவாப் வெகுண்டு சென்னையை எதிர்த்துச் சண்டைக்குவந்தார். கி. பி. 1746-ம் வருஷம் நவம்பர் மாதம் 4-ம் தேதியன்று, ட்யூப்ளே நவாப்பின் சேனையை ஸான்தோமில் சண்டையிட்டுத் தோற்க அடித்துத் துரத்திவிட்டார். பின்னர், பிரெஞ்சுக்காரர்கள் தேவனாம்பட்டணத்தைப் பிடித்துக்கொள்ள முயன்றபொழுது, ஆங்கிலேயர்கள் அவர்களை வென்று அடித்து ஓட்டிவிட்டார்கள். அதற்குப் பிறகு கி. பி. 1748-ல், ஆங்கிலேயர்கள் புதுச்சேரியை எதிர்த்துச் சென்றார்கள். ஆனால், ட்யூப்ளே அவர்களை வென்று துரத்திவிட்டார். ட்யூப்ளே தாம் அடைந்த வெற்றியின் பெருமையைக் கர்னாடக நவாப்புக்கும், ஹைதராபாத் நிஜாமுக்கும், டில்லி அரசருக்கும் அறிவித்தார். அப்பொழுது, ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் ஐரோப்பாவில் சமாதானம் ஏற்பட்டுவிட்டதனால், ட்யூப்ளே தாம் கைப்பற்றிக்கொண்டு பலப்படுத்தின சென்னையைத் திரும்பவும் ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிடவேண்டியதாயிற்று. அதனோடு, அவர்கள் கர்னாடகத்தில் செய்த முதல் யுத்தம் முடிந்துவிட்டது.

ii. இரண்டாவது கர்னாடக யுத்தம்

ஜோஸப் ப்ரான்ஷுவா ட்யூப்ளே என்பவர் கி. பி. 1742-ல் பிரெஞ்சு கவர்னர்-ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அதற்கு முன்பு அவர் சந்திரநகரின் தலைவராக இருந்து, அதைப் பலப்படுத்தி ஒரு சிறந்த வியாபார ஸ்தலமாக்கினார். ட்யூப்ளே கூர்மையான புத்தியும், விடாமுயற்சியும் உடையவர். அவர் சிறந்த தேசாபிமானி. அவர் அதிகாரம் செலுத்துவதில் அளவில்லாத ஆசையுள்ளவர். அவர் அப்பொழுது முகலாய ராஜ்யம் இருந்த பலஹீனமான நிலைமையை நன்றாக அறிந்துகொண்டார். அவர் இந்தியர்களைச்

செவ்வனே பழக்கிச் சிறந்த யுத்தவீரர்களாக்கிக் கொள்ளலாம் என்னும் உண்மையை எளிதில் தெரிந்து கொண்டார். அவர் ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்தும் துரத்திவிட்டு, இந்நாட்டில் பிரெஞ்சு அதிகாரத்தை ஸ்தாபிக்கவேண்டுமென விரும்பினர். அதன்பொருட்டு அவர் அரும்பாடு பட்டார்.

ஆனல், ட்யூப்ளே எண்ணிய எண்ணங்கள் யாவும் வீணுயின. பிரெஞ்சுக் கப்பல் தலைவர்கள் அவருடன் ஒத்து உழையாததனுலும்,

ட்யூப்ளே

அப்பொழுது இருந்த பிரெஞ்சு தளகர்த்தர்கள் திறமையில்லாதவர்களாக இருந்ததனுலும், பிரெஞ்சு மேலதிகாரிகள் ட்யூப்ளேயின் அபிப்பிராயத்திற்கு இணங்கி வராததனுலும், எதிர்பாராத சில காரணங்களினுலும், தெய்வபலம் இன்மையினுலும் ட்யூப்ளே தாம் எண்ணியபடி யாதொன்றையும் செய்ய இயலாமற் போயிற்று. கி. பி. 1754-ல், பிரெஞ்சு மேலதிகாரிகள் அவரைப் பிரான்சுக்குத் திரும்பி வந்துவிடும்படி கட்டளையிட்டார்கள். அவர் தாம் கொண்ட

முயற்சிக்கு ஈடாக அவமானத்தையும், வறுமையையும் அடைந்து உயிர் துறந்தார். ஆயினும், அவர் ஆங்கிலேயருக்கு ஒரு சிறந்த வழிகாட்டியானார்.

கி. பி. 1748-ல் ஹைதராபாத் நிஜாமாகவிருந்த சின் கிலிச் கான் என்பவர் இறந்துவிடவும், அவருடைய மைந்தர் நாஸர்ஜங்க் என்பவரும், பெயரர் முஸபர்ஜங்க் என்பவரும் பட்டத்தைக் குறித்துச் சண்டையிட்டார்கள். அதே சமயத்தில் சந்தா சாஹிப் என்பவர் சின் கிலிச் கானால் நியமிக்கப்பட்டிருந்த ஆன்வருடின் என்னும் கர்னாடக நவாப்பைத் துரத்திவிட்டுத் தாம் கர்னாடக நவாப்பாக வேண்டுமென முன் வந்தார். முஸபர்ஜங்கும், சந்தா சாஹிபும்



திரிசிராப்பள்ளி மலைக்கோட்டை (இப்பொழுதுள்ளபடி)

சேர்ந்துகொண்டு ட்யூப்ளேயைத் தங்களுக்குத் துணைவரும்படி வேண்டினார்கள். அவர் அதற்கு உடன்பட்டு புஸ்ஸி என்பவரை ஒரு சேனையுடன் அனுப்பினார். புஸ்ஸி ஆம்பூரில் ஆன்வருடினுடன் சண்டையிட்டு அவரைக் கொன்றுவிட்டார். அதனால், சந்தா சாஹிப்

ஆற்காட்டு நவாப் ஆனார். அப்பொழுது நாஸர்ஜங்க் கொலையுண்டு போனதனால், முஸபர் ஜங்க் ஹைதராபாத்துக்கு நிஜாம் ஆனார். இவ்வாறாகப் பிரெஞ்சுக்காருடைய அதிகாரம் மேன்மை யடையலாயிற்று. ட்யூப்ளே கர்னாடகராஜ்யத்துக்குக் கவர்னராக நியமிக்கப்பட்டதுமன்றி, பிரெஞ்சுக்காரருக்கு வடசர்க்காரும் கிடைத்தது. கஞ்சம் முதல் குண்டூர் வரையிலான ஜில்லாக்களுக்கு வடசர்க்கார் என்று பெயர்.

ஆன்வருடின் ஆம்பூர் சண்டையில் இறந்துபோனதும், அவருடைய மைந்தரான முகம்மது அலீ என்பவர் திரிசிராப்பள்ளிக்குச் சென்று, ஆங்கிலேயரைத் தமக்கு உதவிசெய்யும்படி வேண்டினார். அதையறிந்த சந்தாசாஹிப் ஒரு பெருஞ்சேனையுடன் புறப்பட்டுச் சென்று, திரிசிராப்பள்ளியை முற்றுகை செய்தார். திரிசிராப்பள்ளியில், பட்டணத்தின் மத்தியில் ஒரு குன்று இருக்கின்றது. மதுரையில் ஆட்சிபெற்றிருந்த நாயக்க அரசர்கள் 16-வது நூற்றாண்டில் அக்குன்றின்மீது ஒரு பலமான கோட்டையைக் கட்டினார்கள். அக்கோட்டையைச் சத்துருக்கள் எளிதில் பிடித்துக்கொள்ள முடியாது. பகைவர்கள் குன்றின்மீதேறிக் கோட்டையைப் பிடிப்பது கஷ்டமாகும். அல்லாமலும், திரிசிராப்பள்ளியிலிருந்தும் நாலாப் பக்கங்களுக்கும் அப்பொழுதே செப்பனிடப்பட்ட பாதைகள் போடப்பட்டிருந்ததனால், கோட்டைக்குள் இருப்பவர்களுக்குப் படைத்துணையையும், உணவுப்பொருள்களையும் எளிதில் அனுப்பக்கூடும். ஊரைச் சார்ந்து காவிரி நதி பெருகிப் பாய்ந்ததனால், தண்ணீருக்கு எவ்விதக் குறைவும் இல்லை. ஆதலினால், பகைவர்கள் வெகுகாலம் கோட்டையை முற்றுகை செய்தபோதிலும், கோட்டைக்குள் இருப்பவர்கள் தாகம், பசி யின்றியும், உதவியைப்பெற்றும் இருக்கமுடியும். இக்காரணங்களினாலேதான் முகம்மது அலீ திரிசிராப்பள்ளிக்கு ஓடிச் சென்றார்.

சந்தாசாஹிப் திரிசிராப்பள்ளியை முற்றுகை செய்ததும், ஆங்கிலேயர்கள் நவாப்பின் தலைநகரான ஆற்காட்டைப் பிடித்துக்கொண்டார்கள். ஆற்காட்டிற்கு அனுப்பப்பட்ட சேனைக்கு க்ளைவ் என்பவர் தலைவராக நியமிக்கப்பட்டார். அந்தச் சமயம் ஆற்காட்டைப் பிடித்துக்கொள்ளுவதுதான் சிறந்த உபாயம் என்று ஆங்கிலேய கவர்ன

ருக்கு யுக்திசொன்னவர் க்ளைவே யாவர். க்ளைவ் கி. பி. 1744-ல், ஆங்கிலேய கீழிந்திய வர்த்தகக் கம்பனியில் ஒரு குமாஸ்தாவாக நியமிக்கப்பட்டு இந்தியாவுக்கு வந்தார். அவர் சிறுவராக இருந்த பொழுது பள்ளிக்குச்சென்று கல்விகற்காமல், பல துன்மார்க்கர் களுடன் சேர்ந்துகொண்டு செய்த தீச்செயல்கள் இவ்வளவு அவ்வளவு அல்ல. சண்டைசெய்வதே அவருக்குப் பெருந்தொழி லாக இருந்தது. அவரை வைத்துக் காக்க முடியாத அவருடைய தந்தை, அவருடைய நண்பர் ஒருவர் சொல்லியபடி, அவரை இந்தி யாவுக்கு அனுப்பிவிட்டார்.



ராபர்ட் க்ளைவ்

க்ளைவ் இணையற்ற பராக்கிரமசாலி. அவர் அஞ்சாத நெஞ்சம் படைத்தவர். அவர் தாம் மேற்கொண்ட காரியத்தை நிறைவேற்று வதில் செய்யத்தக்க காரியம் எது செய்யத்தகாத காரியம் எது என் பதைச் சிறிதும் கருதினவர் அல்லர். அவர் அதிகாரம் செலுத்தப் பிறந்தவரேயன்றி, அதிகாரத்திற்கு அடங்கி நடக்கத் தோன்றினவர்

அல்லர். அவர் சிறிது காலத்திற்குள் குமாஸ்தா வேலையை நீத்து ராணுவத்தில் சேர்ந்துகொண்டார். அவர் சென்னையைப் பிரெஞ்சுக்காரர் கைப்பற்றிக் கொண்டபொழுது, மாறுவேஷம் பூண்டு தப்பிச் சென்றுவிட்டார். அவர்கள் தேவனும்பட்டணத்தை எதிர்த்த பொழுதும், அவர் மிகுந்த ஆண்மையோடு சண்டைசெய்தார். ஆங்கிலேயருடைய இந்திய ஸாம்ராஜ்யத்திற்கு அடிப்படையைப் போட்டவர் க்ளைவே யாவர்.

க்ளைவ் ஆற்காட்டுக் கோட்டையை எளிதில் பிடித்துக்கொண்டு விட்டபோதிலும், ஒருகால் சந்தாசாஹிப் அதை மீட்டுக்கொள்ள ஒரு பெரும்படையுடன் எதிர்த்து வரக்கூடும் என்றெண்ணி, அரண்களைப் பலப்படுத்திப் பந்தோபஸ்துக்கள் செய்துவந்தார். அவர் எதிர்



ஆற்காட்டுக் கோட்டை

பார்த்தபடியே சந்தாசாஹிப் திரிசிராப்பள்ளியிலிருந்து ஒரு பெரும் படையை அனுப்பினர். அப்பொழுது பிரெஞ்சுக்காரரும் உடன் வந்தார்கள். ஆனல், அவர்களால் ஆற்காட்டைப் பிடித்துக்கொள்ள முடியவில்லை. அன்றியும், க்ளைவ் சந்தாசாஹிபின் மைந்தரான ராஜா சாஹிபை ஆரணியிலும், காவேரிப்பாக்கம் என்னுமிடத்திலும்

தோற்கடித்துவிட்டார். அதன் பின்னர், அவர் திரிசிராப் பள்ளிக்குச்சென்று அங்கிருந்தும் சந்தாசாஹிபையும், பிரெஞ்சுக் காரரையும் துரத்திவிட்டார். அப்பொழுது சந்தாசாஹிப் தஞ்சா வூரில் கொலையுண்டு போனதனால், முகம்மது அலி கர்னாடக நவாப்



பானார். அவர் அது முதல் கி. பி. 1795 வரையில் நவாப்பாக இருந்து வந்தார்.

அதன் பின்னரும், பிரெஞ்சுக்காரர்கள் திரிசிராப்பள்ளியை முற்றுகை செய்தார்கள். ஆனால், அவர்களால் ஒன்றுஞ் செய்யக்

கூடவில்லை. அதனால், அவர்கள் கி. பி. 1754-ல், ஆங்கிலேயருடன் சமாதானஞ் செய்துகொண்டு, இனித் தாங்கள் சுதேச அரசர்களின் வழக்குக்களில் தலையிட்டுக் கொள்வதில்லை என்றும் தீர்மானித்துக் கொண்டார்கள். அது முதலாகத் தென் இந்தியாவில் பிரெஞ்சு அதிகாரம் சிதைவுபடலாயிற்று. அதனோடு இரண்டாவது கர்னாடக யுத்தம் முடிந்தது. இந்த யுத்தத்திற்குப் பின்புதான் ட்யூப்ளே தமது வேலையை இழந்து பிரான்சுக்குச் சென்றது. அவர் கி. பி. 1764-ல் பாரிஸ் நகரத்தில் மிகுந்த சோகத்தினால் மரணமடைந்தார்.

iii. மூன்றாவது கர்னாடக யுத்தம்

திரும்பவும் கி. பி. 1756-ல், ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரருக்கும் யுத்தம் மூண்டது. அப்பொழுது கி. பி. 1758-ல், லாலி என்னும் பிரெஞ்சு தளகர்த்தர் தேவனாம்பட்டணத்தைப் பிடித்துக்கொண்டு மதராஸை நோக்கி வந்தார். புஸ்ஸி என்பவர் வடசர்க்காரிலிருந்து வந்து அவருடன் சேர்ந்துகொண்டார். அதை அறிந்த க்ளைவ் வங்காளத்திலிருந்து ஒரு பெருஞ் சேனையை அனுப்பினார். அச்சேனை பிரெஞ்சுக்காரரிடமிருந்து வடசர்க்காரைப் பிடித்துக்கொண்டு, அவர்களை மதராஸிலிருந்தும் துரத்தி அடித்துவிட்டது. அன்றியும், க்ளைவ் சந்திரநகரைப் பிடித்துக்கொண்டு அங்கே பிரெஞ்சுக்காரர்கள் கட்டிவைத்திருந்த கோட்டையையும், வியாபாரக் கிடங்கையும் இடித்துத் தகர்த்துப் பாழாக்கிவிட்டார்.

அடுத்த வருஷத்தில், அதாவது கி. பி. 1760-ல், கூட் என்பவர் பிரெஞ்சுக்காரர்களை வந்தவாசியில் சண்டையிட்டு அடியோடு தோற்க அடித்துவிட்டார். மறுவருஷத்தில், புதுச்சேரியும் ஆங்கிலேயருடைய வசமாய்விட்டது. ஆங்கிலேயரை இந்தியாவினின்றும் துரத்திவிட வேண்டுமென எண்ணிவந்த லாலியும், புஸ்ஸியும் ஆங்கிலேயர்களால் சிறைபிடிக்கப்பட்டார்கள். அதனோடு, பிரெஞ்சுக்காரருடைய அதிகாரம் இந்நாட்டில் முழுவதும் தொலைந்துவிட்டது.

கி. பி. 1763-ல், ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரருக்கும் பாரிஸ் நகரில் மறுபடியும் சமாதானம் ஏற்பட்டது. அதனுல், ஆங்கிலேயர் புதுச்சேரியையும், சந்திரநகரையும் பிரெஞ்சுக்காரருக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். அவ்விடங்கள் இன்னமும் அவர்களுடைய வசத்திலேயே இருந்து வருகின்றன. பின்னர், கி. பி. 1769-ல், பிரெஞ்சு கீழிந்திய வர்த்தகக் கம்பனியே முற்றும் ஒழிந்து போய்விட்டது. இவ்வாருக, மூன்ருவது கர்ணுடக யுத்தம் முடிவாய்விட்டது.

ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரருக்கும் புதுச்சேரி, தேவனும்பட்டணம், மதராஸ், மசூலிப்பட்டணம், சந்திரநகர் முதலான இடங்களில் நடந்த சண்டைகளில் நிலப்படையைவிடக் கப்பற்படையே முதன்மை பெற்றிருந்தது. ஆங்கிலேயர்கள் அக்காலத்திலிருந்தே கப்பற் சண்டையில் கைதேர்ந்தவர்களாக இருந்து வந்ததனுல், பிரெஞ்சுக்காரர்களே அவர்கள் இலகுவில் வென்றுவிட்டார்கள். அல்லாமலும், அப்பொழுது நமது நாட்டில் மஹாராஷ்டிரர்களிடம் இருந்த கப்பற்படையைக் கி. பி. 1756-ல், வாட்ஸனும் க்ளைவும் நாசஞ்செய்து விட்டதனுல், ஆங்கிலேயரைக் கடற் சண்டையில் வெல்லுவது கஷ்டமான காரியமாயிற்று.

பயிற்சிகள்

1. ட்யூப்ளே யார்? அவர் இந்திய சிற்றரசர் வியவகாரங்களில் தலையிட்டுக் கொள்வானேன்?

2. இரண்டாவது கர்ணுடக யுத்தத்தை விவரித்துக் கூறுக.

3. திரிசிராப்பள்ளி முற்றுகையை விடுவிக்க க்ளைவ் செய்த சூழ்ச்சி என்ன?

4. வந்தவாசியில் நடந்த சண்டை எவ்வாறு முக்கியமானதாகும்? அது எப்போது, யார் யாருக்கு நடந்தது?

5. பிரெஞ்சுக்காரர்கள் தோற்றுப் போவானேன்?

22. ஆங்கிலேயருக்கு வங்காளம் கிடைத்தவாறு

i. வங்காள வியவகாரங்கள்

ஔரங்கஜீப் இறந்துபோன பின்னர், சுமார் 50 வருஷங்களுக்குள், முகலாய ஸாம்ராஜ்யத்தினின்றும் அநேக சிறிய ராஜ்யங்கள் பிரிந்து ஒவ்வொன்றும் தனித்தனி ஆட்சியைப் பெற்றுக்கொண்டன என்பதை நாம் அறிவோம். அப்பொழுதுதான் நிஜாம் ஹைதராபாத்தைத் தனி ராஜ்யமாக்கிக்கொண்டு அரசு செலுத்தத் தொடங்கினர். அப்பொழுதே, வங்காளமும், அயோத்தியும் தனித்தனி ராஜ்யங்கள் ஆயின. அலிவர்டிகான் என்ற ஓர் ஆண்மை மிக்க போர் வீரர், துரோகத்தினுல் வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா என்னும் நாடுகளை முகலாய ராஜ்யத்திலிருந்தும் வேறு பிரித்து ஒரு தனி ராஜ்யமாக்கி ஆட்சி செய்துவந்தார். அவர், ஆங்கிலேயர்கள் தென்னிந்தியாவில் சுதேச அரசர்களின் வியவகாரங்களில் தலையிட்டுக் கொண்டு அதிகார வளர்ச்சியை அடைந்துவிட்டது போலவே, வங்காளத்திலும் அதிகாரம் பெருவதற்கான வழிகளைத் தேடக்கூடும் என எண்ணினர். அன்றியும், அவர் 'ஆங்கிலேய வியாபாரிகள் நன்றியறிதலில்லாத துரோகிகள் என்றும், அவர்கள் வியாபாரிகள் என நடித்துக்கொண்டு தமக்கும், தமது சந்ததியாருக்கும் விரோதமாகக் கலகங்களை உண்டாக்கி நாடு பெறவேண்டும் என்னும் எண்ணத்துடன் நடந்துவருகிறார்கள்' என்றும் எண்ணி, அவர்கள்மீது மிகுந்த பகை கொண்டிருந்தார். அவர் அவர்களைத் தமது நாட்டிலிருந்தும் துரத்திவிட வேண்டுமெனவும் விரும்பினர். ஆனல், அவர் அப்பொழுது உள் நாட்டில் உண்டான கலகங்களை அடக்குவதிலும், மஹாராஷ்டிரர்கள் தமது நாட்டின்மீது படையெடுத்து வராதபடி தடுப்பதிலுமேயே தமது காலத்தை எல்லாம் செலவு செய்து வந்ததனல், அவர் ஆங்கிலேயருக்கு விரோதமாக யாதொன்றுஞ் செய்யவில்லை. ஆயினும், கி. பி. 1756-ல், அவர் இறக்கும் பொழுது, தம்முடைய பகையைத் தமது பெயரரான ஸிராஜ் உத் தௌலாவினிடம் ஒப்புவித்துக் காலஞ்சென்றார்.

ஸிராஜ் உத் தௌலா பட்டத்துக்கு வந்ததுமுதல் ஆங்கிலேயர் மீது பகைகொண்டிருந்தார். அவர் தாம் பட்டத்துக்கு வந்த

பொழுது, அப்பொழுதிருந்த வழக்கப்படி, ஆங்கிலேயர் தமக்குக் காணிக்கை தந்து மரியாதை செய்யவில்லை என்றும் அவர்களிடம் கோபம் கொண்டிருந்தார். ஆங்கிலேயர் நவாப்பின் பகைவர்களோடு சேர்ந்துகொண்டு அவரை அவமதித்தார்கள் என்பதும் அவருடைய எண்ணம். அப்பொழுது, நமது நாட்டின் வியாபாரமும், கைத்தொழில்களும் பெரும்பாலும் ஹிந்துக்களினாலேயே கையாளப்பட்டு வந்ததனால், ஆங்கிலேய வர்த்தகர்களுக்கும், ஹிந்து வியாபாரிகளுக்கும் நெருங்கிய பழக்கம் உண்டாயிற்று. அதை ஆதாரமாகக்கொண்டு ஆங்கிலேய வியாபாரிகள், முகம்மதிய மதத்தினின்றும் வேறுபட்டிருந்த ஹிந்துக்களைத் தமக்கு விரோதமாகக் கிளப்பித் தம்முடைய அரசாட்சியைத் தொலைத்துவிடும்படி தூண்டிவந்தார்கள் என்பதும் நவாப்பின் அபிப்பிராயம். உண்மையில் 18-வது நூற்றாண்டின் மத்தியில் வங்காளத்துக் குடிகளின் நிலைமை அக்காலத்திய மற்றெந்த நாட்டுக் குடிகளின் நிலைமைக்கும் குறைவுபட்டிருக்கவில்லை. ஆகவே, அச்சமயம் ஹிந்துக்கள் முகம்மதிய ஆட்சியை வெறுக்கச் சிறிதும் காரணமில்லை.

இவ்வாறாக நவாப் ஆங்கிலேயரிடம் விரோதம் கொண்டிருக்கையில், ஆங்கிலேயர்கள் வங்காளத்திலிருந்த தங்கள் கோட்டைகளை மராமத்துகள்செய்து புதுப்பித்தார்கள். நவாப், அவர்கள் தமது நாட்டில் தங்களுடைய பழைய கோட்டைகளைப் பழுது பார்க்கவாவது, புதிய கோட்டைகளைக் கட்டவாவது கூடாது என்று ஆஜ்ஞாபித்தார். அல்லாமலும், ஆங்கிலேயருடைய மேலதிகாரிகளே அவர்கள் இந்நாட்டில் சுதேச அரசர்களின் பாதுகாப்பிலேயே இருந்து வரவேண்டுமென்றும் ஆணையிட்டிருந்தார்கள். ஆங்கிலேய வியாபாரிகள் அந்த இரண்டில் எதையும் பொருள் படுத்தவில்லை. இவை போதா எனவோ, ஆங்கிலேயர்கள், நவாப்பின் கோபத்திற்குப் பயந்து அவரிடமிருந்தும் தப்பியோடி வந்துவிட்ட ஒரு பணக்காரனை, அவருடைய வேண்டுகோளின்படி திரும்பவும் அவரிடம் அனுப்ப உடன்படவில்லை. இவ்வாறாக, நவாப்புக்கு ஆங்கிலேயரிடம் கோபம் மூண்டு அவர் சண்டைக்குத் தயார் ஆனார்.

கி. பி. 1756-ம் வருஷம் மே மாதம் அவர் ஒரு சேனையை அனுப்பி, ஆங்கிலேயருடைய காசிம்பஜார் கிடங்கை இலக்குவில்

கைப்பற்றிக்கொண்டு, அங்கிருந்த ஆங்கிலேயர்களைச் சிறையிலிட்டு விட்டார். பின்னர், அவர் ஒரு பெரும்படையுடன் கல்கத்தாவை எதிர்த்துச் சென்றார். அங்கே அவர் ஆங்கிலேயருடன் சண்டை செய்வதை விட்டுச் சமாதானங்கொள்ள முயன்றார். அப்பொழுது ஆங்கிலேயரிடம் போதுமான போர்ப்படை இல்லாதிருந்தும், அவர்கள் தாங்கள் வஞ்சனையினால் அவரை வென்றுவிடலாம் என்று எண்ணி, சமாதானத்துக்கு உடன்படவில்லை. அவர்கள் நவாப்புக்குத் துணை வரக்கூடிய சிலரைச் சிறையில் அடைப்பித்துப் பந்தோபஸ்துகள் செய்தார்கள். ஆயினும், நவாப் அவர்களை எளிதில் ஜயித்துக் கல்கத்தாவைப் பிடித்துக்கொண்டார். அப்பொழுது அங்கிருந்தவர்களில் பலர் தங்களுடைய மனைவி மக்களுடன் படகுகளிலேறித் தப்பி ஓடிப்போனார்கள்.

சண்டையில் மடிந்துபோனவர்கள் ஒழிந்த மற்றவர்களை நவாப்பின் உத்யோகஸ்தர்கள் சிறையிலிட்டு விட்டார்கள். அவர்கள் அடைக்கப்பட்ட அறை மிகச் சிறியது என்றும், அவர்களிற் பலர் சுத்தமான காற்றில்லாமையினால் மாண்டுபோனார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது உண்மைதானா என்பதைக்குறித்து இன்னமும் அபிப்பிராய பேதம் இருந்து வருகிறது. இது ஹால்வல் உண்டாக்கிய கற்பனை எனச் சிலர் எண்ணுகிறார்கள். மற்றுஞ் சிலர் அவ்வாறு நடந்திருப்பினும், நவாப் அதைப்பற்றி யாதொன்றையும் அறிந்திலரானதனால், அவரை நிந்திக்கக் காரணமில்லை என நினைக்கிறார்கள். அந்தச் சிறை இருட்டறை என்று வழங்கப்பட்டு வருகின்றது.

நவாப் கல்கத்தாவைப் பிடித்துக்கொண்டுவிட்ட செய்தி சென்னைக்கு எட்டினதும், க்ளைவும், வாட்ஸன் என்பவரும் ஒரு நிலப்படையையும், ஒரு கப்பற்படையையும் திரட்டிக்கொண்டு கல்கத்தாவை எதிர்த்துச் சென்று, அதை ஸிராஜ் உத் தௌலாவினிட மிருந்தும் கைப்பற்றிக்கொண்டார்கள். உடனே நவாப் ஆங்கிலேயருடன் சமாதானம் செய்துகொண்டார். அப்பொழுது ஆங்கிலேயர்கள் தங்களுக்குப் போட்டியாக வியாபாரம் செய்துவந்த பிரெஞ்சுக்காரர்களை வங்காளத்திலிருந்தும் துரத்திவிடும்படி நவாப்பைக் கேட்டார்கள். அவர் அதற்கு உடன்படாததனால், அவர்கள் தாங்களே அவர்

களுடன் சண்டைசெய்து அவர்களைத் தொலைத்துவிடத் தீர்மானித்துக்கொண்டார்கள். அவர்கள் தங்களிடமிருந்து தப்பியோடிப் போய்விட்ட சில துரோகிகளைப் பிரெஞ்சுக்காரர்கள் பாதுகாத்து வருகின்றார்கள் என்று எண்ணியும், அவர்கள் ஒருகால் நவாப்புக்கு உதவிசெய்யக்கூடும் என்று பயந்தும், பிரெஞ்சுக்காரர்மீது சண்டை தொடுத்தார்கள். க்ளைவ் சந்திரநகரை எதிர்த்துச் சண்டைசெய்து அதைத் தமது வசப்படுத்திக்கொண்டார். அப்பொழுது ஆங்கிலேயர்கள் அங்கிருந்த கோட்டையையும், கிடங்குகளையும், இன்னும் பல பெரிய கட்டிடங்களையும் இடித்துப் பாழாக்கிவிட்டார்கள்.

ii. பிளாஸிச் சண்டை

சென்னையிலிருந்து க்ளைவும், வாட்ஸனும் கல்கத்தாவை எதிர்த்துச் சென்றபொழுது, சென்னையிலிருந்த வர்த்தகச் சங்கத்தின் ஆலோசனைச் சபையார் அவர்களை வங்காளத்தில் கலகத்தை மூட்டி நவாப்பைத் தொலைத்து விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி ஏவியனுப்பினார்கள். அதற்கு இணங்க, க்ளைவ் அப்பொழுது ஸிராஜ் உத் தௌலாவை அதிகாரத்திலிருந்தும் நீக்கிவிடவேண்டுமென்று முயன்று வந்தார். அவர் நவாப்பின் சேனைத்தலைவரான மீர்ஜாபர் என்பவரை ஆசைகாட்டி வசப்படுத்திக்கொண்டு, மீர்ஜாபர் நவாப்பினுடைய சேனையை அவருக்கே விரோதமாகத் தமக்கு உதவும்படி ஏற்பாடு செய்தார். இந்தத் துரோகமான எற்பாட்டை அமீர்சந்த் என்னும் ஒரு பஞ்சாபி வர்த்தகர் முன்னின்று செய்வித்தார். அதற்கு ஈடாக க்ளைவ் அவருக்கு 30 லக்ஷம் ரூபாய் தருவதாகச் சொல்லி ஒரு பத்திரத்தை எழுதி, அதில் வாட்ஸனுடைய கையொப்பத்தையும் தாமே போட்டுக் கொடுத்துவிட்டார். இது நகல். ஆனால், அசல் பத்திரத்தில் க்ளைவ் அமீர்சந்துக்குப் பணம் தருவதைக் குறித்து ஒன்றும் காணப்படவில்லை. தாம் முன்னின்று முடித்துவைத்த துரோகமான ஏற்பாட்டை, க்ளைவ் தமக்குப் பணம் தராவிடில் வெளியிட்டு விடுவதாகப் பயமுறுத்தின அமீர்சந்தை, க்ளைவ் துரோகம் செய்து ஏமாற்றிவிட்டார். மீர்ஜாபரை யன்றி நவாப்பின் உத்யோகத்திலிருந்த இன்னும் பலரும் அவருக்கு விரோதமாகக் கிளம்பி ஆங்கிலேயருடன் சேர்ந்து கொண்டார்கள்.

கி. பி. 1757-ல் பிளாஸி என்னுமிடத்தில் நவாப்புக்கும் ஆங்கிலேயருக்கும் ஒரு கடும் போர் நிகழ்ந்தது. அப்பொழுது, மீர்ஜாபர் தூரத்திலிருந்த வண்ணமாகவே சண்டை நடப்பதைப்பார்த்திருந்து, க்ளைவ் வெற்றி பெற்றபின்னர், அவருடன் வந்து சேர்ந்துகொண்டார். யுத்த முனையிலிருந்தும் தப்பி யோடிச் சென்ற ஸிராஜ் உத்தௌலா மீர்ஜாபரின் மகனான மீரான் கையினால் கொலையுண்டு போனார். க்ளைவ் உடனே முர்ஷிதாபாத்துக்குச்சென்று மீர்ஜாபரை நவாப்பாக்கினார். பிளாஸிச் சண்டை நடந்த இரண்டு மாதங்களுக்குள் கப்பற்றலைவரான வாட்ஸன் ஜுரத்தினால் இறந்துபோனார்.

மீர்ஜாபர் ஆங்கிலேயர்கள் தமக்குச் செய்த உபகாரத்திற்கு ஈடாக, க்ளைவுக்கும், மற்றுமுள்ள பல ஆங்கிலேய உத்யோகஸ்தர்களுக்கும், வர்த்தகக் கம்பனிக்கும் ஏராளமான சன்மானங்களைச் செய்தார். அவர் கம்பனியாருக்குச் சுமார் 882 சதுரமைல் விஸ்தீர்ணமுள்ள **24 பர்க்காணங்கள்** என வழங்கப்பட்டுவரும் நாட்டை இனாமாகக் கொடுத்தார். அவர் ஆங்கிலேயர்கள் அதன்பொருட்டு தமக்குச் செலுத்தவேண்டிய வரியை அவர்கள் க்ளைவுக்குக் கொடுத்துவிடும்படி ஏற்பாடு செய்ததனால், அந்தப் பிரதேசத்திற்கு க்ளைவ் ஜாகீர் எனப் பெயர்வந்தது. அன்றியும், அவர் கல்கத்தாவிலிருந்த ஆங்கிலேய, அர்மீனிய, இந்தியக் குடிகளுக்கு ஒருகோடி ரூபாயும், கடற்படை, தரைப்படைகளுக்குத் தனித்தனி 25 லக்ஷம் ரூபாயும், க்ளைவுக்கும், ட்ரேக் என்பவருக்கும் தலைக்கு $2\frac{3}{4}$ லக்ஷம் ரூபாயும், க்ளைவுக்கு மட்டில் தனிமையாக 18 லக்ஷம் ரூபாயும், இதர ஆங்கிலேய உத்யோகஸ்தர்களுக்குச் சுமார் 10 லக்ஷம் ரூபாயும் கொடுத்து உதவினார். இவ்வாறாக, அவர் இரண்டேகால் கோடி ரூபாய்க்கும் அதிகமான பணத்தைச் செலவு செய்தார்.

ஆங்கிலேயர்களுக்கு இந்தியாவில் முதன்முதல் வங்காளத்தில் நாடு கிடைத்தது பெரும் பாக்கியமேயாகும். வங்காளம் நீர் வளத்தையும், நிலவளத்தையும் பொருந்தி இந்தியாவின் சுவர்க்கம் எனக் கொண்டாடி வரப்பட்ட பிரதேசமாகும். அல்லாமலும் அது போக்கு வரவுக்கு மிகவும் சாதனமான கங்கைநதியையும், அதன் பல கால்வாய்களையும் பொருந்தி யிருந்ததனால், வியவசாயத்திலும், வியாபாரத்திலும் மேம்பட்டிருந்தது. அதனால், ஆங்கிலேய கம்ப

னியாருக்கு அதனின்றும் ஏராளமான வருமானம் கிடைத்து வந்தது.

ஆதிகாலத்தில் இந்தியாவின்மீது படையெடுத்துவந்த பாரஸிகர், கிரேக்கர், அரபியர், துருக்கியர் முதலான பலரும் நிலத்தில் சண்டை செய்வதில் வல்லவராக இருந்ததனுல், அவர்கள் நிலமார்க்கமாக வந்தது நியாயமேயாகும். அவர்களில் முகம்மதியர்கள் டில்லியைத் தங்களுடைய ராஜ்யத்தின் தலைநகராகக் கொண்டும், அதன் அருகில் பல பெரிய சண்டைகளைச் செய்தும் இந்நாட்டில் தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்தினதும் சகஜமே. ஆங்கிலேயர்கள், அங்ஙனமின்றி, கப்பற்படையில் சிறந்து இருந்ததனுல், அவர்கள் கடல்மார்க்கமாக இந்தியாவுக்கு வந்ததும், முதலில் தங்கள் அதிகாரத்தைக் கடலோரத்தில் நிலைநாட்டியதும், அங்கிருந்தும் கொஞ்சங் கொஞ்சமாக உள்நாட்டை நோக்கிச் சென்றதும் இயல்பேயாகும். அவர்களுடைய ராஜ்யத்திற்கு வெகுநாட்கள் வரையில் கல்கத்தா தலைநகராக இருந்ததும் பொருந்தியதேயாகும்.

பயிற்சிகள்

1. அலிவர்டிகானும், ஸிராஜ் உத்தௌலாவும் ஆங்கிலேயரைப் பகைக்கக் காரணமென்ன ?

2. இருட்டறை என்பது எது ? அப்பெயர் வருவானேன் ?

3. பிளாஸியில் சண்டை செய்தது யார் யார் ? காரணம் என்ன ? முடிவு என்ன ?

4. ஆங்கிலேயருக்கு 24 பர்க்காணங்கள் எவ்வாறு கிடைத்தன ?

5. ஆங்கிலேயர் வெகுகாலம்வரை கல்கத்தாவைத் தலைநகராகக் கொள்வானேன் ?

23. ஆங்கிலேயரின் அதிகாரப் பெருக்கம்

மீர்ஜாபர் தமது பொக்கிஷத்திலிருந்த பணத்தை எல்லாம் ஆங்கிலேயருக்கு வாரிவாரி வழங்கிவிட்டதனால், ராஜ்யபாரத்தை நடத்துவதற்குக்கூடப் பணமில்லாமல் திகைத்தார். அவர் கடுமையான வரிகளை விதித்துத் தமது குடிகளை வருத்தவும், நாட்டில் கலகங்கள் பெருகிப்போயின. அவருக்கு அவற்றை அடக்குவதற்குத் திறமையாவது சக்தியாவது இல்லை. அதனால், க்ளைவ் முர்ஷிதாபாத்துக்குச் சென்று கலகங்களை அடக்கி நாட்டில் அமைதியை உண்டாக்கினர். ஆனால், அவர் முர்ஷிதாபாத்தை விட்டகன்றதும், மறுபடியும் கலகங்கள் உண்டாயின.

கி. பி. 1759-ல் முகலாய சக்ரவர்த்தியின் மைந்தரான ஷாஸடா என்பவர் மீர்ஜாபரின் பகைவரான அயோத்தி நவாப்புடன் சேர்ந்துகொண்டு பீஹார் நாட்டின்மீது படையெடுத்துவந்தார். அவர் வங்காள நவாப் முகலாய அரசரின் மேலதிகாரத்தை ஒப்புக்கொண்டு, அவருக்குக் கப்பம் செலுத்துமாறு செய்யவேண்டும் என்னும் நோக்கத்துடன் வந்தார். க்ளைவ் அவர்களை எதிர்த்துச் சென்று சண்டையிட்டு வென்று, மீர்ஜாபரின் நாட்டையும், கௌரவத்தையும் காப்பாற்றினர். அவ்வாறு இருந்தும், மீர்ஜாபர் ஆங்கிலேயர்கள் தம்மைத் தொலைத்துவிட எண்ணித் தமது நாட்டில் கலகத்தை உண்டாக்கி வருகிறார்கள் என்று அவர்கள்மீது மிகுந்த சந்தேகத்தைக் கொண்டு, டச்சுக்காரருடன் கலந்து ஆங்கிலேயரைச் சண்டையிட ஆலோசித்தார். அப்பொழுது சின்ஸுராவில் டச்சுக்காரர்களுடைய கப்பற்படைகள் கொஞ்சம் கொஞ்சமாக வந்துகூடின. அதைக்கண்ட க்ளைவ், அப்பொழுது டச்சுக்காரர்கள் ஆங்கிலேயருடன் சமாதானமாக இருந்து வந்ததையும் கருதாது, அவர்களை வென்று வரும்படி போர்ட் என்பவரை அனுப்பினர். போர்ட் அவ்வாறே சென்று அவர்களைத் தோற்க அடித்துவிட்டார். அதனோடு டச்சுக்காரர்கள் தங்களுடைய இந்திய வியாபாரத்தை முழுவதும் இழந்து, கீழிந்தியத் தீவுகளை நோக்கிச் சென்றுவிட்டார்கள். அன்றியும், அவர்கள் தாங்கள் இனிச் சுதேச அரசர்களின் வழக்குக்களில் தலையிட்டுக்கொள்ளுவதில்லை என்றும் தீர்மானித்துக்கொண்டார்கள். கி. பி. 1760-ம் வருஷம் பிப்ரவரி மாதம் க்ளைவ் இங்கிலாந்துக்குச் சென்

ருர். அவர் மூன்று வருஷகாலம் ஆங்கிலேய வியவகாரங்களை முன்னின்று நடத்திப் பல வெற்றிகளை அடைந்தார்.

க்ளைவ் இந்தியாவை விட்டகன்ற சில மாதங்களுக்குள், ஷாஹலம் II என்னும் முகலாய சக்ரவர்த்தியும், ஷூஜா உத் தௌலா என்னும் அயோத்தி நவாப்பும் இரண்டாவதுமுறை மீர்ஜாபரின்மீது படையெடுத்துவந்தார்கள். முன்பு க்ளைவின் கையினுல் தோல்வியை அடைந்துபோன ஷாஸடா, தாம் சக்ரவர்த்தியான பிறகு வங்காள நவாப்பைத் தமது அதிகாரத்தில் அடக்கிக்கொள்ள வேண்டுமென்று இன்னும் ஒரு முறை வங்காளத்தின்மீது படையெடுத்துவந்தார். அப்பொழுது ஆங்கிலேயர்மீது மிகுந்த வெறுப்புக்கொண்டிருந்த மீர்ஜாபர் முகலாய மன்னருடன் சமாதானம் செய்துகொண்டுவிட எண்ணினுர். ஆனுல், அவர் அவ்வாறு செய்வதில் ஆங்கிலேயருக்கு விருப்பம் இல்லை. அதனுல், காப்டன் நாக்ஸ் என்பவர் ஒரு பெரும் படையுடன் சென்று பகைவர்களைப் பாட்ணுவில் சண்டையிட்டுத் தோற்க அடித்துவிட்டு, மீர்ஜாபருக்கு உண்டான துன்பத்தைப் போக்கினுர். என்ருலும், மீர்ஜாபருக்கு ஆங்கிலேயரிடமிருந்த பகை சிறிதும் குறைவுபடவில்லை. ஆங்கிலேயரும் அவரிடம் வெறுப்புற்று அவரை நீக்கிவிட்டு, அவருடைய மருமகனை மீர்காஸிம் என்பரை வங்காள நவாப்பாக்கினுர்கள்.

மீர்காஸிம் திறமையும், பராக்கிரமமும் உடையவர். அவர் நியாய வழியில் நடக்கும் சுபாவம் பொருந்தியவர். அவர் மீர்ஜாபரின் கடன்களைத் தீர்த்துவிட்டு, பொக்கிஷத்தில் பணத்தைச் சேர்த்து விமரிசையாக ஆட்சி செய்துவந்தார். அவர் செய்துவந்த ஏற்பாடுகள் யாவும் சிறந்தனவாகவே இருந்தன. அவர் தமக்கு ஆங்கிலேயரிடம் உண்டான நட்புப்பெருகி வரவேண்டுமென விரும்பி வெகு ஜாக்கிரதையாக நடந்துகொண்டார். அவ்வாறு இருந்தும், அவருக்கும் ஆங்கிலேயருக்கும் சண்டை உண்டாயிற்று.

ஆங்கிலேய வர்த்தகக் கம்பனியார் வரி செலுத்தாமல் உள்நாட்டில் வியாபாரம் செய்யும் உரிமையைப் பெற்று வர்த்தகம் செய்து வந்தார்கள். மீர்ஜாபர் கம்பனியின் உத்யோகஸ்தர்கள் செய்து வந்த அவர்களுடைய சொந்தமான வியாபாரத்திற்குக்கூட வரிசெலுத்த வேண்டியதில்லை என்று அனுமதி கொடுத்தார்.

எனவே, அந்நியர்கள் வரி செலுத்தாமலும், சுதேச வர்த்தகர்கள் வரி செலுத்தியும், வியாபாரம் செய்து வந்தார்கள். இந்த ஏற்பாடு சிறிதும் நியாயமானதல்ல என்பது சொல்லாமலே விளங்கும். ஆங்கிலேய வர்த்தகர்களுக்கு அதிகமான நன்மை ஏற்பட்டிருந்தும், அவர்கள் சுதேச வர்த்தகர்களிடம் லஞ்சம் வாங்கிக்கொண்டு, அவர்களுடைய சரக்குக்களைத் தங்களுடையன என்று சொல்லிக்கொண்டு வரி செலுத்தாமல் நவாப்பை மோசம்செய்து வந்தார்கள். இந்த ஏற்பாட்டில் அயோக்கியர்களாயிருந்த சில சுதேச வியாபாரிகள் ஆங்கிலேயருடன் சேர்ந்துகொண்டு நவாப்பை மோசம் செய்து லாபமடையவும், யோக்கியர்களான சுதேச வர்த்தகர்கள் மட்டில் வரிசெலுத்திவரவும் இடமுண்டாயிற்று. இது பெரும் அநீதி எனக்கருதிய நவாப் சுதேச வியாபாரிகள் செலுத்திவந்த வரியையும் தள்ளிவிட்டார். அதனால், ஆங்கிலேய வியாபாரிகள் அநியாயமான வழியில் சம்பாதித்துவந்த லாபத்தை இழந்து விட்டார்கள். அவர்கள், மீர்காஸிம் சுதேச வியாபாரிகளுக்கு வரி விதிக்கவேண்டுமென வாதாடினார்கள். அவர் அதற்குச் சிறிதும் இணங்கி வராததனால், ஆங்கிலேயர்கள் அவர்மீது சண்டை தொடுக்க ஆரம்பித்தார்கள்.

ஆங்கிலேய வர்த்தகச் சங்கத்தின் அதிகாரத்திற்கு அடங்கி வங்காளத்தில் கவர்னர்களாக இருந்த ஹேஸ்டிங்ஸ், வான்ஸிடார்ட், வெரல்ஸ்ட் என்பவர்கள் மீர்காஸிமின் ஆட்சியையும், நடவடிக்கையையும் மெச்சியும், ஆங்கிலேய வர்த்தகர்களின் துன்மார்க்க வழிகளையும், அத்து மீறின செய்கைகளையும் பழித்தும் இங்கிலாந்திலுள்ள மேலதிகாரிகளுக்கு அநேக நிருபங்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்கள், ஆங்கிலேய கம்பனியின் உத்யோகஸ்தர்களிற் பலர் நவாப்பின் அதிகாரத்தை மீறி நடந்தும், அவருடைய உத்யோகஸ்தர்களை அவமதித்தும், அவருக்குப் பலவகையான தீங்குகளை இழைத்தும் நடந்து கொண்டார்கள் என்றும் கூறியுள்ளார்கள். மீர்காஸிம் சண்டையை ஒழித்துச் சமாதானம் கொள்வதற்காகச் செய்த முயற்சிகள் பயன் பெறவில்லை. அதனால் அவர் ஆங்கிலேயர்கள் தமது ஏற்பாடுகளை அறியாமலிருக்க விரும்பி, மாங்கீர் பட்டணத்தைத் தமது நாட்டின் தலைநகரமாக்கிக் கொண்டார்.

முதலில், எல்லிஸ் என்பவர் பாட்னுவை எதிர்த்துச் சண்டை செய்யவும், நவாப் அவரையும், அவருடைய போர் வீரர்களையும் சிறைப்படுத்தி விட்டார். பின்னர், கி. பி. 1763-ல், மேஜர் ஆடம்ஸ் என்பவர் மீர்காஸிமை கேரிய, உதுவனல என்னுமிடங்களில் சண்டைசெய்து தோற்க அடித்துவிட்டார். மீர்காஸிம் பாட்னுவை நோக்கிச் செல்லவும், ஆடம்ஸ் அவரை அவ்விடத்திற்கும் துரத்திச் சென்றுர். நவாப் கோபம் மூண்டு, அப்பொழுது தமது வசத்தி லிருந்த ஆங்கிலேய கைதிகளைக் கொன்றுவிட்டார். பின்பு அவர் ஆங்கிலேயரது கையினின்றும் தப்பித்துக்கொள்ள விரும்பி, தமது நாட்டின் எல்லையைக் கடந்து, 1763-ம் வருஷம் டிஸெம்பர் மாதம் 4-ம் தேதியன்று, ஷுஜா உத் தௌலாவின் நாட்டிற்குச் சென்று விட்டார். அப்பொழுது ஆங்கிலேயர்கள் மீர்ஜாபரை மறுபடியும் வங்காள நவாப்பாக நியமித்தார்கள்.

இதனிடையில், ஆங்கிலேய சிப்பாய்கள் கலகம் செய்யவும், மேஜர் மன்ரோ என்பவர் அக்கலகத்தை அடக்கி, அதற்குக்காரண மாக இருந்தவர்களைச் சிரச்சேதம் செய்துவிட்டார். இது முதல் சிப்பாய்க் கலகம் என வழங்கப்படுவது.

கி. பி. 1764-ல் மீர்காஸிம், முகலாய சக்ரவர்த்தியையும் அயோத்தி நவாப்பையும் துணைசேர்த்துகொண்டு வந்து, பாட்னுவை எதிர்க்கவும், ஆங்கிலேயர்கள் அவர்களை எளிதில் வென்று துரத்தி விட்டார்கள். பின்னர், பக்ஸார் என்னுமிடத்தில் இருதிறத்தாருக் கும் சண்டை நடந்தது. அதிலும் ஆங்கிலேயர்களே வெற்றிபெற் ருர்கள். பக்ஸார் சண்டையோடு முகலாய அதிகாரம் முற்றும் தொலைந்துபோயிற்று. ஆங்கிலேயர்களுக்குப் பிளாஸியில் நடந்த சண்டையில் உண்டான வெற்றியின் பயனுக வங்காளத்தில் கிடைத்த அதிகாரம் பக்ஸார் சண்டையில் ஏற்பட்ட வெற்றியினுல் வேரூன்றி நிலைபெற்றுவிட்டது.

கி. பி. 1765-ல், மீர்காஸிமும், முகலாய சக்ரவர்த்தியும், அயோத்தி நவாப்பும் மறுபடியும் ஆங்கிலேயரைக் கோரா என்னு மிடத்தில் எதிர்த்துச் சண்டையிட்டு இன்னும் ஒருமுறை தோல் வியை அடைந்தார்கள். முகலாய மன்னரும், அயோத்தி நவாப்பும் ஆங்கிலேயரைச் சரணமடைந்து அவர்களுடன் சமாதானஞ்செய்து

கொள்ள விரும்பினார்கள். மீர்காஸிம் நாட்டைவிட்டு உயிர் தப்பி ஓடிப்போனார். அவர் மிகுந்த துன்பத்தையும், வறுமையையும் அனுபவித்து, கி. பி. 1777-ல், டில்லியில் இறந்து போனார்.

இரண்டாவது முறை நவாப்பான மீர்ஜாபர் மிகச் சிறிது காலமே உயிர் வாழ்ந்திருந்தார். அப்பொழுது ஆங்கிலேய உத்யோகஸ்தர்கள் அத்து மீறியும், அவருடைய அதிகாரத்தை நிராகரித்தும் நடந்துவந்தார்கள். அவர் கல்கத்தாவிலிருந்த வர்த்தகக் கம்பனியின் போர்ட்டுக்குத் தமது குறைகளை எல்லாம் தெரிவித்துக் கொண்டார். ஆனால், அந்த ஆங்கிலேய மேலதிகாரிகள் அவற்றைச் சிறிதும் பொருள்படுத்தவில்லை. பெயருக்குமட்டில் வங்காள நவாப்பாக இருந்த மீர்ஜாபர், 1765-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 5-ம் தேதி யன்று இறந்துபோனார். அப்பொழுது ஆங்கிலேயர்கள் 15 வயதுள்ள நஜிம்உத்தௌலா என்னும் சிறுவனைப் பெயருக்கு மட்டில் நவாப்பாகச் செய்து, சகல அதிகாரத்தையும் தாங்களே செலுத்திவரலானார்கள். அவ்வாறு இருந்தும், புதிய நவாப் ஆங்கிலேய உத்யோகஸ்தர்களுக்கு 20 லக்ஷம் ரூபாய் இனாமாகத் தந்தார். அதற்குச் சிறிது முன்புதான் ஆங்கிலேய மேலதிகாரிகள் கம்பனியின் உத்யோகஸ்தர்கள் எவ்விதமான பரிசாவது, பரிதானமாவது வாங்கக்கூடாது என்று உத்தரவு செய்தனுப்பினார்கள். அப்பொழுது இங்கிலாந்திலிருந்த கம்பனியின் மேலதிகாரிகள் க்ளைவை வங்காள கவர்னராக நியமித்து இந்தியாவுக்கு அனுப்பினார்கள். அவர் 1765-ம் வருஷம் மே மாதம் கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தார்.

பயிற்சிகள்

1. மீர்ஜாபருக்கு ராஜ்யத்தை ஆளுந்திறமை யில்லை யென்பதை ருசுப்படுத்துக.
2. மீர்காஸிம் நவாப் ஆனது எங்ஙனம்?
3. மீர்காஸிமின் ஆட்சி எவ்வாறிருந்தது?
4. மீர்காஸிமுடன் ஆங்கிலேயர் சண்டை செய்வானேன்?
5. பக்ஸார் சண்டை யார் யாருக்கு, எப்பொழுது, ஏன் நடந்தது? அதன் முடிவு என்ன? அதை முக்கியமானதாகக் கருதுவானேன்?

24. லார்ட் க்ளைவின் சீர்திருத்தங்கள்
(கி. பி. 1765 — கி. பி. 1767)

க்ளைவ் இந்தியாவை விட்டுச் சென்று திரும்பிவந்த ஐந்து வருஷங்களுக்குள் ஆங்கிலேய கீழிந்தியவர்த்தகக் கம்பனியின் உத்யோகஸ்தர்கள் நெறிதவறி நடந்தும், ஆங்கிலேயருடைய கௌரவத்தையும், பெருமையையும் பலரும் பழிக்கும்படி ஒழுகியும் வந்தார்கள். அதனால், கம்பனியின் மேலதிகாரிகள் க்ளைவை மறுபடியும் இந்தியாவுக்கு அனுப்பிக் கம்பனியின் வியவகாரங்களையும், உத்யோகஸ்தர்களையும் ஒழுங்குபடுத்தும்படி செய்தார்கள்.

க்ளைவ் வந்ததும், கி. பி. 1765-ல், அல்லாஹாபாத்தில் ஷாஹலம் II என்னும் முகலாய சக்ரவர்த்தியுடனும், ஷுஜா உத் தௌலா என்னும் அயோத்தி நவாப்புடனும் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார். அதன் நிபந்தனைகள்படி ஆங்கிலேயர்கள் அயோத்தியைத் திரும்பவும் நவாப்புக்கே கொடுத்துவிட்டு அவரிடமிருந்து 50 லக்ஷம் ரூபாய் பெற்றுக்கொண்டார்கள். அன்றியும், அவர்கள் அவருடைய ராஜ்யத்தினின்றும் கோராவையும், அல்லாஹாபாத்தையும் வேறுபிரித்து அவற்றை ஷாஹலத்துக்குக் கொடுத்தார்கள். அதையன்றி, அவர்கள் வங்காளத்தின் வரி வசூலிலிருந்து அவருக்கு வருஷவாரியில் 26 லக்ஷம் ரூபாய் கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டார்கள். இவைகளுக்கு ஈடாக அவர்கள் ஷாஹலத்தினிடமிருந்து 24 பர்க்காணங்களையும், பர்ட்வான், மிட்னபூர், சிட்டகாங்க் என்னும் ஸ்தலங்களையும், வட சர்க்காரையும் தாங்கள் சொந்தமாக அனுபவிப்பதற்கான உறுதிமொழியையும், தாங்கள் வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா நாடுகளில் வரி வசூல் செய்து கொள்ளும் அதிகாரத்தையும் பெற்றுக்கொண்டார்கள். முகலாய சக்ரவர்த்தி தமது ராஜ்யத்தையும், ராஜ்ய பாரத்தையும் இழந்து, ஆங்கிலேயர்களுக்கு அடங்கியும், அவர்களிடமிருந்து உபகாரச் சம்பளம் பெற்றும் உயிர் வாழ்ந்துவந்தார்.

க்ளைவ் வங்காளத்தைப் பரிபாலிக்கும் வகையில் ஒரு புதிய ஏற்பாட்டைச்செய்தார். அதன்படி நவாப் குடிகளின் வழக்குக்களை விசாரித்துத் தீர்ப்புக்கள் செய்து நியாய பரிபாலனத்தை

நடத்தி வரிவசூல் செய்யவேண்டும். கம்பனியார் வரிப்பணத்தைக் கொண்டு உத்யோகஸ்தர்களுக்குச் சம்பளங்கள் தந்தும், துரைத் தன சம்பந்தமான வேறு செலவுகளைச்செய்தும், போர்ப்படைகளை



வைத்து நாட்டைப் பாதுகாத்தும் வரவேண்டும். இந்த இரட்டை ஆட்சியினால் துன்பம் விளைந்தது.

சுதேச அரசர்களின் வியவகாரங்கள் முடிந்ததும், க்ளேவ் கம்பனி உத்யோகஸ்தர்களின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்து வதற்கான சில திருத்தங்களைச் செய்தார். அவர் கம்பனியின் உத்யோகஸ்தர்கள் லஞ்சம் வாங்கக்கூடாது என்றும், அவர்கள் சொந்தமாக வியாபாரம் செய்யக்கூடாது என்றும் திட்டம் செய்தார். அவர் அப்பொழுது குறைவாக இருந்த அவர்களுடைய சம்பளங்களை அதிகப்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் செய்தார். ஆனால், கம்பனியின் மேலதிகாரிகள் க்ளேவ் உத்யோகஸ்தர்களுடைய சம்பளங்களை உயர்த்துவதற்காகச் செய்த சிபார்சுகளை முழுவதும் ஒத்துக்கொள்ளாததனால், அவர்கள் சில வருஷங்கள் வரையில் முன்போலவே தனித்தனியாக வியாபாரங்கள் செய்து பணம் சம்பாதித்து வந்தார்கள். அதை க்ளேவ் தடுக்கமுடியாததோடு, தானும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு உப்பு வியாபாரம் செய்து மிகுந்த லாபத்தைச் சம்பாதித்துக்கொண்டார். ஆனால், கி. பி. 1768-ல், உப்பு வர்த்தகம் செய்துவந்த உத்யோகஸ்தர்களின் சங்கம் அழிந்துபோயிற்று. க்ளேவின் திருத்தங்கள் நாளடைவில் முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டன.

அதன் பின்னர், க்ளேவ் போர்வீரர்கள் பெற்றுவந்த இரட்டைப் படியை நிறுத்திச் சேனையின் பொருட்டுச் செய்யப்பட்டுவந்த செலவைக் குறைத்தார். அப்பொழுது, போர்வீரர்களிற் பலர் கலகம் செய்யவும், க்ளேவ் அவர்களைத் தண்டித்துக் கலகத்தை உடனே அடக்கினார்.

இவற்றை எல்லாம் செய்துவிட்டு, க்ளேவ் கி. பி. 1767-ல் இங்கிலாந்துக்குச் சென்றுவிட்டார். அங்கே அவர் ஏழுவருஷம் உயிரோடு இருந்து, கி. பி. 1774-ல், தற்கொலை புரிந்துகொண்டு இறந்து போனார்.

க்ளேவ் திரும்பிவந்தபொழுது வங்காள ராஜ்யம் இருந்த நிலைமையில், அவர் வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா நாடுகளை முழுவதும் கைப்பற்றிக்கொண்டு ஆங்கிலேய அதிகாரத்தை வங்காளத்தில் நிலைநாட்டியிருக்கலாம். அவர் அவ்வாறு செய்யாமல், அந்நாடுகளில் ஆங்கிலேயர்கள் வரி வசூல் செய்யும் அதிகாரத்தை மட்டில் ஏற்றுக்கொள்ளும்படி செய்வானேன்? ஆங்கிலேய சரித்திராசிரியர்கள் க்ளேவ்

அவ்வாறு செய்ததினின்றும், அவருடைய நடுவு நிலைமையும், ஒப்புரவும் வெளியாகின்றன என்கிறார்கள். மற்றவர்கள் அவர் அந்நாடுகளை ஆங்கிலேய ஆட்சியின்கீழ்க் கொண்டுவரின், அதனால் பெருந்தீங்கு விளையும் எனப் பயந்து அங்ஙனம் செய்யவில்லை எனக் கருதுகிறார்கள். அவர் நன்னடக்கை சிறிதும் இல்லாத ஆங்கிலேய உத்யோகஸ்தர்களிடம் அரசாட்சியை ஒப்புவிக்கச் சம்மதிக்கவில்லை. அன்றியும், தாம் அவ்வாறு செய்வதனால், ஆங்கிலேயருக்கு இதர ஐரோப்பியர்களின் பகை உண்டாகிவிடும் என்றும் பயந்தார்.

பயிற்சிகள்

1. அல்லாஹாபாத் உடன்படிக்கையின் நிபந்தனைகள் என்ன ?

2. க்ளைவ் செய்த சீர்திருத்தங்கள் யாவை ?

3. க்ளைவ் வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா மாகாணங்களை முழுவதும் கைப்பற்றிக்கொள்ளாமல் விட்டுவிடுவானேன்?

4. க்ளைவின் ஜீவிய சரித்திரத்தை 20 வரிகளுக்கு மேற்படாமல் எழுதுக.

25. வாரன் ஹேஸ்டிங்ஸ் (கவர்னர்)

(கி. பி. 1772—கி. பி. 1774)

வியாபாரம் செய்வதற்கென்று வந்த ஆங்கிலேய கீழிந்தியக் கம்பனியார் இப்பொழுது இந்நாட்டில் ராஜ்யபாரமும் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள் அல்லவா ? அவர்கள் க்ளைவின் இருதலைப்பட்ட துரைத்தன அமைப்பினால் உண்டான குறைகளைப் போக்கி நாட்டில் அமைதியை உண்டாக்குவதற்குத் தக்க ஒருவரை வங்காள கவர்னராக நியமிக்கவேண்டுமென்று எண்ணி, வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவரைக் கவர்னர் ஆக்கினார்கள். அவர் வரண்டுபோயிருந்த பொக்கிஷத்தில் பணத்தைச் சேர்த்தார். கடுமையான வரிகளைத் தள்ளியும், குறைத்தும் குடிகளுக்குள் அமைதியை உண்டாக்கினார். ஆங்கிலேயரை நியமித்து வரிகளைச் சரியாக வசூலித்துக் கம்பனியாருக்குச் செலுத்துமாறு திட்டம் செய்தார். சட்ட திட்டங்களை வரையறுத்து ஒழுங்குபட எழுதிவைத்து அவற்றின்படி குடிகளும், நியாயாதிபதிகளும் நடந்தொழுகவேண்டுமென ஆஜ்ஞாபித்தார்.

சண்டைகளுக்கான ஏற்பாடுகளைப் பண்ணுவதிலும் அவர் முயன்று வரலானார்.

வாரன் ஹேஸ்டிங்ஸும், க்ளைவைப்போல், ஆங்கிலேய கம் பனியில் ஒரு சிறிய குமாஸ்தாவாக வேலையில் அமர்ந்து, கி. பி.



வாரன் ஹேஸ்டிங்ஸ்

1750-ல், இந்தியாவுக்கு வந்தவர். கி. பி. 1772-ல் அவர் வங்காள கவர்னர் ஆனார். அவர் குடிகளை வருத்தியும், கம்பனியை மோசஞ் செய்தும் வந்த வரி வசூல் உத்யோகஸ்தர்களை வேலைகளினின்றும் தள்ளிவிட்டு, அவர்களுக்குப் பதிலாக ஆங்கிலேயர்களை நியமித்தார். அவர்கள் வரி வசூல் செய்வதையன்றி, நியாயாதிபதிகளாகவும்

இருந்தார்கள். அவர்களுக்கு ஸிவில், க்ரிமினல் என்னும் இருவகைப் பட்ட வழக்குக்களையும் விசாரித்துத் தீர்ப்புச் செய்யும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. வரி வசூல் ஏற்பாடுகளை மேற்பார்வையிடுவதற் கென்று மூன்று பெயர்கள் அடங்கிய போர்ட் அவ் ரேவின்யூ என் னும் ஒரு சபை உண்டாக்கப்பட்டது. கல்கத்தாவில் ஒரு க்ரிமினல் அப்பீல் கோர்ட்டும், ஒரு ஸிவில் அப்பீல் கோர்ட்டும் ஏற்படுத்தப் பட்டன. இவற்றையல்லாமல், ஹேஸ்டிங்ஸ் ஆங்கிலேய நீதிபதி களுக்கு இந்நாட்டின் பழக்க வழக்கங்களையொட்டி நியாயம் நடத்து வதில் உதவி செய்வதற்கென்று காஜிகளையும், பண்டிதர்களையும் நிய மித்தார். ஹிந்துக்களுடையவும், முகம்மதியர்களுடையவும் சட் டங்களை ஒழுங்குபடுத்தி, அவற்றை யாவரும் அறிய எழுதி வைத் தார். இந்த ஏற்பாட்டில் நவாப்பினுடைய அதிகாரம் முற்றும் தொலைந்துபோய் ஆங்கிலேயர்கள் சர்வாதிகாரிகள் ஆனார்கள்.

பணம் சம்பாதிப்பதற்கு, வரி வசூல் சம்பந்தமான ஏற்பாடு களைத் திருத்தமாகச் செய்ததை யல்லாமல், ஹேஸ்டிங்ஸ் வேறு சில உபாயங்களையும் செய்தார். ஷாஹலம் II அல்லாஹாபாத் உடன் படிக்கையை மீறி மாகாதஜி ஸிந்தியாவோடு சேர்ந்துகொண்டு அல்லாஹாபாத்திலிருந்து டில்லிக்குப்போனார். அதனால் ஹேஸ்டிங்ஸ், கம்பனியார் அவருக்கு வருஷவாரியில் கொடுத்துவந்த 26 லக்ஷம் ரூபாயை நிறுத்திவிட்டார். அல்லாமலும், அவர் அவரிடமிருந்தும் கோராவையும், அல்லாஹாபாத்தையும் பிடுங்கிக்கொண்டு, அவற்றை 50 லக்ஷம் ரூபாய்க்கு அயோத்தி நவாப்புக்கு விற்றுவிட்டார்.

அயோத்திக்கு அப்பாலுள்ள ரோஹில்கண்ட் மாகாணத்தைச் சுமார் 35 வருஷங்களாக ரோஹில்லர் என்னும் ஓர் ஆப்கானிய ஜாதியார் ஆண்டு வந்தார்கள். அது கங்காநதி தீரத்தில் இருந்த தனால், வளப்பம் மிகுந்து இருந்தது. மஹாராஷ்டிரர்களும் அயோத்தி நவாப்பும் அதைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென்று முயன்று வந்தார்கள். ஷுஜா உத் தௌலா ஆங்கிலேயரின் நண்பர். அவர் அயோத்தி நாட்டில் வலிமை மிகுந்திருந்தால் மஹாராஷ்டிரர்கள் அவருடைய நாட்டைத் தாண்டிக்கொண்டு ஆங்கிலேயரின் மீது படையெடுத்துவர முடியாது. ஆதலினால், ஹேஸ்டிங்ஸ் அயோத்தி நவாப்பின் வன்மையைப் பெருக்குவதில் ஊக்கம் கொண்

டிருந்தார். அதற்கிணங்க, ஷூஜா உத் தௌலா வங்காள கவர்னரை ரோஹில்லருக்கு விரோதமாய்த் தமக்குத் துணை வரும்படி வேண்டினர். அதன் பொருட்டுத் தாம் கம்பனியாருக்கு 40 லக்ஷம் ரூபாய் தருவதாகவும் சொன்னர். ஹேஸ்டிங்ஸ் அதற்கு உடன்பட்டு, கி. பி. 1774-ல், ஒரு சேனையை அனுப்பி ஆங்கிலேயருக்கு எவ்விதத் தீமையும் செய்யாத ரோஹில்லரைச் சண்டையிட்டு வென்று, அந்நாட்டை அயோத்தி நவாப்புக்குக் கொடுத்து 40 லக்ஷம் ரூபாய் பெற்றுக்கொண்டார்.

இப்படிப் பல்வேறு வகைகளிலும் நீதிதவறிப் பணம் சம்பாதித்தும் கம்பனியாரின் வறுமை நீங்குவதாகக் காணப்படவில்லை. அவர்கள் இந்தியாவிலும், இங்கிலாந்திலும், கடன் வாங்கி, துரைத்தனத்தை நடத்தவேண்டியிருந்தது. அதுவும் போதாமல், அவர்கள் பார்லிமெண்ட் சபையைத் தங்களுக்கு ஒரு கோடி ரூபாய் கடன் கொடுக்கும்படி கேட்டார்கள். ஏற்கெனவே கீழிந்தியக் கம்பனியின் முதலாளிகள் தங்களுக்குச் சரியான லாபம் கிடைக்கவில்லையென்று முணுமுணுத்து வந்தார்கள். அதனுல், பார்லிமெண்ட் சபையார் ஓர் ஆணைக்கழகத்தை ஏற்படுத்தி இந்தியாவுக்கு அனுப்பி, வர்த்தகக் கம்பனியின் வியவகாரங்களை விசாரிக்கும்படி செய்தார்கள். அவர்கள் இந்தியாவுக்கு வந்து விசாரித்துக் கம்பனியார் தங்கள் காரியங்களைச் செம்மையாய்க் கவனித்து நடத்தவில்லை என்றும், அவர்களுடைய உத்யோகஸ்தர்கள் நீதி தவறியும், மேலதிகாரிகளின் உத்தரவுகளை நிராகரித்தும், மனம்போல் நடந்து வருகின்றுர்கள் என்றும் தெரிவித்தார்கள். அதனுல், பார்லிமென்டார் இந்திய வியவகாரங்களை அது முதலாகத் தமது மேற்பார்வையில் வைத்து நடத்தும்படி தீர்மானித்துக் கொண்டார்கள்.

அதற்கிணங்க, கி. பி. 1773-ல் லார்ட் நார்த் என்னும் ஆங்கிலேய முதன் மந்திரி பார்லிமென்டின் அனுமதியைக்கொண்டு ஒரு சட்டத்தை ஏற்படுத்தினர். அதன் நிபந்தனைகளாவன:—

"பார்லிமென்டின் உத்தரவில்லாமல், வர்த்தகக் கம்பனியார் இந்தியாவில் சண்டையாவது, சமாதானமாவது செய்யக்கூடாது. கம்பனியின் மேலதிகாரிகள் இந்தியாவுக்கு அனுப்பும் திட்டங்களையும், உத்தரவுகளையும் ஆங்கிலேய துரைத்தனத்தின் மேலதிகாரிகளுக்

குக் காண்பிக்கவேண்டும். பார்லிமென்ட், கம்பனியாரின் சட்டங்களையும், உத்தரவுகளையும் ரத்து செய்துவிடலாம். கம்பனியின் அதிகாரத்திற்கு உட்படாத நியாயஸ்தலம் ஒன்றைக் கல்கத்தாவில் அமைத்து, அதற்கு நியாயாதிபதிகளை ஆங்கிலேய அரசரே நியமிக்க வேண்டும். வங்காள கவர்னர் ஆங்கிலேய நாடுகளுக்கெல்லாம் கவர்னர்-ஜெனரலாக நியமிக்கப்படவேண்டும். அவருக்கு உதவியாக நான்கு பெயர்கள் அடங்கிய ஒரு மந்திராலோசனைச் சபை இருக்க வேண்டும். அவர்கள் அனைவரும் ஐந்து வருட காலம் வேலை பார்த்து வரலாம். துரைத்தன நடவடிக்கைகள் யாவும் மந்திராலோசனைச் சபையின் அதிகமான அங்கத்தினர்கள் கொண்டுள்ள அபிப்பிராயத்தை யொட்டி நடைபெறவேண்டும். மந்திராலோசனைச் சபையில் இருவர் ஓர் அபிப்பிராயமும், மற்றிருவர் அதற்கு விரோதமான வேறு அபிப்பிராயமும் கொள்வார்களாயின், அப்பொழுது கவர்னர்-ஜெனரலுக்கு வாக்குரிமை உண்டு.'' இவை அடங்கிய சட்டம் ரேகுலேடிங் ஆக்ட் என வழங்கும் ஒழுங்குமுறைச் சட்டம் ஆகும். கி. பி. 1774-ல் அச்சட்டம் இந்நாட்டில் அமுலுக்கு வந்தது.

ஒழுங்குமுறைச் சட்டத்தில் சில குறைகள் இருந்தன. கவர்னர்-ஜெனரலுக்கு அவருடைய சபையை மீறி நடக்கும் அதிகாரம் இராததனால், அவருடைய மந்திராலோசனைச் சபையில் மூவர் ஒன்று சேர்ந்துகொண்டு அவருக்கு விரோதமாய் நின்று, அவர் எதையும் செய்ய முடியாதபடி தடுத்து வந்தார்கள். அன்றியும், புதிதாக உண்டாக்கப்பட்ட நியாயஸ்தலத்து நீதிபதிகளின் அதிகாரத்தையும், கவர்னர்-ஜெனரலுடைய அதிகாரத்தையும் வரையறுக்காததனால், அவர்களுக்குள் சச்சரவுகள் உண்டாயின. புதிதாகச் செய்யப்பட்ட சட்டங்கள் பலவகைகளில் பொருள்படும்படி எழுதப்பட்டிருந்ததனால், சொல்லரிய கஷ்டங்களுக்கு இடந்தந்தன. இவ்வாறாகப் புதிய ஒழுங்குபடுத்துச் சட்டம் ஒழுங்கீனமுள்ளதாய் முடிந்தது.

பயிற்சிகள்

1. வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்காள கவர்னராக நியமனம் பெற்று வந்ததும் பரிபாலனத்தில் செய்த திருத்தங்கள் யாவை ?

2. ரெகுலேடிங் ஆக்ட் பிறப்பிக்கப்படுவானேன்? அதன் நிபந்தனைகள் என்ன ?

3. அந்தச் சட்டத்திலிருந்த குறைகள் யாவை?

4. ஷாஹலத்தின் உபகாரச் சம்பளத்தை வாரன் ஹேஸ்டிங்ஸ் நிறுத்திவிடுவானேன்?

26. வாரன் ஹேஸ்டிங்ஸ் (கவர்னர்-ஜெனரல்) (கி. பி. 1774—கி. பி. 1785)

ரெகுலேடிங் ஆக்டை யொட்டிக் கி. பி. 1774-ல், வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர்-ஜெனரல் ஆனுர். அவருடைய மந்திராலோசனைச் சபையின் அங்கத்தினர்கள் மூவர் புதிதாக நியமிக்கப்பட்டு இங்கிலாந்திலிருந்து வந்தவர்கள். அவர்களுள் ஒருவரான பிலிப் ப்ரான்ஸிஸ் என்பவர் வெகு நல்லவர். அவர் நீதி தவருதவர். அவர் குடிகளுக்கு நன்மை செய்வதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். அவருக்கு வாரன் ஹேஸ்டிங்ஸின் துரைத்தனம் கேவலமான நிலையில் இருப்பதாகத் தோன்றியது. மந்திராலோசனைச் சபையின் வேறு இரண்டு அங்கத்தினரும் ப்ரான்ஸிஸினுடைய அபிப்பிராயத்தையே கொண்டிருந்தனர். இவர்கள் ப்ரான்ஸிஸோடு சேர்ந்துகொண்டு ஹேஸ்டிங்ஸை எதிர்த்து வந்தார்கள். அதனுல், ஹேஸ்டிங்ஸ் செய்த பல அநீதியான காரியங்கள் வெளியாயின.

ராஜா நந்தகுமார் என்பவர், ஹேஸ்டிங்ஸ் லஞ்சம் வாங்கிக்கொண்டு உத்யோகங்கள் கொடுத்ததாக, அவர்மீது குற்றஞ் சாட்டினுர். அது விசாரணைக்கு வருவதற்கு முன்னமேயே நந்தகுமார் தப்புக் கையொப்பம் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு மரண தண்டனையை அடைந்துபோனுர். இது ஹேஸ்டிங்ஸின் தூண்டுதலினுல் நடைபெற்றது என்பது சிலருடைய அபிப்பிராயம். அது எவ்வாருயினும், அதற்குப்பிறகு ஹேஸ்டிங்ஸ்மீது குற்றஞ்சாட்டுவதற்கு எவரும் முன்வரவில்லை. மறுவருஷத்தில், மந்திராலோசனைச்சபையில் அவருக்கு விரோதமாகவிருந்த மூவரில் ஒருவரான மான்ஸன் என்பவர் இறந்து போய்விட்டதனுல், ஹேஸ்டிங்ஸ் எதையும் தமதிஷ்டம்போல் செய்யக்கூடியவானுர்.

i. முதல் மஹாராஷ்டிர யுத்தம்

பாலாஜி பாஜீராவ் என்னும் மூன்ருவது பீஷ்வா இறந்துபோனதும், அவருடைய மைந்தரான முதல் மத்துராவ் பீஷ்வா ஆனுர்.

1. பாலாஜி விசுவநாத் (1714–1720)
   - 2. பாஜீ ராவ் I. (1720–1740)
     - 3. பாலாஜி பாஜீராவ் (1740–1761)
       - விசுவாஸ ராவ் (பானிப்பட்டில் கொலையுண்டு போனார்)
       - 4. மத்து ராவ் I. (1761–1772)
       - 5. நாராயண ராவ் (1772–1773)
         - 7. மத்து ராவ் II. (1774–1795)
     - 6. ரகுநாத ராவ் (1773)
       - 8. பாஜீ ராவ் II. (1796–1818)
         - நானாஸாஹிப் (சுத்துப் புத்திரன்)
   - சிவதாஸ ராவ் (பானிப்பட்டில் கொலையுண்டு போனார்)

அவருடைய காலத்திலேதான் இந்தூர் நாட்டில் அஹல்யா பாய் என்னும் அரசியார் மிக்க விமரிசையாக அரசு செலுத்திவந்தார். அம் மாது சிரோமணியைப்பற்றிப் பின்னுற் கூறப்பட்டுள்ளது.

கி. பி. 1772-ல், மத்துராவ் I இறந்துபோனுர். அப்பொழுது அவருடைய தம்பியான நாராயண ராவ் பீஷ்வா ஆனுர். நாராயண ராவ் மிகச் சிறியவரானதனுல், அவருடைய சிறிய தந்தையான ரகுனுத ராவ் ராஜ்யபாரத்தை நடத்திவந்தார். அப்பொழுது நாட்டில் கலகங்கள் உண்டாகி, நாராயணராவ் கொலையுண்டும், ரகுனுத



நானுபட்னவிஸ்

ராவ் சிறைப்பட்டும் போனுர்கள். ஆயினும், ரகுனுதராவ் விடுதலையைப்பெற்றுப் பீஷ்வா ஆனுர். கொலையுண்டுபோன நாராயண ராவின் மனைவி, அவர் இறந்த சில நாட்களில் ஓர் ஆண் மகவைப் பெற்றுள். அப்பிள்ளைக்கு இரண்டாம் மத்துராவ் [மத்துராவ் II] என்று பெயர். அக்குழந்தைதான் பட்டத்துக்கு உரியவன் என்று சிலர் சண்டைசெய்து முன்வந்தார்கள். அவர்களுக்கு நானுபட்னவிஸ் என்பவர் தலைவராக இருந்தார்.

கி. பி. 1775-ல், ரகுநாதராவ் சூரத் என்னுமிடத்தில் பம்பாய் கவர்னரோடு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு, அவர் தமக்கு உதவிபுரிந்து தம்மைச் சிம்மாசனத்தில் ஏற்றுவித்தால், அதற்கீடாகத் தாம் ஆங்கிலேயருக்கு ஸால்ஸேட், பாஸீன் என்னும் பட்டணங்களைத் தருவதாக ஒப்புக்கொண்டார். கி. பி. 1776-ல், நாநு பட்னவிஸ் கவர்னர்-ஜெனரலோடு புரந்தர் என்னுமிடத்தில் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அவர் ஆங்கிலேயர்கள் மஹாராஷ்டிர வியவகாரங்களில் தலையிட்டுக் கொள்ளாமல் ஒதுங்கியிருந்தால், தாம் அவர்களுக்கு ஸால்ஸேட்டைக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். இவ்வாறாக, ஆங்கிலேயர்கள் இரண்டு கக்ஷியார்களுடனும் உடன்படிக்கை செய்துகொண்டார்கள்.

இங்கிலாந்திலுள்ள மேலதிகாரிகள் சூரத் உடன்படிக்கையை ஆமோதித்ததனால், பம்பாய் கவர்னர் ஒரு சேனையை அனுப்பிப் புநாவை எதிர்த்தார். ஆனால், அச்சேனை தோல்வியை அடைந்து திரும்பி வந்துவிட்டது. கி. பி. 1780-ல், கவர்னர்-ஜெனரல் வங்காளத்திலிருந்தும் ஒரு பெரும்படையை அனுப்பினார். அது மஹாராஷ்டிரர்களைத் தோற்க அடித்து, அவர்களிடமிருந்தும் அஹமதாபாத், கல்யாண், பாஸீன், குவாலியர் முதலான இடங்களைப் பிடித்துக் கொண்டுவிட்டது. ஆனால், கி. பி. 1781-ல், நடந்த சண்டையில் ஆங்கிலேயர்கள் பெருந்தோல்வியை அடைந்துவிட்டதனால், அவர்கள் கி. பி. 1782-ல், ஸால்பை என்னும் இடத்தில் மஹாராஷ்டிரர்களோடு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அதன் நிபந்தனைகளாவன:—

"ஆங்கிலேயர்கள் மஹாராஷ்டிரரிடமிருந்து கைப்பற்றிக் கொண்ட இடங்களில் ஸால்ஸெட் ஒழிந்த மற்றையவற்றை அவர்களுக்குத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். மஹாராஷ்டிரர்கள் ஆங்கிலேயர் அல்லாத மற்ற எந்த ஐரோப்பியரோடும் உறவாடக்கூடாது. மஹாராஷ்டிர நாட்டில் ஆங்கிலேயரும், போர்ச்சுகேயருமே வியாபாரம் செய்யலாம். ஆங்கிலேயர்கள் ரகுநாதராவுக்கு வருஷவாரியில் மூன்று லக்ஷம் ரூபாய் கொடுக்கவேண்டும். மஹாராஷ்டிரர்கள் படேஸிங் என்பவரைப் பரோடா அரசராக ஒப்புக்கொள்வதுடன் அவர் கொடுக்கவேண்டிய பாக்கியைக் கேட்கக்

கூடாது. ஸிந்தியா, இந்த உடன்படிக்கையை முன்னின்று செய்வித்ததை யன்றிச் சண்டையில் சிறை பிடிக்கப்பட்ட ஆங்கிலேய கைதிகளை அன்புடன் நடத்திவந்ததற்கீடாக, அவருக்கு ப்ரோச்சைக் கொடுத்துவிடவேண்டும்.'' இவ்வாறாக, முதல் மஹாராஷ்டிர யுத்தம் முடிவடைந்தது.

ii. முதலிரண்டு மைசூர் யுத்தங்கள்

பதினாறுவது நூற்றாண்டின் மத்தியில் விஜயநகர ராஜ்யம் அழிந்து விட்டபொழுது, அதில் அடங்கியிருந்த மைசூர் நாடு சுயாதீனத்தைப் பெற்று ஒரு தனி ராஜ்யம் ஆய்விட்டது. அதை ஆண்டு

ஹைதர் அலீ

வந்த அரசர்கள் ஹிந்துக்கள். அவர்கள் உடையார் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் ஔரங்கஜீப்புடன் நட்பாக இருந்து வந்ததனால், அவர் அவர்களைச் சும்மாவிட்டிருந்தார். கி. பி. 18-வது நூற்றாண்டின் மத்தியில் அவர்களுடைய பலம் குறைவுபட்டது. அப்பொழுது ஹைதர் அலீ என்னும் முகம்மதியர் அதிகாரம் பெறலானார்.

ஹைதர் அலியின் தந்தை மைசூர் ராஜ்யத்தில் ஓர் உத்யோகத்தில் இருந்தார். ஹைதர் கி. பி. 1755-ல், தமது 33-வது வயதில் மைசூரில் ராணுவத்தில் சேர்ந்து தமது திறமையினாலும், விடாமுயற்சியினாலும் அதிகாரப் பெருக்கை அடைந்துவந்தார். அவர் மைசூர் சேனைக்குத் தலைவராக இருந்து, துரோகத்தினாலும், தந்திரத்தினாலும் மைசூர் சுல்தான் ஆனார். அவருக்கு எழுதவும், படிக்கவும் தெரியாமலிருந்தும், அவர் தமது கூர்மையான புத்தியினாலும், இணையற்ற தோள்வலியினாலும் தாம் கவர்ந்துகொண்ட ராஜ்யத்தைச் செவ்வனே ஆட்சி செய்துவந்தார்.

ஹைதர் தமது ராஜ்யத்தைப் பெருக்க விரும்பி அயல்நாடுகளின் மீது படையெடுத்துச் செல்லத் தலைப்பட்டார். அவருடைய அதிகார வளர்ச்சியைக்கண்ட ஆங்கிலேயர்கள் ஹைதராபாத் நிஜாமுடனும், மஹாராஷ்டிரர்களுடனும் சேர்ந்துகொண்டு அவரை எதிர்த்துச் சண்டைசெய்ய ஏற்பாடுகள் செய்துவந்தார்கள். ஹைதர் நிஜாமுக்குக் கர்னாடகத்தைக் கொடுப்பதாகச் சொல்லி அவரைச் சண்டையினின்றும் விலக்கிவிட்டார். அவர் மஹாராஷ்டிரர்களுக்கு லஞ்சம் கொடுத்து அவர்களையும் ஆங்கிலேயரிடமிருந்து வேறு பிரித்துவிட்டார். அதனால், ஆங்கிலேயர்கள் அவருடன் தனிமையாகச் சண்டைசெய்ய வேண்டியதாயிற்று. கி. பி. 1767-ல், அவர்கள் ஹைதரைச் செங்கம்மாவிலும், திருவண்ணாமலையிலும் தோற்க அடித்துவிட்டார்கள். ஆனால், கி. பி. 1769-ல், ஹைதர் திடீரென்று சென்னையை எதிர்த்து வந்தார். அப்பொழுது ஆங்கிலேயர்கள் ஹைதரோடு சமாதானம் செய்துகொண்டு விட்டார்கள்.

அதன்படி, அவர்கள் தாங்கள் ஒருவரிடமிருந்து மற்றவர் ஜயித்துக்கொண்ட நாட்டைத் திரும்பவும் அவரவர்களுக்கே கொடுத்துவிடவேண்டும். இனிப் பிறரோடு அவர்களுக்கு ஏற்படும் சண்டைகளில் ஒருவருக்கு ஒருவர் உதவி புரியவேண்டும். இதுவே மதராஸ் உடன்படிக்கை என்பது. இதனுடன் முதல் மைசூர் யுத்தம் முடிவு பெற்றது.

மதராஸ் உடன்படிக்கை ஏற்பட்ட இரண்டு வருஷங்களுக்குள் மஹாராஷ்டிரர்கள் மைசூரின்மீது படையெடுத்துச் சென்றார்கள்.

அப்பொழுது ஹைதர் ஆங்கிலேயரைத் தமக்குத் துணை வரும்படி வேண்டினார். அவர்கள் உதவிசெய்ய மறுத்துவிட்டார்கள். அதனால், ஹைதருக்கு ஆங்கிலேயர்மீது கோபம் உண்டாயிற்று. கி. பி. 1778-ல், ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் சண்டை உண்டானதால், ஆங்கிலேயர் இந்தியாவில் பிரெஞ்சுக்காரருக்குச் சொந்தமாக இருந்த புதுச்சேரியையும், மாஹியையும் பிடித்துக்கொண்டார்கள். மாஹி ஹைதருடைய நாட்டிலிருந்தது. அல்லாமலும், அது அவருக்கு மிகவும் உபயோகமான துறைமுகமாகவும் இருந்தது. அதை ஆங்கிலேயர்கள் கைப்பற்றிக்கொண்டு நாசஞ் செய்தபொழுது, ஹைதருக்கு ஆங்கிலேயர்மீது கோபம் அதிகரித்தது. அவர் உடனே அவர்களுடன் சண்டைசெய்யத் தயாரானார்.

கி. பி. 1780-ல், ஹைதர் ஒரு பெரும் படையுடனும், பிரெஞ்சுக்காரரைத் துணைக்கொண்டும் கர்னுடகத்தின்மீது படையெடுத்துவந்தார். அவர் பெய்லி என்னும் ஆங்கிலேய தளகர்த்தரைப் போளூரில் முறிய அடித்து வெற்றிபெற்றார். ஆங்கிலேயர்களுக்கு இந்தியாவில் அதுவரையில் இதைப்போன்ற தோல்வி உண்டாகவில்லை. பின்னர், ஹைதர் வந்தவாசியை நோக்கிச் சென்றார். ஸர் ஐர் கூட் என்பவர் ஹைதரை வந்தவாசியிலிருந்து துரத்திவிட்டதையன்றி, அவரைப் பறங்கிப்பேட்டையிலும், போளூரிலும், சோளசிங்கபுரத்திலும் சண்டையிட்டுத் தோற்க அடித்துவிட்டார். அப்பொழுது ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக்காரருடனும், நிஜாமுடனும், மஹாராஷ்டிரர்களுடனும் சமாதானங்கள் செய்துகொண்டு விட்டதனால், ஹைதர் தனிமையாக நின்றுபோனார். என்றாலும், அவர் மனத்தளர்ச்சியை அடையாது சண்டையை நடத்திவந்தார். இதனிடையில் அவர் கி. பி. 1782-ல், சித்தூருக்கருகில் இறந்துபோனார். பின்னர், அவரது மைந்தரான திப்பு ஆங்கிலேயருடன் சண்டையிட்டுக் கடைசியில் கி. பி. 1784-ல் மங்களூரில் அவர்களுடன் சமாதானம் செய்துகொண்டார். அதையொட்டி இருதிறத்தாரும் தங்கள் வசத்தில் இருந்த கைதிகளையும், தாங்கள் பிடித்துக்கொண்ட நாடுகளையும் அவரவர்களிடம் கொடுத்துவிடும்படி ஒப்புக்கொண்டார்கள். அதனோடு இரண்டாவது மைசூர் யுத்தம் முடிவடைந்தது.

ஹைதருக்கு எழுதப்படிக்கத் தெரியாமலிருந்தும், அவர் ராஜ்ய பரிபாலனத்தில் கைதேர்ந்தவராக இருந்தார். அவர் சண்டையில் வெகு சமர்த்தர். அவருக்கு மத வைராக்கியம் கிடையாது. அவர் ஹிந்துக்களைப் பெரிய உத்யோகங்களில் நியமித்திருந்தார். அவர் தமது உத்யோகஸ்தர்களை அடக்கி ஆள்வதில் கெட்டிக்காரர். அவரை எவரும் ஏமாற்றமுடியாது. அவருக்கு ஞாபகசக்தி அதிகம். அவருடைய மந்திரிகளான பூர்ணய்யாவும், கிருஷ்ண ராவும் அவரிடம் மிகுந்த நன்றி பாராட்டி நடந்துவந்தார்கள்.

iii. காசி, அயோத்தி வியவகாரங்களும், பிட்டின் சட்டமும்

கம்பனியின் அதிகாரத்திற்கு அடங்கிச் செயிட்ஸிங் என்பவர் காசி நாட்டிற்கு அரசராக இருந்தார். ஹேஸ்டிங்ஸ் தாம் செய்த சண்டைகளுக்கு அவரைப் போர்ப்படையும், பணமும் தந்து உதவும்படி கேட்டார். காசி யரசர் அதற்கிணங்கி இருமுறை ஐந்து லக்ஷம் ரூபாய் வீதம் கொடுத்து உதவினர். மூன்றாவது முறை அவர் பணம் கொடுக்கத் தவக்கம் உண்டாயிற்று. ஹேஸ்டிங்ஸ் வெகுண்டு காசிக்குச் சென்று, காசி அரசர் தமது உத்தரவின்படி நடந்து கொள்ளாததற்காக அவருக்கு 50 லக்ஷம் ரூபாய் அபராதம் விதித்தார். காசி அரசர் அதைக் கொடுக்கமுடியாமல் திகைத்தார். உடனே ஹேஸ்டிங்ஸ் அவரைச் சிறையிலிட்டு, வேறொருவரைக் காசிக்கு அரசராக்கி, அங்கிருந்தும் ஏராளமான பணத்தைக்கவர்ந்து சென்றார்.

பின்னர் ஹேஸ்டிங்ஸ், அயோத்தி நவாப் ஆங்கிலேயருக்குக் கொடுக்கவேண்டியிருந்த பாக்கிப் பணத்தைத் தரும்படி கேட்டார். அவர் தம்மிடம் கொஞ்சமும் பணம் இல்லை என்றும், தமது பணத்தையெல்லாம் தம்முடைய தாயும், பாட்டியும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் என்றும் சொல்லித் தாம் கம்பனிக்குக்கொடுக்க வேண்டிய பணத்தை அவர்களிடமிருந்து வாங்கிக்கொள்ளும்படி ஹேஸ்டிங்ஸைத் தூண்டினர். உண்மையில் அந்த ஸ்திரீகளினிடம் இருந்த பணம் அவர்களுடைய சொந்தப் பணமேயாகும். அன்றியும், ஹேஸ்டிங்ஸின் மந்திராலோசனைச் சபையார் தாங்கள் அந்த விதவைகளின் சொந்தப் பணத்தைத் தீண்டுவதும் இல்லை என

அவர்களுக்கு வாக்களித்திருந்தார்கள். ஆயினும், ஹேஸ்டிங்ஸ் அந்த ஸ்திரீகள் காசி யரசருடன் சேர்ந்துகொண்டு கலகஞ்செய்தார்கள் என்று சொல்லி, அவர்களுடைய அரண்மனையைக் கொள்ளையிட்டு 76 லக்ஷம் ரூபாயைக் கவர்ந்துகொண்டார்.

ஹேஸ்டிங்ஸினுடைய இந்திய பரிபாலனத்தில் உண்டான நஷ்டங்களையும், சொல்லரிய கஷ்டங்களையும் கண்டு வெறுப்புற்ற பார்லிமெண்ட் சபையார் கம்பனியின் அதிகாரத்தை இன்னமும் குறைத்துவிட வேண்டுமெனத் தீர்மானித்துக்கொண்டார்கள். அதனால், கி. பி. 1784-ல், பிட் என்னும் ஆங்கிலேய முதன் மந்திரி, பார்லிமெண்டின் அனுமதியைப் பெற்று, பிட்டின் இந்தியச் சட்டம் என்னும் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தார். அந்தச் சட்டத்தின் நிபந்தனைகள் வருமாறு:—

"ஆறு பெயர்கள் அடங்கிய போர்ட் அவ் கன்ட்ரோல் என்னும் ஒரு சபை உண்டாக்கப்பட்டு, அது கம்பனியாரின் எல்லா வியவகாரங்களையும் மேற்பார்வையிட்டு, சகல அதிகாரத்தையும் செலுத்தும் உரிமையையும் பெற்றுக்கொண்டது. அந்தச் சபையின் உத்தரவில்லாமல் கம்பனியார் சுதாவில் யாதொரு முக்கியமான காரியத்தையும் செய்யக்கூடாது. மந்திராலோசனைச் சபையின் அங்கத்தினர்களின் தொகை நான்கிலிருந்து மூன்றாக்கப்பட்டது. அவர்களில் ஒருவர் சேனாதிபதியாவர். கல்கத்தாவிலிருந்த மேலான நியாய ஸ்தலத்திலிருந்து இங்கிலாந்திலுள்ள ப்ரிவி கௌன்ஸிலுக்கு அப்பீல் செய்துகொள்ளும் உரிமை உண்டாக்கப்பட்டது. டைரக்டர்களுடைய உத்தரவின்றி, கவர்னர்-ஜெனரலும், அவருடைய மந்திராலோசனைச் சபையும் சண்டை செய்யவாவது, சமாதானம் கொள்ளவாவது கூடாது." அதில் கம்பனியின் இந்திய அதிகாரிகள் சுதேச அரசர்களுடைய வியவகாரங்களில் தலையிட்டுக் கொள்ளாமல் இருப்பதற்கான சில ஏற்பாடுகளும் அமைக்கப்பட்டன.

கி. பி. 1785-ல், ஹேஸ்டிங்ஸ் தமது வேலையை நீத்து இங்கிலாந்துக்குச் சென்றுவிட்டார். அங்கே அவர்மீது பல குற்றங்கள் சாட்டப்பட்டு, ஏழு வருஷங்கள் வரையில் விசாரணை நடந்தது. கடைசியில் அவர் குற்றவாளி அல்லர் எனத் தீர்ப்புச் செய்யப்பட்டது. கம்பனியார் அவருக்கு வருஷவாரியில் 40,000 ரூபாய் உபகாரச்

சம்பளம் கொடுத்து வந்தார்கள். அவர் அதைப் பெற்றுக்கொண்டு சுகமாக வாழ்ந்திருந்து கி. பி. 1818-ல் இறந்துபோனுர்.

ஹேஸ்டிங்ஸின் துரைத்தனத்தில் விவசாயமும், கைத்தொழில்களும் க்ஷீணித்துப்போயின. குடிகள் வரிகளைச் செலுத்த முடியாமல் வருந்தினபொழுதும், துரைத்தனத்தார் சிறிதும் இரக்கமின்றி அவர்களை வெயிலில் கூடுகளில் நிறுத்தித் துன்புறுத்தி வரி வசூல் செய்தார்கள். நாட்டில் பஞ்சம் உண்டாகிக் குடிகள் லக்ஷக் கணக்கில் மாண்டுபோனுர்கள்.

பயிற்சிகள்

1. நானுபட்னவிஸ் யார்? அவர் ஏன் வந்துளார்?

2. ஹைதர்அலீ மைசூர் சுல்தான் ஆனது எவ்வாறு?

3. சூரத், புரந்தர் உடன்படிக்கைகளை யார்யார், எவ்வெப்பொழுது, ஏன் செய்துகொண்டார்கள்? அவற்றின் நிபந்தனைகள் யாவை?

4. ஹேஸ்டிங்ஸ் பணம் சம்பாதித்த வகைகள் யாவை? அவற்றைக் குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன?

5. பிட்டின் சட்டம் ஏன் பிறப்பிக்கப்பட்டது? அதனுல் உண்டான சீர்திருத்தங்கள் யாவை?

27. லார்ட் காரன்வாலிஸ்
(கி. பி. 1785—கி. பி. 1793)

i. சாசுவத நிலவரி ஏற்பாடு

ஹேஸ்டிங்ஸுக்குப் பிறகு, சுமார் 20 மாதங்கள் வரையில் மந்திராலோசனைச் சபையின் மெம்பரான மெக்பர்ஸன் என்பவர் கவர்னர்-ஜெனரலாக வேலைபார்த்து வந்தார். அதன் பிறகு லார்ட் காரன்வாலிஸ் என்பவர் பார்லிமென்டாரால் கவர்னர்-ஜெனரலாக நியமிக்கப்பட்டு இந்தியா வந்து சேர்ந்தார். இவரிடம் ஆங்கிலேய மேலதிகாரிகள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்ததனுல், அவர்கள் இவருக்கு மந்திராலோசனைச் சபையை மீறிநடக்கும் அதிகாரத்தைக் கொடுத்திருந்தார்கள். இவர் சிறிதும் சுயநலம் பாராட்டாது கஷ்டப்பட்டு வேலைசெய்யும் குணமுடையவர். இவர் சிறந்த போர் வீரரும் ஆவர்.

காரன்வாலிஸ் வியவசாயிகளுக்கு ஒரு பெரிய நன்மையைச் செய்தார். வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா நாடுகளில் என்றும் மாருததான நிலேவரமான நிலவரியை ஏற்படுத்தினர். அதைத் தான் ஆங்கிலத்தில் பர்மனேனன்ட் ரேவின்யூ ஸெட்டில்மேன்ட் என்று சொல்வது.

நிலவரியை விதித்து வசூல் செய்யும் வகையில் நமது நாட்டில் இப்பொழுது மூன்று விதமான ஏற்பாடுகள் அமைந்துள்ளன. அவற்றில், காரன்வாலிஸ் செய்துவைத்த சாசுவத ஏற்பாடுதான்சிறந்ததாகும். அப்பொழுதைக் கப்பொழுது மாறிமாறி அதிகப்பட்டுக்கொண்டே வரும் மற்றைய ஏற்பாடுகளில் குடிகளுக்குக் கஷ்டமும், நஷ்டமும் உண்டாகின்றன. சாசுவத ஏற்பாட்டில் ஜமீன்தார்கள் தங்கள் குடிகளிடமிருந்து தாங்கள் வரி வசூல் செய்துகொண்டு சர்க்காருக்கு மொத்தமாக வரி செலுத்திவந்தார்கள். அவர்கள் குடிகளின் சுகதுக்கங்களில் ஈடுபட்டு அவர்களுக்குப் பலவகைகளில் உதவியும், பஞ்சகாலத்தில் வரியைக் குறைத்தும் அவர்களேக் காத்து ஆதரித்துவந்தார்கள்.

லார்ட் காரன்வாலிஸ்

நிலவரியை நிலேவரமாக்குவதனல், குடிகள் பயிர்த்தொழிலில் ஊக்கமும் உற்சாகமும் கொண்டு, தங்கள் நிலங்களேப் பண்படுத்தி, எருவிட்டு, உழுது, பயிர்செய்து அதிகமான உற்பத்தியை உண்டாக்குவார்கள். தங்கள் முயற்சியினல் உண்டாகும் அதிக உற்பத்தியின் பலனே அவர்களே முழுவதும் அடைந்து வருவதுதான் அவர்களுடைய ஊக்கத்திற்கும், முயற்சிக்கும் காரணம் ஆகும். மற்றைய

ஏற்பாடுகளில் அவர்கள் தங்களுடைய உழைப்பினல் உண்டாக்கும் உற்பத்தியில், அதன்பொருட்டு யாதொன்றையுஞ் செய்யாத துரைத்தனத்தாருக்கு ஒரு பகுதியைக் கொடுக்கவேண்டி வருவதனால், ஊக்கம் குறைந்தும், குறைவாக உழைத்தும் வந்தார்கள்.

சென்னை மாகாணத்திலும் சாசுவத நிலவரி ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று மாகாண கவர்னரான வில்லியம் பென்டிங்கும், பாராமஹால் கலெக்டரான தாமஸ் மன்ரோவும் முயன்றனர். ஆனால் அவர்கள் சிபார்சை மேலதிகாரிகள் ஒப்புக்கொள்ளவில்லை. ஆகையினாலேதான், தென்னாட்டுக் குடிகள் பஞ்சகாலங்களில் வயிறு பிழைக்க வழியற்று மடிந்து படுகிறார்கள். தென்னிந்திய வியவசாயிகள் நித்ய தரித்திரர்களாகி வருவதற்கு நிலையற்ற நிலவரி ஏற்பாடுதான் முதற்காரணமாகும்.

காரன்வாலிஸ் நியாய விசாரணையையும், வரி வசூலையும் வெவ்வேறு உத்யோகஸ்தர்களைக்கொண்டு செய்வித்தார். அவர் வரி வசூல் செய்ய ஜில்லா கலெக்டர்களையும், நியாயவிசாரணை செய்ய ஜில்லா ஜட்ஜ்களையும் நியமித்தார். அவர் இந்தியரை நம்பாமல், ஆங்கிலேயரையே உயர்ந்த வேலைகளில் நியமித்தும், அவர்கள் லஞ்சம் வாங்காதிருக்கக் கருதி அவர்களுடைய சம்பளங்களை அதிகப்படுத்தியும் ஏற்பாடுகள் செய்தார். அவர் இந்திய அரசர்களின் வியவகாரங்களில் தலையிட்டுக்கொண்டு சண்டைகள் செய்வதில் மனமில்லாதவராக இருந்தும், அவர் சண்டைசெய்ய நேர்ந்தது. அவருடைய துரைத்தனத்தில் கீழிந்தியக் கம்பனியாருக்குக் கி. பி. 1773-ல் கொடுக்கப்பட்ட சாஸனம் காலஞ்சென்று விட்டதனால், அது இன்னும் இருபது வருஷங்களுக்குச் செல்லுமாறு உறுதிசெய்து கொடுக்கப்பட்டது.

ii. மூன்றாவது மைசூர் யுத்தம்

மைசூர் சுல்தானான திப்பு தமது ராஜ்யத்தைப் பரப்ப எண்ணித் திருவிதாங்கூரின்மீது படையெடுத்துச் சென்றார். அப்பொழுது, காரன்வாலிஸ் நிஜாமையும், மஹாராஷ்டிரரையும் துணைசேர்த்துக் கொண்டு, திப்புவை எதிர்த்துச்சென்று அவருடைய கோட்டைகளில் சிலவற்றைப் பிடித்துக் கொண்டார். பின்பு அவர் மைசூர்

ராஜ்யத்தின் தலை நகரமான ஸ்ரீரங்கபட்டணத்தை முற்றுகை செய்தார். திப்பு மிகுந்த வீராவேசத்துடன் சண்டையிட்டபோதிலும் தோல்வியை அடைந்துபோனார். அதனால், அவர் கி. பி. 1792-ல், ஸ்ரீரங்கபட்டணத்தில் ஆங்கிலேயரோடு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார். அவர் தமது பகைவர்களுக்குத் தமது

திப்பு

ராஜ்யத்தில் பாதியையும், சண்டையின் செலவிற்காக மூன்று கோடி ரூபாயையும் தருவதாக ஒப்புக்கொண்டார். அவர் தாம் அவற்றைச் செய்து நிறைவேற்றும்வரையில் தமது இரண்டு பிள்ளைகளையும் காரன்வாலிஸினிடம் ஜாமீனாக விட்டிருக்கவும் உடன்பட்டார். இவ்வாறாக, மூன்றாவது மைசூர் யுத்தம் முடிந்தது.

திப்புவினிடமிருந்து கிடைத்த பாதிராஜ்யத்தை ஆங்கிலேயரும், அவர்களுடைய துணைவர்களும் பங்கிட்டுக் கொண்டனர்.

அதில், ஆங்கிலேயருக்குச் சேலம், மலையாளம், மதுரை ஆகிய மூன்று ஜில்லாக்கள் கிடைத்தன. அடுத்த வருஷத்தில் காரன்வாலிஸ் தமது வேலையை நீத்து இங்கிலாந்துக்குச் சென்றுவிட்டார். அப்பொழுது ஸர் ஜான் ஷோர் என்னும் மந்திராலோசனைச் சபை மெம்பர் கவர்னர்-ஜெனரலானார்.

பயிற்சிகள்

1. சாசுவத நிலவரித் தீர்மானத்தின் மேன்மை என்ன?
2. காரன்வாலிஸ் செய்த சீர்திருத்தங்கள் யாவை?
3. மூன்றாவது மைசூர் யுத்தம் மூளுவானேன்?
4. ஸ்ரீரங்கபட்டணத்து உடன்படிக்கையின் நிபந்தனைகள் என்ன?

28. ஸர் ஜான் ஷோர்
(கி. பி. 1793—கி. பி. 1798)

லார்ட் காரன்வாலிஸின் மந்திராலோசனைச் சபையில் ஸர் ஜான் ஷோர் என்ற அங்கத்தினர் ஒருவர் இருந்தார். சாசுவத நிலவரி ஏற்பாட்டில் இவர் கவர்னர்-ஜெனரலுக்குப் பேருதவியாக இருந்தார். தமக்குப் பிறகு இவரே கவர்னர்-ஜெனரலாக வேண்டுமெனக் காரன்வாலிஸ் விரும்பினார். ஸர் ஜான் ஷோர் அவ்வாறே கவர்னர்-ஜெனரலாக நியமிக்கப்பட்டு ஐந்து வருஷகாலம் இந்திய பரிபாலனத்தை நடத்தினார். இவரும் அந்நியருடைய விவகாரங்களில் தலையிடுவதில்லை என்கிற கொள்கையையே கொண்டொழுகினார்.

இவர் காலத்தில் மஹாராஷ்டிரரது வன்மை பெருகிவரலாயிற்று. ஷாஹலத்தைப் பெயருக்குச் சக்ரவர்த்தியாக்கிச் சகல அதிகாரத்தையும் மாகாதஜி ஸிந்தியா நடத்திவந்ததை நாம் அறிவோம். ஸிந்தியா பீஷ்வாவைக் காணக்கருதிப் புனாவுக்குச் சென்ற விவரமும் நமக்குத் தெரியும். அப்போது அவர் அங்கேயே இறந்துபோனார். அதனால் மஹாராஷ்டிர ஸாம்ராஜ்யத்தில் முதன்மை ஸ்தானத்தை நானாபட்னவிஸே வகித்துவந்தார். இவர் மஹாராஷ்டிரருக்கு நிஜாம் கப்பங்கட்டவில்லை என்று கி. பி. 1795-ல் அவர் மீது சண்டை தொடுத்தார். அஹமதுநகர் ஜில்லாவிலுள்ள கர்தாவில் கடும்போர் நிகழ்ந்தது. அதில் நிஜாம் பெருந்தோல்வியையடைந்தார். அவர் தமது நாட்டின் ஒரு பாகத்தையும், யுத்தச்

செலவுக்காக மூன்று கோடி ரூபாயையும் மஹாராஷ்டிரருக்குக் கொடுக்க வேண்டியவரானுர். இவ்வெற்றியினுல் மஹாராஷ்டிர ருடைய ஆதிக்யம் பெரிதும் மேம்பட்டுவிட்டது. இச்சண்டையில் தமக்குத் துணைவரும்படி நிஜாம் ஆங்கிலேயரை வேண்டினுர். தலை யிடாக் கொள்கையைக் கைக்கொண்ட ஸர் ஜான் ஷோர் நிஜாமுக்கு உதவிசெய்ய மறுத்துவிட்டார். அதனுல் நிஜாம் ஆங்கிலேயரிடம் வெறுப்புக் கொண்டார்.

தாம்கொண்ட கொள்கையை நீத்துக் கவர்னர்-ஜெனரல் அயோத்தி வியவகாரத்தில் தலையிடவேண்டி வந்தது. அந்நாட்டின் நவாப்பான அஸபுத் தௌலா இறந்துபோனுர். ஸர் ஜான் ஷோர் பட்டத்துக்கு உரிமையற்ற ஒருவரை நவாப்பாக முதலில் அங்கீ கரித்தார். பின்னர் அவர் ஸாதத் அலீ என்பவர்தான் பட்டத்துக் குரியவர் என அறிந்து அவரை நவாப்பாக ஏற்றுக்கொண்டார். அதற்கீடாகப் புதிய நவாப் ஆங்கிலேயருக்கு அல்லாஹாபாத் கோட்டையையும், முன்னிலும் அதிகமான கப்பப் பணத்தையும் தந்தார்.

ஸர் ஜான் ஷோரின் பரிபாலனத்தின்போது இந்தூரில் அஹல்யா பாய் என்ற மாது சிரோமணி மிக்க விமரிசையாக ராஜரிகம் நடத்திவந்தார். இவர் மல்ஹார் ராவ் ஹோல்காரின் நாட்டுப் பெண்; கண்டிராவின் மனைவி. இவருடைய கணவரைப் பில்ஸ் ஜாதியார் கொன்றுவிட்டனர். அதனுல் மல்ஹார் ராவுக்குப் பின்பு அவருடைய பெயரனும், அஹல்யாபாயின் மைந்தனுமான மலிராவ் இந்தூர் அரசனுனன். இவன் சிறிது காலத்திற்கெல்லாம் இறந்து போனுன். இவனுக்குப் பிள்ளை இல்லை. அதனுல் அஹல்யாபாய் ராஜ்யபாரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

அஹல்யாபாய் வெகு சமர்த்தர். அவருக்கு ஆண்மக்களுக் குரிய தைரியமும், பராக்கிரமமும் இருந்தது. அவர் தகுந்த உத்யோகஸ்தர்களை நியமித்து ராஜ்யத்தை வெகு நன்ருக ஆட்சி செய்து வந்தார். அவர் பரிதானம் வாங்கி வந்தவர்களையும், துஷ்டர் களையும் உத்யோகங்களிலிருந்து நீக்கிவிட்டார்.

அவரால் தள்ளப்பட்ட சிலர் ஒன்றுசேர்ந்து கலகம் செய்யத் தலைப்பட்டார்கள். இராணியாரின் அரண்மனைப் புரோகிதரே

அவர்களுக்குத் தலைவரானார். கலகக்காரர்கள் பெண் அரசாட்சி கூடாது என்றும், இராணியார் ஸ்வீகாரம் செய்துகொள்ளவேண்டும் என்றும் அஹல்யாபாய்க்குத் தெரிவித்தார்கள். இராணியார் அவர்களைச் சிறையிலிட்டு விட்டார். புரோகிதர் அவரைச் சரணம் அடையவும், இராணியார் அவரை விடுதலைசெய்து, நாட்டை விட்டுப் போய்விடும்படி உத்தரவு செய்தார்.

அஹல்யாபாய்க்குப் புரோகிதர் சும்மா இருக்கமாட்டார் என்பது நன்றாகத் தெரியும். அவர் யுத்தத்திற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்துவந்தார். அவர் துகாஜி ஹோல்காரைத் தமது சேனைத் தலைவராக நியமித்துக்கொண்டார். துகாஜி ஒப்பற்ற போர்வீரர்.

இராணியார் எதிர்பார்த்தபடியே புரோகிதர் தூண்டவும், ராஜபுத்திரர்கள் இந்தூர் நாட்டின்மீது படையெடுத்து வந்தார்கள். அஹல்யாபாய் ஒரு சேனையை அனுப்பித் தாமும் பின்சென்றார். அவர் போவதற்கு முன்னமேயே எதிரிகள் தோற்று ஓடிப் போனார்கள்.

இராணியார் ராஜ்யபாரம் நடத்துவதிலும் கெட்டிக்காரர். அவர் காலத்தில் நாடு செழித்திருந்தது. கொள்ளைக்காரர்களை அவர் அடியோடு அடக்கிவிட்டார். நாட்டில் சமாதானம் குடிகொண்டிருந்தது. அவர் நன்னடக்கையும், நடுவு நிலைமையும் பொருந்தியவர்களைத்தாம் நியாயாதிபதிகளாக நியமித்து வந்தார். அவர்களுடைய தீர்ப்புக்களை ஒப்புக்கொள்ளாதவர்கள் இராணியாருக்கே அப்பீல் செய்துகொள்ளலாம்.

அஹல்யாபாய் நீதி தவறாதவர். அவருடைய கலெக்டர்களில் ஒருவர் பொக்கிஷத்தைப் பெருக்க ஒரு சூழ்ச்சி செய்தார். ஒரு பணக்கார வர்த்தகன் பிள்ளையில்லாமல் இறந்துபோனான். கலெக்டர் அந்தச் சொத்தை அபகரிக்க எண்ணினார். அவர் அந்த வர்த்தகன் மனைவி ஸ்வீகாரம் செய்துகொள்ளக்கூடாது என்று உத்தரவு செய்தார். அது இராணியாருக்குத் தெரிந்தது. அவர் அந்தக் கலெக்டரைக் கடிந்துகொண்டார். வர்த்தகன் மனைவிக்கு ஸ்வீகாரம் செய்துகொள்ளவும் அவர் உத்தரவு அளித்தார்.

இன்னொரு சமயம் அவரிடம் இரண்டு பணக்கார விதவைகள் வந்தார்கள். அவர்களுக்குப் பிள்ளை இல்லை. அவர்கள் தமது ஆஸ்தியை எல்லாம் எடுத்துக்கொள்ளும்படி இராணியாரை வேண்டினார்கள். இராணியார் அவர்களைப் பார்த்து, "சகோதரிகளே! எனக்கு இருப்பது போதும். நீங்கள் உங்கள் ஆஸ்தியைக்கொண்டு கிணறு, குளங்கள் வெட்டுங்கள்; தரும சாலைகள் அமையுங்கள்; இன்னும் அதை வேறு விதங்களில் பொது நன்மைக்காக உபயோகியுங்கள்," என்று சொல்லி அனுப்பினார். அவருடைய நாட்டில் கோயில்களும், குளங்களும், தரும சாலைகளும் காணப்படாத ஊர்களைப் பார்ப்பது அரிது. அவர் மிதமாக உண்டும், உடுத்தும் இருந்தார். கி. பி. 1795-ல் அவர் இறந்தபொழுது இந்தூர் குடிகள் அழுது புரண்டு ஆரவாரித்தார்கள்.

பயிற்சிகள்

1. கர்தாவில் எப்போது, ஏன், யார் யாருக்குச் சண்டை நடந்தது? அதன் முடிவு என்ன?
2. தாம் மேற்கொண்ட தலையிடாக் கொள்கையை ஸர் ஜான் ஷோர் எப்போது, ஏன் மீறி நடந்தார்?
3. அஹல்யாபாய் யார்? அவருடைய குணத்தின் நேர்மையும், ஆட்சியின் சிறப்பும் எவ்வாறானவை? விளக்குக.

29. லார்ட் வெல்லெஸ்லி
(கி. பி. 1798—கி. பி. 1805)

i. துணைப்படை தந்து, நாடுகளும் தலைமையும் பெற்றது

இந்திய சிற்றரசர்கள் பலரும் தமக்குள்ளும், ஆங்கிலேயருடனும் அடிக்கடிச் சண்டைகள் செய்து, நாட்டின் அமைதியைக் கெடுத்து வந்தனர். அவர்களை ஆங்கிலேய அதிகாரத்திற்கு உட்படுத்தி, ஆங்கிலேயருடைய ஆதிக்யத்தைப் பெருக்க வேண்டுமென்பது வெல்லெஸ்லியின் விருப்பம். அதற்கிணங்க அவர் சுதேச அரசர்கள் தங்கள் தங்கள் நாடுகளின் பாதுகாப்புக்காக ஆங்கிலேயரும், ஆங்கிலேயரால் பயிற்சி செய்விக்கப்பட்ட இந்தியரும் அடங்கிய ஒரு போர்ப்படையைத் தத்தம் நாடுகளில் வைத்துக்கொள்ள

வேண்டும் என்ருர். அச்சேனைகளின் ரக்ஷணையின் பொருட்டுப் பிடிக்கும் செலவை அந்த அரசர்கள் கொடுத்துவர வேண்டும் என்றனர். அவர்கள் தங்களுக்குள்ளும், ஆங்கிலேயர் ஒழிந்த மற்றைய ஐரோப்பியரோடும் எவ்வித சம்பந்தத்தையும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று ஆணையிட்டார். ஒவ்வொரு அரசரும் தங்கள் நாட்டில் ஓர் ஆங்கிலேய ஸ்தானிகரை ஏற்றுக்கொள்ளவேண் டும் என்று வற்புறுத்தினர். இந்திய அரசர்கள் பலரும் இந்த நிபந்தனை களை யெல்லாம் ஒப்புக்கொண்டு ஆங்கிலேயரோடு சமாதானமாக இருந்துவர வேண்டும். இந்த ஏற்பாட்டைத்தான் துணைப்படை தந்து தலைமை பெற்ற ஏற்பாடு என்று சொல்லுவார்கள். இதை ஆங்கிலத்தில் ஸப்ஸிடியரி ஸிஸ்டம் என்பார்கள். திப்பு இந்த ஏற் பாட்டை ஒப்புக்கொள்ளுவதில் மனமில்லாதவராய் ஆங்கிலேயரு டன் சண்டையிட்டு நாட்டையிழந்து உயிரையும் துறந்துபோனர்.

கர்தா சண்டையில் தமக்கு ஆங்கிலேயர் துணை வரவில்லை என்று அவர்கள்மீது பகை பாராட்டி வந்த நிஜாமுடன் வெல்லெஸ்லி சமாதானம் செய்துகொண்டு, அவர் தமது நூதன உடன்படிக் கையை ஒப்புக்கொள்ளும்படி செய்தார். அப்பொழுது நிஜாம் தமது பாதுகாப்புக்கென்று வைக்கப்பட்ட சேனையின் செலவிற் காகத் தமக்குக் கடைசி மைசூர் யுத்தத்தில் கிடைத்த கடப்பை, கர்னூல், பல்லாரி, அனந்தபுரம் ஜில்லாக்களைக் கி. பி. 1800-ல் ஆங்கி லேயருக்குக் கொடுத்துவிட்டார். அதனுல்தான், அந்த ஜில்லாக் களுக்கு ஸீடெட் டிஸ்ட்ரிக்ட்ஸ் எனப் பெயர் வந்தது. வெல்லெஸ் லியின் புதிய ஏற்பாட்டை ஒப்புக்கொண்டு, அவருடன் முதன் முதல் உடன்படிக்கை செய்துகொண்டவர் நிஜாமே யாவர்.

அல்லாஹாபாத் உடன்படிக்கைப்படி, அயோத்தி நவாப்பின் பாதுகாப்புக்காக அப்பொழுது கொடுக்கப்பட்ட போர்ப்படை போதாது எனக்கருதி, வெல்லெஸ்லி அவரிடமிருந்த சேனையைப் பலப்படுத்தினர். நவாப் தம்மிடமிருந்த சேனையின் ரக்ஷணைக்காகத் தாம் தரவேண்டிய பணத்தைச் சரியாகக் கொடுத்துவரவில்லை. அதனுல் வெல்லெஸ்லி பணத்திற்கு ஈடாக அவரைத் தமது நாட்டின் ஒரு பாகத்தைக் கொடுத்துவிட்டுப் புதிய உடன்படிக்கையை ஒப்புக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தினர். நவாப் அதற்கு இணங்கிவர

மனமில்லாதவராக இருந்தும், கடைசியில் தமது நாட்டின் பெரும் பாகமான ஆக்ரா டுவாப்பையும், ரோஹில்கண்டையும் ஆங்கிலேய ருக்குக் கொடுத்து வெல்லெஸ்லியின் ஏற்பாட்டை ஒப்புக்கொண்டு விட்டார். அவர் கொடுத்த நாடுகளிலிருந்து அவருக்குக் கிடைத்து வந்த வருமானத்தினும் 30 லக்ஷம் ரூபாய் ஆங்கிலேயருக்கு அதிகமாகக் கிடைத்தது.

சிவாஜியின் சந்ததியார்கள் தஞ்சாவூரைச் சுமார் 150 வருஷங் களாக ஆண்டுவந்தார்கள். வெல்லெஸ்லி காலத்தில் அந்த வம் சத்தைச் சேர்ந்த இருவர் பட்டத்தைக் குறித்துச் சண்டையிட்டார் கள். வெல்லெஸ்லி அவர்கள் இருவருக்கும் உபகாரச் சம்பளங் கள் கொடுத்துவிட்டுத் தஞ்சாவூரை ஆங்கிலேய ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டு விட்டார். கி. பி. 1875-ல், அந்த வம்சம் சந்ததி யற்றுப்போயிற்று.

கர்னாடக நவாப்பான முகம்மது அலீ தமது ராஜ்யத்தைக் கவனியாமலும், குடிகளின் நன்மையை நாடாமலும், வரிப் பணத்தை எல்லாம் வீணாகச் செலவு செய்தும் வந்தார். அல் லாமலும், அவரும் அவருடைய மைந்தரான உம்ததுல் உம்ராவும் ஆங்கிலேயருக்கு விரோதமாய்த் திப்புவுடன் சதியாலோசனை செய்துவந்தார்கள். அதனால் கி. பி. 1801-ல், உம்ததுல் உம்ரா இறந்துவிட்டபொழுது, வெல்லெஸ்லி கர்னாடகத்தை ஆங்கிலேய ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டு நவாப்பின் மகனுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டார். ஆனால், நவாப் தமது நாட்டின் ஈட்டில் வாங்கியிருந்த கடனை, சொத்தைப் பெற்றுக்கொண்ட தாம் கொடுத்துப் பைசல் செய்யாமல், அதைத் தேசீயக் கடன் ஆக்கிவிட்டார். கர்னாடகம் கிடைத்ததோடு, ஆங்கிலேயருக்குச் சென்னை மாகாணம் முழுவதும் சொந்தமாய் விட்டது.

ii. நான்காவது மைசூர் யுத்தம்

வெல்லெஸ்லி இந்தியாவுக்கு வந்தபொழுது, பிரான்சு தேசத் தில் நெபோலியன் என்னும் ஓர் ஒப்பில்லாத போர்வீரர் தோன்றி, ஐரோப்பிய நாடுகளை எல்லாம் நடுங்கச்செய்து இங்கிலாந்தை வென்று அங்கும் தமது அதிகாரத்தை ஸ்தாபிக்கவேண்டுமென முன்வந்தார்.

திப்பு அதுவே தக்கசமயம் எனக்கருதி நெபோலியனைத் துணைக்கொண்டு தாம் இழந்துவிட்ட நாடுகளையும், அதிகாரத்தையும் மீண்டும் பெற்றுக்கொள்ளலாம் என்று எண்ணினர். கர்நா சண்டையில் ஆங்கிலேயர் தமக்குத் துணை வரவில்லை என்று நிஜாம் ஆங்கிலேயர் மீது கோபங்கொண்டிருந்தார். மஹாராஷ்டிரர்கள் தாங்கள் இழந்துவிட்ட அதிகாரத்தை எவ்விதத்திலாயினும் மீட்டுக் கொள்ளவேண்டும் என்று எண்ணியிருந்தனர். இவர்கள் அனைவரும் தங்கள் சேனைகளுக்குப் பிரெஞ்சுக்காரரைக் கொண்டு யுத்தப் பயிற்சி செய்வித்து வந்தார்கள். இவர்கள் பிரெஞ்சுக்காரருடைய உதவியைக்கொண்டு ஆங்கிலேயரைத் தொலைத்துவிட்டுத் தாங்கள் இழந்துவிட்ட அதிகாரத்தைப் பெறவேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டார்கள்.

மார்க்விஸ் வெல்லெஸ்லி

திப்பு ஸ்ரீரங்கபட்டணத்து உடன்படிக்கையை மீறி, ஆங்கிலேயருக்கு விரோதமாய்ப் பிரெஞ்சுக்காரருடன் சதியாலோசனைகள் செய்து வந்ததுதான் நான்காவது மைசூர் யுத்தத்திற்குக் காரணமாயிற்று. வெல்லெஸ்லி நிஜாமைச் சிநேகம் செய்து கொண்டு திப்புவுடன் சண்டைசெய்யத் தயாரானர். திப்பு ஆங்கிலேயருடன் செய்த முதலிரண்டு சண்டைகளிலும் தோல்வியை அடைந்துபோனர். கடைசியில், ஆங்கிலேயர்கள் ஸ்ரீரங்கபட்டணத்தை முற்றுகை செய்தபொழுது, திப்பு மிகுந்த வீராவேசத்தோடு சண்டையிட்டார். ஆயினும், அவர் தோல்வியை அடைந்து கொலையுண்டுபோனர். வெல்லெஸ்லி மைசூர் ராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொண்டு அதன் பெரும்பாகத்தையும் நிஜாமுடன்

பங்கிட்டுக் கொண்டுவிட்டார். அப்பொழுது ஆங்கிலேயருக்குக் கோயமுத்தூர், கன்னடம், வைனாடு ஜில்லாக்களும், நிஜாமுக்குக் கடப்பை, கர்னூல், பல்லாரி, அனந்தபுரம் ஜில்லாக்களும் கிடைத்தன. இவற்றை நிஜாம் துணைப்படையின் ரக்ஷணைக்காக ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டார் என்று ஏற்கெனவே கூறப்பட்டுள்ளது.

எஞ்சிய ஒரு சிறிய பாகத்திற்கு வெல்லெஸ்லி, ஹைதருக்கு முன்பு மைசூர் நாட்டை ஆட்சி செய்துவந்த ஹிந்து அரச வம்சத்தைச் சேர்ந்த கிருஷ்ணராஜ உடையாரை அரசராக்கினர். திப்புவின் பிள்ளைகள் ஆங்கிலேயரிடமிருந்து உபகாரச் சம்பளம் பெற்று வேலூரில் காலங்கழித்து வந்தார்கள்.

பயிற்சிகள்

1. நான்காவது மைசூர் யுத்தம் நடைபெறுவானேன்? அதன் முடிவு என்ன?

2. அந்த யுத்தத்தின் முடிவில் ஆங்கிலேயருக்குக் கிடைத்த ஜில்லாக்கள் யாவை?

3. சென்னை மாகாணத்திலடங்கிய பிரதேசங்கள் பலவும் ஆங்கிலேயருக்கு எவ்வெப்பொழுது, எவ்வாறு கிடைத்தன? படம் வரைந்து விளக்குக.

4. துணைப்படை முறை என்பது என்ன?

5. அவ்வேற்பாட்டினால் வெல்லெஸ்லி சம்பாதித்துக்கொண்ட நாடுகள் எவை? யார் யார் இடமிருந்து சம்பாதித்துக் கொண்டார்?

30. மஹாராஷ்டிர யுத்தங்கள்

நானாபட்னவிஸ் இருந்தவரையில் கெய்க்வாரும், ஸிந்தியாவும், ஹோல்காரும், பான்ஸ்லவும் பீஷ்வாவுக்கு அடங்கி அவருக்குச் சவுத் என்னும் வரிப்பணத்தைச் செலுத்திவந்தார்கள். அவருடைய காலத்திற்குப் பிறகு அந்த மஹாராஷ்டிரத் தலைவர்கள் பீஷ்வாவின் அதிகாரத்தை நிராகரித்தும், தங்களுக்குள் சண்டைகள் செய்தும் வந்தார்கள்.

மத்துராவ் II-க்குப் பிறகு, ரகுநாதராவின் மைந்தரான பாஜீராவ் II பீஷ்வா ஆனார். இவர் நானாபட்னவிஸ் இருந்த வரையில் ஹோல்காரோடு சமாதானமாக இருந்தார். அதன்பிறகு இவர்

ஹோல்காரோடு சண்டைசெய்து தோல்வியை அடைந்துபோனர். அப்பொழுது ஹோல்கார் இவருக்குப்பதிலாக வேறு ஒரு பீஷ்வாவை நியமித்தார். தோற்று ஓடிப்போன பாஜீராவ் II ஆங்கிலேயரைத் தமக்குத் துணைவரும்படி வேண்டினர். அவர்கள் அதற்கு இணங்கிக் கி. பி. 1802-ல் பாஸீன் என்னுமிடத்தில் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். ஆங்கிலேயர்கள் பாஜீராவைப் பீஷ்வாவாக்கு வதாக ஒப்புக்கொண்டார்கள். பாஜீராவ் II வெல்லெஸ்லியின் புதிய ஏற்பாட்டிற்கு இணங்கித் தமது நாட்டின் பாதுகாப்புக்காக ஓர் ஆங்கிலேய சேனையை ஏற்றுக்கொண்டும், அதன் செலவிற்காக வருஷவாரியில் 26 லக்ஷம் ரூபாய் கொடுக்கச் சம்மதித்தும் ஆங்கி லேயருடைய உத்தரவு இல்லாமல் எவருடனும் சண்டையாவது, சமாதானமாவது செய்துகொள்வதில்லை என வாக்களித்தும், ஆங்கி லேயரின் பகைவர்களைத் தமது உத்யோகத்தில் அமர்த்துவதில்லை என்று உடன்பட்டும் சமாதானம் செய்துகொண்டார்.

சீக்கிரத்திலேயே கெய்க்வாரும் வெல்லெஸ்லியின் ஏற்பாட்டை ஒப்புக்கொண்டு ஆங்கிலேய அதிகாரத்திற்கு அடங்கி அமைதியாய் இருந்துவிட்டார். மஹாராஷ்டிரர்களில், ஸிந்தியாவும், பான்ஸ்லவும், ஹோல்காரும் வெல்லெஸ்லியின் ஏற்பாட்டை ஒத்துக்கொள்ளுவதில் கொஞ்சமும் மனமில்லாதவர்களாக இருந்தார்கள். அவர்களுக்குச் சுதேச அரசர்களின் உரிமைகளைக் குறைத்து அவர்களைத் தமது அதிகாரத்திற்குள் அடக்கிக் கொண்டுவந்த வெல்லெஸ்லியின்மீது கோபம் மூண்டது. அதனல், அவர்கள் ஆங்கிலேயரோடு சண்டை செய்யத் தயாரானர்கள். அதுவே இரண்டாவது மஹாராஷ்டிர யுத்தத்தின் காரணமாகும்.

கவர்னர்-ஜெனரலுக்கு ஜெனரல் வேல்லேஸ்லி என்ற ஒரு சகோதரர் இருந்தார். இவர் மிகுந்த பராக்கிரமமுடையவர். இவர் பிற்காலத்தில் வெல்லிங்க்டன் பிரபு (ட்யூக் அவ் வெல்லிங்டன்) ஆக்கப்பட்டு மிகுந்த கியாதியுடன் விளங்கினர். இவர் ஜெனரல் லேக் என்பவரைத் துணைசேர்த்துக்கொண்டு, கி. பி. 1803-ல் ஸிந்தியாவை யும் பான்ஸ்லவையும் அஸ்ஸே என்னுமிடத்தில் சண்டையிட்டு வெற்றிகொண்டார். பின்னர், இவ்விரு ஆங்கிலேயப் போர்வீரரும் ஆர்காம் என்னுமிடத்தில் பான்ஸ்லவையும், லாஸ்வாரியில் ஸிந்தியா

வையும் தோற்கடித்து, டில்லியையும் ஆக்ராவையும் பிடித்துக் கொண்டுவிட்டார்கள். அந்த இரண்டு மஹாராஷ்டிரத் தலைவர்களும் வேறுகதியின்றி, பான்ஸ்ல தேவகாம் என்னும் ஊரிலும், ஸிந்தியா சுர்ஜி அர்ஜுன்காம் என்னும் இடத்திலும் வெல்லெஸ்லியின் புதிய ஏற்பாட்டை ஒப்புக்கொண்டு ஆங்கிலேய ஆதிக்யத்திற்கு அடங்கிவிட்டார்கள். பான்ஸ்ல தமது துணைப்படையின் செலவிற்காக ஓரிஸ்ஸாவையும் ஆக்ராவையும், ஸிந்தியா தமது துணைப்படையின் பாதுகாப்புக்காகக் கங்கைக்கும் யமுனைக்கும் இடையிலுள்ள நாட்டையும் கொடுத்துவிட்டார்கள். இவ்வாறாக, இரண்டாவது மஹாராஷ்டிர யுத்தம் முடிவுபெற்றது.

மஹாராஷ்டிரத் தலைவர்களுள் ஆங்கிலேய மேலதிகாரத்தை இன்னமும் ஒப்புக்கொள்ளாதிருந்தவர் யஸ்வந்தராவ் ஹோல்கார் ஒருவரே. கி. பி. 1804-ல், அவரை எதிர்த்துச்சென்ற ஆங்கிலேய போர்ப்படை தோல்வியை அடைந்து ஆக்ராவை நோக்கி ஓடிவிட்டது. ஆனால், ஜெனரல் லேக் ஹோல்காரைப் பருகபாத், டிக் என்னுமிடங்களில் தோற்க அடித்துவிட்டதனால், ஹோல்கார் பஞ்சாபை நோக்கி ஓடிப்போய்விட்டார். இந்தச் சண்டையில் பரதபுரத்தரசர் ஹோல்காருக்குத் துணைவந்ததனால், லேக் பரதபுரக் கோட்டையை முற்றுகைசெய்தார். அதை அவர் பிடித்துக்கொள்ள முடியவில்லை. எனினும், பரதபுரத்து அரசர் ஆங்கிலேயருக்கு 20 லக்ஷம் ரூபாயைக்கொடுத்து அவர்களோடு சமாதானஞ் செய்து கொண்டார். இதனோடு மூன்றாவது மஹாராஷ்டிர யுத்தம் முடிவாயிற்று.

வெல்லெஸ்லியின் பரிபாலனத்தில் கம்பனியார் பணவரட்சியினாலும், நாட்டுக்குடிகள் சண்டைகளினாலும் துன்பத்தை அடைந்தார்கள். அதனால், ஆங்கிலேய மேலதிகாரிகள் வெல்லெஸ்லியை இங்கிலாந்துக்குத் திரும்பிவந்து விடும்படி ஆஜ்ஞாபித்தார்கள். அவருக்குப் பின்பு இரண்டாவது முறை இந்திய கவர்னர்-ஜெனரலாக வந்த லார்ட் காரன்வாலிஸ் இரண்டு மாதங்களுக்குள் இறந்துபோய் விட்டார். அதனால், லார்ட் மின்டோ வரும்வரையில் மந்திராலோசனைச் சபை மெம்பரான ஸர் ஜார்ஜ் பார்லோ கவர்னர்-ஜெனரலாக வேலை பார்த்துவந்தார். சுதேச வியவகாரங்களில் தலையிட்டுக்

கொள்ள விரும்பாத அவர் யமுனை நதிக்கப்பாலுள்ள நாடுகளை ஸிந்தியாவுக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டார். அவர் அவ்வாறே



ஹோல்காருக்கும் அவருடைய நாட்டையும், அதிகாரத்தையும் முன்னிருந்த வண்ணமே கொடுத்துவிட்டார். இவற்றைக் கண்டு

வெகுண்ட லேக், தமது வேலையை நீத்து இங்கிலாந்துக்குச் சென்று விட்டார். பார்லோவின் பரிபாலனத்தில் சண்டைச் சச்சரவுகள் இல்லாமையினால் நாடு அமைதியாக இருந்தது. செலவுகள் மட்டுப் பட்டுப் பொக்கிஷத்தில் பணம் நிறைந்து வரலாயிற்று.

அப்பொழுது, வேலூரில் சிப்பாய்களுக்குள் ஒரு கலகம் மூண்டது. துரைத்தன அதிகாரிகள் சிப்பாய்கள் நெற்றியில் தத்தம் மதச் சின்னங்களைத் தரித்துக்கொள்ளலாகாது என்றும், அவர்கள் தங்கள் மீசைகளைக் கத்தரித்துக் கொள்ளவேண்டும் என்றும், எல்லோரும் தங்கள் தலைப்பாகைகளை ஒரேவிதமாகக் கட்டிக்கொள்ள வேண்டும் என்றும் நிபந்தனைகளைச் செய்தார்கள். அதனால், சிப்பாய்கள் கலகம் செய்தார்கள். ஆனால், அதை மேலதிகாரிகள் சீக்கிரத்திலேயே அடக்கியும், அக்கலகத்திற்குத் திப்புவின் பிள்ளைகள் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகித்து அவர்களைக் கல்கத்தாவிற்கு அனுப்பியும், அமைதியை உண்டாக்கி, மதராஸ் கவர்னரான வில்லியம் பென்டிங்கை இங்கிலாந்துக்குத் திருப்பி அழைத்துக்கொண்டுவிட்டார்கள்.

பயிற்சிகள்

1. இரண்டாவது மஹாராஷ்டிர யுத்தத்துக்குக் காரணம் என்ன ?
2. அதில் நடந்த சண்டைகள் யாவை ? அவற்றின் முடிவு என்ன ?
3. பருகபாத், டிக் சண்டைகள் எப்போது நடந்தன ? யார்யாருக்கு?
4. வேலூரில் சிப்பாய்கள் கலகம் செய்வானேன் ? அதில் வேலையை யிழந்தது யார் ?

31. லார்ட் மின்டோவும் ரஞ்சித் ஸிங்கும்

லார்ட் மின்டோ என்ற ஸ்காட் பிரபு இந்திய கவர்னர்-ஜெனரலாக நியமிக்கப்பட்டு, கி. பி. 1807-ல், இந்தியாவுக்கு வந்து கி. பி. 1813-வரை இந்திய பரிபாலனத்தை நடத்தினார். இவர் போர்ட் அவ் கன்ட்ரோல் என்ற சபைக்கு அக்கிராஸனராக விருந்ததனால், இந்தியாவைப் பற்றின அனுபவமுடையவராவார். இவர் மனமின்றித் தம் வேலையை ஒப்புக்கொண்டார். இவர் தலையிடாக் கொள்கையைக் கைக்கொண்டிருந்தும், தம்மிஷ்டப்படி நடக்க இயலாமற்போயிற்று. அப்போது நாகபுரியின்மீது அமீர்கான் என்ற ஆப்கானியன் படையெடுத்துவந்து தீமைகள் செய்தான்.

அவனைத் துரத்தியடிப்பதில் மின்டோ பான்ஸ்லவுக்கு உதவினர். பீஷ்வாவின் நாட்டில் கலகம் மூண்டபோது அதை அடக்குவதிலும் மின்டோ உதவி புரிந்தார்.

இவர் காலத்தில் ரஞ்சித் ஸிங் பஞ்சாபில் மிகுந்த ஆதிக்யத்தை யடைந்திருந்தார். இவர் கி. பி. 1780-ல் பிறந்தவர். தமது பனிரண்டாம் வயதிலேயே இவர் ஸீக்கர் ஸர்தார் ஆனர். ஸீக்கர்களுக்குள் பல பிரிவுகள் உண்டாகி, ஒவ்வொன்றும் ஒரு ஸர்தார் என்ற தலைவரின் ஆணையிலடங்கி யிருந்தது. இவர்கள் பஞ்சாபின் பற்பல பாகங்களைக் கைப்பற்றிக்கொண்டு அதிகாரஞ் செலுத்தி வந்தனர். இவர்கள் ஒற்றுமையை நீத்துத் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டு வந்தார்கள். ரஞ்சித் ஸிங் இவர்களை யெல்லாம் அடக்கி ஒன்றுக்கி ஒரு பெரிய ராஜ்யத்தை உண்டாக்கினர். இவர் பஞ்சாபுக்கு அரசரானபோது இவருக்கு வயது 20. இவர் முதலில் ஆப்கானியருடைய அதிகாரத்திலடங்கி லாகூருக்குக் கவர்னராக விருந்தார். பின்னர் ஆப்கானியரைத் துரத்திவிட்டுப் பஞ்சாப் முழுவதற்கும் அரசர் ஆனர். இவர் காஷ்மீரத்தை வென்று தமது அதிகாரத்திலடக்கிக்கொண்டார்.

ரஞ்சித் ஆங்கிலேயரோடு நட்புப் பாராட்டி நடந்துவந்தார். முதலில் இவருடைய பஞ்சாப் ராஜ்யத்துக்கு ஸட்லிஜ நதி கிழக்கெல்லையாக விருந்தது. கி. பி. 1807-ல் இவர் ஸட்லிஜ நதியைக் கடந்துவந்து லூடியாணவைக் கைப்பற்றிக்கொண்டார். பின்னர் 1823-ல் ஆப்கானியரிடமிருந்து பெஷாவரையும் வென்றுகொண்டார். இவர் வென்றுகொண்ட பிரதேசத்தில் பாடியாலா, ஜிண்ட், நபா முதலிய ஸீக்கர் ராஜ்யங்கள் இருந்தன. ரஞ்சித் ஸிங்கின் ஆதிக்யப் பெருக்கைக் கண்டஞ்சிய அந்நாட்டரசர்கள் அவரிடமிருந்தும் தங்களைக் காக்குமாறு ஆங்கிலேயரை வேண்டிக்கொண்டனர்.

மின்டோ மேட்காஃப் என்பவரை ரஞ்சித் ஸிங்கிடம் தூதனுப்பினர். மெட்காஃப் வெகு கெட்டிக்காரர். ரஞ்சித் ஸிங் ஸட்லிஜ நதியைத் தமது ராஜ்யத்தின் கிழக்கு எல்லையாக ஒப்புக்கொள்ளும்படி மெட்காஃப் ஏற்பாடு செய்துவிடவும், ஆங்கிலேயருக்கு யமுனைக்கும் ஸட்லிஜுக்கும் இடையிலுள்ள பிரதேசம் கிடைத்தது. கி. பி. 1839-ல் அவர் இறந்துபோனர். அதுவரையில் அவர் தாம்

செய்துகொண்ட உடன்படிக்கைப்படி ஆங்கிலேயருடைய நண்பராகவே இருந்துவந்தார்.

பாரஸிகத்திலும் ஆப்கானிஸ்தானத்திலும் பிரெஞ்சுக்காரருக்குச் சலுகை உண்டாகாமலிருக்கக் கருதி இவர் ஸர் ஜான் மால்கம் என்பவரைப் பாரஸிகத்துக்கும், மௌன்ட் ஸ்டுவேர்ட் எல்பின்ஸ்டன் என்பவரை ஆப்கானிஸ்தானத்துக்கும் தூதனுப்பினர். அப்போது ஆங்கிலேயருக்குப் பிரெஞ்சுக்காரரோடு யுத்தம் நேர்ந்ததனுல் மின்டோ கி. பி. 1810-ல் இந்திய போர்ப்படைகளை யனுப்பிப் போர்போனையும், மொரிஷஸையும் கைப்பற்றிக்கொண்டு, ஜாவாவையும் மொலுக்கஸையும் வென்றுர். இவை யாவும் பின்னர்ப் பிரெஞ்சுக்காரருக்குத் திருப்பிக் கொடுத்து விடப்பட்டன.

மின்டோ பரிபாலனத்தில் கி. பி. 1813-ல் கம்பனியின் சாஸனம் இன்னுமொருமுறை புதுப்பிக்கப்பட்டது. அப்போது கம்பனிக்கிருந்த வியாபார சுதந்திரம் போய் அது அரசியலை நடத்தும் தொழிலையே மேற்கொண்டது. அப்போது இந்தியாவில் துரைத்தன அங்கீகாரம்பெற்ற கிறிஸ்தவக் கோயில் அமைக்கப்பட்டது. இந்தியக் கல்வியின்பொருட்டு லக்ஷம் ரூபாய் செலவு செய்வதற்கு அச்சாஸனம் இடம் தந்தது. அன்றியும், அது இப்போது ஸிவில், கிரிமினல் என்ற இருவகைப்பட்ட நீதிஸ்தலங்களிலும் சீர்திருத்தங்கள் செய்வதற்கும், மாகாண துரைத்தனங்கள் வரிகள் விதிப்பதற்கும் கூடுமான ஏற்பாட்டை அமைத்துத் தந்தது.

பயிற்சிகள்

1. மின்டோ தமது தலையிடாக்கொள்கையை மீறிச் செய்த இரண்டு காரியங்கள் யாவை?

2. மெட்கால்ப் ஏன் வந்துளார்?

3. ஸர் ஜான் மால்கம், மௌன்ட் ஸ்டுவேர்ட் எல்பின்ஸ்டன்—இவர்கள் யார்? ஏன் வந்துள்ளனர்?

4. ஆங்கிலேயருக்கு யமுனைக்கும் ஸட்லிஜூக்கும் இடையிலுள்ள நாடு எப்படிக் கிடைத்தது?

5. 1813-ல் கம்பனியின் சாஸனம் புதுப்பிக்கப்பட்டபொழுது என்னென்ன மாறுதல்கள் உண்டாயின?

32. லார்ட் ஹேஸ்டிங்ஸ்
(கி. பி. 1813—கி. பி. 1822)

மின்டோவுக்குப் பின்பு கவர்னர்-ஜெனரலாக வந்த லார்ட் ஹேஸ்டிங்ஸ் சுதேச வியவகாரங்களில் தலையிட்டுக்கொண்டு ஆங்கிலேய ராஜ்யத்தையும், அதிகாரத்தையும் பெருக்கிக்கொண்டார்.

i. நான்காவது மஹாராஷ்டிர யுத்தம் (கி. பி. 1817—கி. பி. 1818)

பாஜீராவ் II, பாஸின் உடன்படிக்கையையும், ஆங்கிலேய மேலதிகாரத்தையும் நிராகரித்துவிட்டுச் சுயாதீனத்தைப் பெற்றுக் கொள்ளத் தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தார். ஆங்கிலேயர்கள் கூர்க்கர்களோடும், பிண்டாரிகளோடும் சண்டைகள் செய்துவருகையில், அவர் திடீரென்று ஆங்கிலேய ஸ்தானிகரையும், அவருடைய சேனையையும் கர்க்கி என்னுமிடத்தில் எதிர்த்துத் தோல்வியை அடைந்து, புனாவிலிருந்தும் ஜோதிபுரத்திற்கு ஓடிப்போய்விட்டார். நாகபுரி அரசரான அப்பா சாஹிபும் சீதாபல்டியில் தோல்வியை அடைந்து, தமது நாட்டைவிட்டு ஓடிப்போய்விட்டார். ஹோல்காருடைய போர்வீரர்கள், தங்கள் இராணியான துளசிபாய் ஆங்கிலேயரோடு சமாதானம் செய்துகொள்ள விரும்பியதாக எண்ணி, அவளைக்கொன்றுவிட்டு, ஆங்கிலேயரை எதிர்த்துச் சென்றார்கள். ஆனால், ஆங்கிலேயர்கள் அவர்களை அடியோடு தோற்க அடித்துவிட்டார்கள். அதனால், அந்த மூன்று மஹாராஷ்டிரத் தலைவர்களும் திரும்பவும் ஆங்கிலேயரோடு சமாதானஞ் செய்து கொண்டார்கள். பீஷ்வா தமது நாடு முழுவதையும் இழந்து, வருஷத்திற்கு எட்டு லக்ஷம் ரூபாய் உபகாரச் சம்பளம் பெற்றுப் பித்தூருக்குச் சென்றுவிட்டார். பீஷ்வாவின் நாடு பம்பாய் மாகாணத்தின் பெரும்பாகம் ஆயிற்று. ஆனால், சதாராவைச் சார்ந்த ஒரு சிறிய நாட்டைமட்டில் சிவாஜியின் வம்சத்தைச் சேர்ந்த ஒருவர் ஆட்சி செய்துவருமாறு ஏற்பாடு செய்யப்பட்டது. அவ்வாறே நாகபுரியிலும், இந்தூரிலும் இரண்டு சிறுவர்கள் அரசர்களாக நியமிக்கப்பட்டார்கள். ஆனால், அவர்களுடைய நாடுகளின் பெரும்பாகங்கள் பம்பாய் மாகாணத்தில் சேர்த்துக்கொண்டு விடப்பட்டன. அப்பொழுது சில ராஜபுத்திரச் சிற்றரசர்களும் ஆங்கிலேய

அதிகாரத்திற்கு உட்பட்டு அமைதியாக இருந்துவர உடன் பட்டார்கள்.



ii. நேபாள யுத்தம் (கி. பி. 1814—கி. பி. 1816)

வெகு காலமாக நேபாளத்தில் கூர்க்கர்கள் என்ற ஒரு ஜாதியார் வசித்து வந்தார்கள். அவர்கள் புஜபலம் பொருந்திய வீரர்கள்.

அவர்கள் சண்டையில் கைதேர்ந்தவர்கள். அவர்கள் தங்களுடைய ராஜ்யத்தைப் பெருக்க எண்ணிக் கங்காநதிதீரம் வரையில் வந்து ஆங்கிலேயருக்குச் சொந்தமான சில இடங்களைப் பிடித்துக்கொண்டார்கள். ஹேஸ்டிங்ஸ் அவர்களை எதிர்த்துச் சண்டை செய்வதற்காக நான்கு போர்ப்படைகளை நான்கு தலைவர்களின்கீழ் வெவ்வேறு வழியாக அனுப்பினர். அவற்றுள் ஜெனரல் ஆக்டர்லோனியின் சேனை மாலூன் கோட்டையைப் பிடித்துக்கொண்டு, அமர ஸிங் என்னும் நேபாள தளகர்த்தனையும் வென்றது. பிறகு மெக்வான்புரியில் நடந்த சண்டையில் கூர்க்கர்கள் தோற்றுப் போனதால், ஆக்டர்லோனி நேபாள ராஜ்யத்தின் தலைநகரமான காட்மாண்டுவைக் கைப்பற்றிக்கொண்டார். உடனே கி. பி. 1816-ல் நேபாள அரசர் சிகௌலி என்னுமிடத்தில் ஆங்கிலேயரோடு சமாதானஞ் செய்துகொண்டுவிட்டார். அவர் தாம் ஆங்கிலேயரிடமிருந்து பிடித்துக்கொண்ட நாடுகளையும், காளி என்னும் நதிக்கு மேற்கிலுள்ள தமது நாட்டின் பாகத்தையும் அவர்களுக்குக் கொடுத்துவிடவும், தமது தலைநகரில் ஓர் ஆங்கிலேய ஸ்தானிகரை ஏற்றுக்கொள்ளவும் ஒப்புக்கொண்டார். அதனால், ஆங்கிலேயருக்கு ஸிம்லா, நைனிடால், முஸௌரி என்னும் ஸ்தலங்கள் கிடைத்தன.

லார்ட் ஹேஸ்டிங்ஸ்

iii. பிண்டாரி யுத்தம் (கி. பி. 1817)

ராணுவ உத்யோகங்களிலிருந்து தள்ளுண்டவர்களும், துன்மார்க்கர்களும், கொலை களவு முதலிய குற்றங்களைச் செய்துவிட்டு ஓடிப்போய் விட்டவர்களும், சட்டங்களை மீறி நடந்து நாட்டைவிட்

டோடிப்போனவர்களும் மத்திய இந்தியாவில் ஒன்ருகச் சேர்ந்து கொண்டார்கள். அவர்களுக்குப் பிண்டாரிகள் என்று பெயர். அவர்கள் தங்கள் கூட்டத்திற்குச் சில தலைவர்களை ஏற்படுத்திக் கொண்டும், ஊர் ஊராகச் சென்று ஜனங்களைக்கொன்று அவர்களது பொருள்களைக் கொள்ளையடித்தும், நாட்டிற்கு இன்னும் பற்பல தீமைகளைச் செய்தும் வந்தார்கள். ஹேஸ்டிங்ஸ் அவர்களைச் சண்டையிட்டு அடியோடு தொலைத்துவிட்டார்.

iv. சீர்திருத்தங்கள்

ஹேஸ்டிங்ஸ் சிங்கப்பூரை ஒரு சிறந்த துறைமுகமாக்கினுர். அவர்காலத்தில் துரைத்தனத்தாரும், கிறிஸ்தவப் பாதிரிகளும் ஆங்கிலம் கற்பதற்கான பள்ளிக்கூடங்களை அமைத்தார்கள். அப்பொழுது தான் கல்கத்தா ஹிந்து காலேஜ் ஏற்பட்டது. அப்பொழுது சமாசாரப் பத்திரிகைகள் தேசபாஷையில் முதன்முதல் பிரசுரிக்கப்பட்டன. அப்போது கி. பி. 1818-ல் கல்கத்தா வர்த்தமானம் என்ற பத்திரிகை தோன்றியது. அதன் ஆசிரியரான பக்கிங்ஹாம் பெரிய பெரிய துரைத்தன உத்யோகஸ்தர்களைக்கூடப் பரிகசித்து எழுதிவாலானுர். ஹேஸ்டிங்ஸ் ஸிவில் கோர்ட்டுக்களை அதிகப்படுத்தியும், இந்தியர்களை நீதிபதிகளாக நியமித்தும் ஏற்பாடுகள் செய்தார். அவர் மதராஸில் இறந்துபட்ட பஞ்சாயத்தை உயிர்ப்பித்து, அவை நியாய விசாரணை செய்யுமாறு ஏற்படுத்தினுர். அவருடைய காலந் தொடங்கி ஜில்லா கலெக்டர்கள் ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுகளும் ஆனுர்கள். அவர் காலத்தில் செப்பனிடப்பட்ட பாதைகளும், கால்வாய்களும் உண்டாயின. கி. பி. 1823-ல் அவர் வேலையை நீத்து இங்கிலாந்துக்குச் சென்றுவிட்டார்.

பயிற்சிகள்

1. நான்காவது மஹாராஷ்டிர யுத்தத்திற்குக் காரணம் என்ன?
2. அந்த யுத்தத்தின் முடிவில் ஆங்கிலேயருக்குக் கிடைத்த நாடுகள் யாவை?
3. ஸிம்லாவும், நைனிடாலும் ஆங்கிலேயருக்கு எப்போது, எவ்வாறு கிடைத்தன?
4. பிண்டாரிகள் யார்?
5. ஹேஸ்டிங்ஸ் செய்த சீர்திருத்தங்கள் யாவை?

LONGMANS' HISTORY OF INDIA, BOOK II.

BY

Tamil Edition] *M. K. Sundara Varadachariar* [*Price As. 8*

LONGMANS, GREEN & CO., LTD.